செந்தமிழ் இலக்கணமும் கட்டுரையும்

இரண்டாம் புத்தகம்

ச. ஆறுமுக முதலியார்

9711

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை-1

செந்தமிழ்

இலக்கணமும் கட்டுரையும்

இரண்டாம் அமைப்பு

(FORM II)

புலவர் ச. ஆறுமுக முதலியார்,
எம்.ஏ., எல்.டி., பி.ஓ.எல்.,
தமிழ்ப் பேராசிரியர்,
ஆசிரியர் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை–1

காபிரைட்] 1955 [விலை அணா 14

முதற் பதிப்பு—1949
நான்காம் பதிப்பு—1955

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Fort St. George Gazette dated 19-5-1954
Supplement to Part I-B, Page 78]

Kabeer Printing Works, Madras (2887)

முன்னுரை

இலக்கணம், மொழிப்படிப்பிற்குக் கண் போன்றது. "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு' என்பர் வள்ளுவனார். "எழுத்தறியத் தீரும் இழிதகைமை, தீர்ந்தான் மொழித் திறத்தின் முட்டறுப்பா னாகும்" என்றும் சொல்லப்படுகிறது. இலக்கணம் மொழியைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் உதவும் கருவியாகும். இலக்கண விதிகளை, இலக்கணப் பாடத்தில்மட்டும் தனிப்படக் கற்பித்து, நிறுத்திவிடாமல் மொழிப் பாடத்தோடும், கட்டுரையோடும் பொருத்திக் கற்பித்தால், விதிகளும், அவற்றின் ஆட்சியும் மாணவர்களுக்கு நன்றாய் விளங்கி, நடைமுறையிற் பயன்படும். மொழியின் அமைப்பை இது நமக்கு நன்றாய் விளக்கிக் காட்டுகிறது; வழக்காற்றில் காணப்படும் மொழிப் போக்கை நமக்குத் தெற்றென எடுத்துக் காட்டும். மாணவரும், ஆசிரியரும், தத்தம் எழுத்தும் பேச்சும் செம்மையா யிருக்கின்றனவா என்பதைத் தாங்களே உணர்ந்துகொள்ளுவதற்கு ஏற்ற கட்டளைக் கல்லாக இது இருப்பதோடு, அவர்கள் தம் எழுத்திலும் பேச்சிலும் நிகழும் பிழைகளைத் திருத்திக்கொள்வதற்கும் இது உதவும். இன்னும், செய்யுட்களைப் பிரித்துப் பொருள் காண்டலுக்கும், சிலேடைப் பொருள் கண்டு மகிழ்வதற்கும், செய்யுட்கள் இயற்றலுக்கும், செய்யுட்களில் வரும் அணிகள் இலக்கண அமைதிகள் அரிய சொல்லாட்சிகளை அறியவும், இலக்கண அறிவு இன்றியமையாதது.

இத்தகைய நோக்கங்களும் பயன்களும் கருதியே, இலக்கணம் பள்ளிக்கூடங்களில் நடத்தப்பெறுகிறது. இப்பயன்கள் கைவரப்பெறும் முறையிலேயே செந்தமிழ் இலக்கணமும் கட்டுரையும் என்னும் பாடநூல் வரி

[illegible]யை எழுத முயன்றுள்ளேன். "தெரிந்ததிலிருந்து தெரியாததற்குப் போதல்", "எடுத்துக்காட்டுகளி லிருந்து (சிறப்பிலிருந்து) பொதுவிதிக்குப் போதல்", "எளிதிலிருந்து அரிதிற்குப் போதல்" போன்ற கற்பிக் கும் முறைகளைப் பின்பற்றி, மாணவர்கள் அறிந்த எடுத் துக் காட்டுகளிலிருந்து விதியை மாணவர்களே கண்டு வருவித்துக்கொள்ளும் முறை (Inductive method) யையே பெரும்பாலும் இவற்றுள் மேற்கொண்டுள்ளேன். இம்முறையை நன்கு வற்புறுத்த, எடுத்துக்காட்டுகளை மிகுதியாகவும், மாணவர் தம் வாழ்க்கையில் குறுக்கிட்டு, அவர்கள் பற்று வைக்கக்கூடிய பொருள்களினின்றுமே பெரும்பாலும் பொறுக்கி எடுத்தும் அமைத்துள்ளேன். பயிற்சிகளும் மிகுதியாகத் தரப்பட்டுள்ளன. கல்வித் துறையாளர் அண்மையில் வெளியிட்டுள்ள புது இலக் கண, கட்டுரைப் பாடத் திட்டங்களையும், அவற்றின் நோக்கத்தையும் அடியொற்றியே இவை எழுதப்பட்டுள் ளன. இரண்டாம் பாகமாகிய கட்டுரையில், குறித்த காலத்தில், குறித்த பொருளைக் குறித்த அளவில் எழுது வதற்கான பழக்கத்தைத் தருவதற்கெனப் பாடத்திட்டப் படியே பயிற்சி வகைகள் ஏராளமாய்த் தரப்பட்டிருக்கின் றன. மாதிரிக் கட்டுரைகளும் தரப்பட்டிருக்கின்றன.

தமிழாசிரியர்களும், மாணவர்களும், பள்ளிக்கூடங் களை நடத்துபவர்களும் இந்நூல்களை விரும்பி ஏற்றுக் கொள்வார்கள் என்னும் நம்பிக்கையும், மன உறுதியும் எனக்குண்டு. நன்முறையில் இவற்றை வெளியிட முன் வந்த "நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி" உரிமையாளர்க் கும், இதை நன்ருக அச்சிட்டுத் தந்த "கபீர்" அச்சக உரிமையாளர்க்கும் என் உளமார்ந்த நன்றி உரியதாகுக.

ஆசிரியர் கல்லூரி,
சைதாப்பேட்டை

ச. ஆறுமுக முதலியார்

பொருளடக்கம்

எண் பக்கம்

முதற்பாகம் : இலக்கணம்

I. எழுத்து—

1. சுட்டு : அகச்சுட்டு, புறச்சுட்டு ... 1
2. வினா : அகவினா, புறவினா ... 3
3. குற்றியலுகரம்—வகை ... 5
4. முற்றியலுகரம் ... 9
5. குற்றியலிகரம் ... 9
6. மாத்திரை ... 10

II. சொல்—

A. பெயர்ச் சொல்

1. இடுகுறிப் பெயர் ... 14
2. காரணப் பெயர் ... 14
3. சுட்டுப் பெயர் ... 15
4. வினாப் பெயர் ... 16
5. பொதுப் பெயர் ... 17
6. ஆகு பெயர் ... 18
7. வினையாலணையும் பெயர் ... 21
8. திணை ... 23
9. பால் : ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர்கள்—மாறும் வகைகள் ... 24
10. இடம் : தன்மை முன்னிலைகள் கலந்து வருவதால், மூவிடப் பெயர்களும் கலந்து வருதல் ... 29
11. வேற்றுமை ... 31

எண் பக்கம்

B. வினைச் சொல்

1. உடன்பாட்டு வினைமுற்று, எதிர்மறை வினைமுற்று ... 38
2. செய்வினை—செயப்பாட்டு வினை ... 39
3. தன்வினை, பிறவினை ... 41
4. எச்சம் ... 44
5. உடன்பாட்டு வினையெச்சம், எதிர் மறை வினையெச்சம் ... 45
6. உடன்பாட்டுப் பெயரெச்சம், எதிர் மறைப் பெயரெச்சம் ... 46

III. வாக்கியம்—

1. எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் கண்டுபிடித்தல் ... 48
2. சொல்லிலக்கணம் ... 52

IV. புணர்ச்சி—

1. உயிரீற்றுச் சொற்களுக்கு முன் வல்லினம் மிகுதல் ... 54
2. அகர, இகர ஈற்று வினையெச்சங் களின் முன்னும், யகர ஈற்று வினை யெச்சத்திற்கு முன்னும் வல்லினம் மிகுதல் ... 55
3. குற்றியலுகரப் புணர்ச்சி ... 56
4. முற்றியலுகரப் புணர்ச்சி ... 58
5. உடம்படுமெய் ... 59
6. "ண்", "ன்", "ல்", "ள்", முன் தகரம் திரிதல் ... 61

V. அணி—

உவமை, உருவகம் ... 62

எண் பக்கம்

மொழிப் பயிற்சி

I. வாக்கிய வகை—
1. செய்தி வாக்கியம் ... 66
2. கட்டளை வாக்கியம் ... 67
3. வினா வாக்கியம் ... 67
4. உணர்ச்சி வாக்கியங்கள் ... 68

II. வாக்கிய மாற்றம்—
1. செய்தி—வினா வாக்கியங்கள் ... 69
2. உடன்பாடு—எதிர்மறை வாக்கியங்கள் ... 70
3. தனிவாக்கியம்—தொடர்வாக்கியம் ... 71
4. நீண்ட வாக்கியங்களைச் சிறு வாக்கியங்கள் ஆக்குதல் ... 72

III. வழூஉச் சொற்களும் திருத்தமும் ... 74
IV. சொற்பொருத்தம் ... 76
V. வாக்கியப் பிழைகளும் திருத்தமும் ... 77

VI. நிறுத்தக் குறிகள்—
1. முற்றுப்புள்ளி (.) ... 79
2. அரைப்புள்ளி (;) ... 80
3. காற்புள்ளி (,) ... 81
4. முக்காற்புள்ளி (:) ... 83
5. இரட்டை ஒற்றை மேற்கோள் குறிகள் (' ') (" ") ... 83

VII. 1. வல்லெழுத்து மிகும் இடங்கள் ... 85
2. வல்லெழுத்து மிகா இடங்கள் ... 87

இரண்டாம் பாகம் : கட்டுரை

I. முதல் அமைப்புக் கட்டுரைப் பகுதியைத் திருப்புதல் ... 89
II. போட்டிப் பேச்சு : குறிப்புகளும் விரிவும் ... 92
III. பழமொழிகளை விளக்குதல் ... 97

எண் பக்கம்

IV. விளக்கக் கட்டுரை ... 100

V. கடிதங்கள்—

1. கூட்டத்திற்குத் தலைமை தாங்க வேண்டுதல் ... 104

2. முதியோர் கல்வி நிலையத்தைத் திறந்துவைக்க வேண்டுகோள் ... 105

3. குறித்தபடி வராமைக்கு வருத்தம் தெரிவித்தல் ... 106

4. மண்டபம் பயன்படுத்த இசைவு வேண்டுதல் ... 107

5. சேரித் தொண்டு ... 108

6. பொதுக்கூட்ட அழைப்பிதழ் ... 109

7. பொதுக்கூட்டம் தள்ளிவைக்கும் அறிவிப்பு ... 110

VI. ஒரு நிகழ்ச்சியில் தொடர்புடைய பலர் அதுபற்றிக் கூறும் விவரங்கள் ... 112

VII. 1. படித்த செய்திகளைப்பற்றிக் குறிப்புகள் தயாரித்தலும், அவற்றைக் கொண்டு செய்திகளைத் திரும்பக் கூறுதலும் ... 115

2. கேட்ட செய்திகளைப்பற்றிக் குறிப்புகள் தயாரித்தலும், அவற்றைக் கொண்டு செய்திகளைத் திரும்பக் கூறுதலும் ... 118

இரண்டாம் அமைப்பு
(FORM II)

முதற்பாகம் : இலக்கணம்

I. எழுத்து

1. சுட்டு : அகச்சுட்டு, புறச்சுட்டு

உயிரெழுத்துகளுள் '**அ, இ, உ**' என்பன சில சமயங்களில் சுட்டுப்பொருளில் வரும் என்றும், அவ்வாறு வரும்பொழுது அவை **சுட்டெழுத்துக்கள்** எனப்பெயர் பெறும் என்றும் முன் வகுப்பில் படித்தீர்கள். கீழ்க்காணும் இருவகைப் பட்ட சுட்டுகளை ஆராய்ந்து பாருங்கள் :—

(1)	(2)
அவர்	**அ**க்குதிரை
அவை	அப்பெயர்
இவள்	இம்மகள்
இது	இச்செயல்
உவன்	உப்பக்கம்
உவர்	உப்பொருள்

மேலே காட்டப்பட்டுள்ள சுட்டுப் பெயர்களில் அமைந்துள்ள சுட்டெழுத்துக்களை அறிந்துகொள்

ளுங்கள். 'அவர்' என்ற சுட்டுப் பெயரில் உள்ள 'அ' என்ற சுட்டெழுத்தை நீக்கிவிடுங்கள். பொருள் இருக்கிறதா? இல்லை. 'அக்குதிரை' என்பதில் உள்ள 'அ' என்ற சுட்டெழுத்தை அகற்றிவிடுங்கள். எஞ்சி இருப்பது என்ன? 'குதிரை' என்ற சொல் அல்லவா? சுட்டெழுத்தைப் பிரித்துவிட்டாலும் எஞ்சியிருப்பது ஒரு சொல்லாக இருந்து ஒரு பொருளைத் தருகின்றது. 'அவர்' என்பதில் சுட்டெழுத்துச் சொல்லினுள்ளே அல்லது **அகத்தே** அமைந்துள்ளது. ஆகவே 'அவர்' என்பதில் உள்ள சுட்டு **அகச் சுட்டு** என்று பெயர் பெறும். 'அக்குதிரை' என்பதில் சுட்டெழுத்து சொல்லுக்குப் **புறத்தே** (வெளியே) நிற்கின்றது. ஆகவே 'அக்குதிரை' என்பதில் உள்ள சுட்டு, **புறச்சுட்டு** என்று பெயர் பெறும். முதல் வகையில் உள்ள சுட்டுப் பெயர்களில் உள்ள சுட்டுகள் எல்லாம் **அகச்சுட்டுக்கள்**. இரண்டாவது வகையில் உள்ள சுட்டுகள் எல்லாம் **புறச்சுட்டுக்கள்**.

அகச்சுட்டு : சுட்டுப் பெயரின் அகத்தே (உள்ளே) சுட்டெழுத்து நிற்கும். சுட்டைப் பிரித்துவிட்டால் எஞ்சிய எழுத்துகளின் தொடர்ச்சி ஒரு பொருளைத் தராது.

புறச்சுட்டு : ஒரு சொல்லின் புறத்தே (வெளியே), முதலில் சுட்டெழுத்து நிற்கும். அஃதாவது சுட்டெழுத்தைத் தொடர்ந்து ஒரு சொல் வரும். சுட்டெழுத்தைப் பிரித்தாலும் எஞ்சிய சொல் ஒரு பொருளைத் தரும்.

2. வினா : அகவினா, புறவினா

அகவினாவும், புறவினாவும் முறையே அகச் சுட்டு, புறச்சுட்டு போன்றவை. **எ, யா, ஆ, ஓ, ஏ** என்பன வினாவெழுத்துக்கள் என்பதும், அவை வினாப் பொருளில் வரும் பொழுதே வினாவெழுத் துக்கள் எனப்படும் என்பதும் முன்வகுப்பில் படித் தீர்கள். அவற்றுள் **எ, யா** என்பன சொல்லின் முதலிலும், **ஆ, ஓ** என்பன சொல்லின் இறுதி யிலும், '**ஏ**' என்பது சொல்லின் முதலிலும், இறுதியிலும் நின்று வினாப் பொருள்களைத் தரும் என்பதும் உங்கள் நினைவில் இருக்கும். இவற்றைப் படியுங்கள் :—

(1)	(2)
எவன்	எப்பையன்
எவை	எவ்விதம்
யார்	யாங்ஙனம்
யாவை	முருகனா
ஏது	சிறுவனோ
ஏன்	கண்ணனே

மேலே காட்டப்பட்டுள்ள சொற்களில் உள்ள எ, யா, ஆ, ஓ, ஏ, என்பன வினாப் பொருளில் வந்துள்ளன. 'எவன்' என்பதில் '**எ**' என்னும் வினாவெழுத்து சொல்லின் அகத்தே நிற்கின்றது. அவ்வினாவெழுத்தை அகற்றிவிட்டால் எஞ்சியவற் றிற்குப் பொருள் இல்லை. சொல்லின் அகத்தே வினாவெழுத்து நிற்பதால், 'எவன்' என்பதில் உள்ள வினாவெழுத்து **அகவினா** ஆகும். அவ் வாறே எவை, யார், யாவை, ஏது, ஏன் என்பன அகவினாக்களே. 'எப்பையன்' என்பதில் உள்ள

'எ' என்ற வினவை அகற்றினல், 'பையன்' என்ற சொல் நின்று பொருள் தருகின்றது. எகர வின சொல்லின் புறத்தே நிற்கின்றது. ஆகவே 'எப்பையன்' என்பதில் வந்துள்ள வின **புறவின**. அவ்வாறே எவ்விதம், யாங்ஙனம், முருகனே, சிறுவனே, கண்ணனே என்பனவற்றில் புறவினக்களே அமைந்துள்ளன.

வினவெழுத்து : ஒரு சொல்லின் அகத்தே நிற்பது அகவின. அவ்வினவெழுத்தை அகற்றினல் எஞ்சிய எழுத்துக்களின் தொடர்ச்சி ஒரு பொருளைத் தராது.

ஒரு சொல்லின் புறத்தில் (முதலிலோ, இறுதியிலோ) வினவெழுத்து நிற்பது புறவின. அவ்வெழுத்தை அகற்றினலும் எஞ்சிய சொல் ஒரு பொருளைத் தரும்.

நினைவில் வையுங்கள் :—

எ, யா : சொல்லுக்கு முதலில் நின்று அக வினவாகவும், புறவினவாகவும் வரும்.

ஆ, ஓ : சொல்லுக்கு ஈற்றில் நின்று புறவின வாகவே வரும்.

ஏ : சொல்லுக்கு முதலில் நின்று அகவின வாக வரும்; சொல்லுக்கு ஈற்றில் நின்று புறவின வாக வரும்.

பயிற்சி

1. சுட்டெழுத்துக்களையும், வினவெழுத்துக்களையும் தனித் தனிக் குறிப்பிடுக.
2. அகச்சுட்டிற்கும், அகவினவிற்குமுள்ள பொதுவிலக் கணம் யாது?
3. அகவின என்று பெயர்வரக் காரணம் என்ன?
4. புறச்சுட்டின் இலக்கணத்தை எழுதுக.

5. புறவினாவைக் கண்டுபிடிப்பது எவ்வாறு?

6. 'ஆ' 'ஓ' ஏன் அகவினாவாக வாரா?

7. 'ஏ' எவ்விடத்தில் நின்று புறவினாவாக வரும்?

8. பின் வருவனவற்றுள் சுட்டுகளும், வினாக்களும் அமைந்துள்ள சொற்களை வகைப்படுத்தி,

சுட்டு	வினா

என்ற அட்டவணையில் எழுதிக் காட்டுக.

யாக்கை, எவ்வாறு, அப்பையன், எருமை, அரசன், இக்கடல், உவன், யாது, ஏவன், இலை, உலை, கந்தனோ, சிறுவனே, ஏழு, ஏவன்.

9. பின்வருவனவற்றில் உள்ள அகச்சுட்டு, புறச்சுட்டு, அகவினா, புறவினாக்களைத் தனித்தனி அட்டவணையில் வகைப் படுத்தி எழுதுக. பிறகு ஒவ்வொன்றுக்கும் காரணமும் எழுதுக.

வினா	
அகம்	புறம்

யாவன், அவ்வீடு, இது, எவ்வாறு, உப்பக்கம், வள்ளியோ, ஏது, ஏவன், இப்பக்கம், எக்குழந்தை.

10. 'எட்டு' என்ற சொல்லில் உள்ள எகரத்திற்கும், 'எவன்' என்ற சொல்லில் உள்ள எகரத்திற்கும் உள்ள வேறு பாடு யாது?

3. குற்றியலுகரம்—வகை

பாக்கு	குடம்
பஞ்சு	சுனை
பத்து	துணி
வம்பு	புகழ்

மேலே காட்டப்பட்டுள்ள இருவகைச் சொற் களையும் உச்சரித்துப் பாருங்கள். 'பாக்கு' என் னும் சொல்லையும், குடம் என்னும் சொல்லையும் ஒப்பிட்டுப் பாருங்கள். இரண்டு சொற்களிலும்

'கு' என்னும் எழுத்து இருக்கிறது. 'குடம்' என்னும் சொல்லில் உள்ள 'கு' என்னும் எழுத்தைக்காட்டிலும், 'பாக்கு' என்பதில் உள்ள 'கு' என்னும் எழுத்துக் குறுகிய ஓசையைக் கொண்டுள்ளதல்லவா? இவ்வாறே பஞ்சு, பத்து, வம்பு என்னும் சொற்களில் உள்ள 'சு, து, பு' என்னும் எழுத்துக்கள், சுனை, துணி, புகழ் என்னும் சொற்களிலுள்ள 'சு, து, பு' என்னும் எழுத்துக்களைக் காட்டிலும் குறுகிய ஓசையை உடையனவாய் உள்ளன. **இவ்விதம் ஓசை குறுகிய இயலை உடைய உகரத்திற்குக் குற்றியலுகரம் என்பது பெயர். கு, சு, டு, து, பு, று, என்னும் எழுத்துக்களில் ஒன்று சொல்லின் ஈற்றில் நின்று குற்றியலுகரமாக வரும்.**

கீழ்வரும் இருவகைச் சொற்களையும் தனித் தனி உச்சரித்துப் பாருங்கள் :

(1)	(2)
நாகு	நகு
மூசு	முசு
காடு	கடு
மாது	மது
ஆறு	தபு
	அறு

நாகு, மூசு, காடு, மாது, ஆறு என்பவற்றில் உள்ள கு, சு, டு, து, று என்னும் எழுத்துக்கள் ஓசையில் குறைவுபட்டுள்ளன. எனவே, அவை குற்றியலுகரங்கள். ஆனால் நகு, முசு, கடு, மது, தபு, அறு என்பவற்றில் உள்ள கு, சு, டு, து, பு, று என்பன ஓசையில் குறைவுபடவில்லை. ஆகவே அவை குற்றியலுகரங்கள் அல்ல. ஆகையால்

இரண்டு எழுத்துக்களையுடைய சொல்லில் முத லெழுத்து நெடிலாக இருந்தால்தான் இரண்டா வது எழுத்துக் குற்றியலுகரமாக வரும் என் பதை அறிக. இவ்வாறு நெடிலைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் **நெடில் தொடர்க் குற்றிய லுகரம்** எனப் பெயர் பெறும்.

(1)	(2)	(3)	(4)
எஃகு	நாக்கு	நான்கு	மூழ்கு
அஃது	நச்சு	நெஞ்சு	சால்பு
இஃது	எட்டு	இரண்டு	செய்து
	பத்து	ஐந்து	
	உப்பு	தும்பு	
	கற்று	இன்று	

மேலே காட்டப்பட்டுள்ள சொற்களின் ஈற்றில் நிற்கும் உகரங்கள் குற்றியலுகரங்கள் என்பதை நீங்கள் உச்சரித்துப் பார்த்து அறிந்துகொள்ள லாம்.

(1) **எஃகு, அஃது, இஃது** என்பனவற்றில் உள்ள குற்றியலுகரங்கள் ஆய்தவெழுத்தைத் தொடர்ந்து வந்துள்ளன. ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரத்திற்கு **ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்** என்பது பெயர். **குற்றியலுகரச் சொல்லின் ஈற்றெழுத்திற்கு அய லெழுத்தைக் கொண்டே, என்ன தொடர்க் குற்றியலுகரம் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்.**

(2) **நாக்கு, நச்சு, எட்டு, பத்து, உப்பு, கற்று** என்பனவற்றில் உள்ள குற்றியலுகரங்கள் **வல்லின மெய்யெழுத்தைத்** தொடர்ந்து வந்துள் ளன. வல்லின மெய்யைத் தொடர்ந்து வரும்

குற்றியலுகரத்திற்கு **வன்தொடர்க் குற்றியலுகரம்** என்பது பெயர்.

(3) **நான்கு, நெஞ்சு, இரண்டு, ஐந்து, தும்பு, இன்று** என்பனவற்றில் உள்ள குற்றியலுகரங்கள் **மெல்லின மெய்யெழுத்தைத்** தொடர்ந்து வந்துள்ளன. மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரத்திற்கு **மென் தொடர்க் குற்றியலுகரம்** என்பது பெயர்.

(4) **சால்பு, செய்து, மூழ்கு** என்பனவற்றில் உள்ள குற்றியலுகரங்கள் **இடையின மெய் யெழுத்தைத்** தொடர்ந்து வந்துள்ளன. இடையின மெய்யெழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரத்திற்கு **இடைத்தொடர்க் குற்றியலுகரம்** என்பது பெயர்.

(5) விறகு
அரசு
குருடு
பழுது
வயிறு

மேலே காட்டப்பட்டுள்ள சொற்களின் ஈற்றில் குற்றியலுகரங்கள் வந்துள்ளன. 'விறகு' என்பதில் 'கு' குற்றியலுகரம். அதற்கு அயலெழுத்து 'ற' என்பது (ற்+அ=ற) உயிர்மெய்யெழுத்தல்லவா? இக்குற்றியலுகரச் சொல்லுக்கு ஈற்றயலெழுத்து உயிரெழுத்தாகும். இவ்வாறு உயிரெழுத்தைத் தொடர்ந்து வந்துள்ள குற்றியலுகரத்திற்கு **உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்** என்பது பெயர். **உயிர்த் தொடர்க் குற்றியலுகரத்தின் ஈற்றயலெழுத்து உயிர்மெய்யெழுத்தாக இருக்கும் என்பதை அறிக.**

மேற்காட்டியவற்றிலிருந்து **குற்றியலுகரம், (1) நெடில் தொடர்க் குற்றியலுகரம், (2) ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம், (3) வன்றொடர்க் குற்றியலுகரம், (4) மென்றொடர்க் குற்றியலுகரம், (5) இடைத் தொடர்க் குற்றியலுகரம், (6) உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்** என **ஆறு வகைப்படும்** என்பதை நீங்கள் அறியலாம்.

4. முற்றியலுகரம்

நகு, முசு, கடு, மது, தபு, அறு என்பனவற்றில் உள்ள கு, சு, டு, து, பு, று என்னும் உகரங்கள் குறுகிய ஓசையை உடையன அல்ல என்று முன் பாடத்தில் படித்தீர்கள். அவை தமக்குரிய முழு ஓசையுடன் இயலும் உகரங்கள். ஆகவே அவற்றை **முற்றியலுகரம்** என்னலாம். **தனக்குரிய முழு ஓசையுடன் இயல்கின்ற உகரம் முற்றியலுகரமாகும்.** ஏழு, தள்ளு, சொல்லு, உண்ணு, தும்மு, பன்னு என்பனவற்றில் வருகின்ற உகரங்களும் முற்றியல் உகரங்களே. (இவை வல்லின மெய் உகரங்கள் அல்ல.) **குற்றியலுகரம் அல்லாத** (குறுகிய ஓசையை உடையது அல்லாத) **எல்லா உகரங்களும் முற்றியலுகரம்** என்பதை அறிக.

5. குற்றியலிகரம்

உகரம் தனக்குரிய ஓசையில் குறுகி வந்தால் குற்றியலுகரம் எனப் பெயர் பெறும் என்று படித்தீர்கள். சில சமயங்களில் **இகரமும்** தனக்குரிய ஓசையில் குறுகி வருவதுண்டு.

(1) நாடு +யாது=நாடியாது
(2) எருது +யாது=எருதியாது
(3) நேற்று+யார் =நேற்றியார்

மேலே உள்ள எடுத்துக்காட்டுகளில் நாடு, எருது, நேற்று என்னும் குற்றியலுகரச் சொற்களுடன் யகரத்தை முதலிலே கொண்ட சொற்கள் புணர்ந்துள்ளன. அவ்வாறு புணருங்கால், குற்றியலுகரம் இகரமாகத் திரிந்துள்ளது. அவ்வாறு திரிந்த இகரமும் குறுகிய ஓசையுடனேயே நிற்கின்றதல்லவா? உச்சரித்துப் பாருங்கள். இங்ஙனம் ஓசை குறுகி இயலுதலை உடைய இகரத்திற்குக் **குற்றியலிகரம்** என்பது பெயர். **குற்றியலுகரம் யகரமுதன் மொழியோடு புணருங்காலத்தில் குற்றியலிகரம் ஆகும்.** இனி,

(1) கேண்மியா
(2) உண்மியா
(3) சென்மியா

என்பவற்றிலுள்ள இகரமும் குற்றியலிகரமேயாகும். உச்சரித்துப் பாருங்கள். 'மியா' என்பது அசைச்சொல். அதில் உள்ள இகரம் வேறு சொற்களைத் தொடர்ந்து வரும்பொழுதே குறுகிய ஓசையுடன் இருக்கும்.

6. மாத்திரை

மாத்திரை என்ற சொல்லுக்கு 'அளவு' என்பது பொருள். ஒவ்வொரு எழுத்திற்கும் உள்ள ஓசை அளவினை நம் முன்னோர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஓசையை அளப்பதற்கு ஒரு அளவு கருவி

வேண்டுமல்லவா? ஒரு முறை **இயல்பாகக் கண்ணிமைக்கும்** கால அளவிற்கு ஒரு **மாத்திரை** என்பது பெயர். ஒரு முறை கையினுல் நொடிக்கும் நேரத்தையும் ஒரு மாத்திரை என்று சொல்வார்கள். ஆனுல் ஒரு முறை இயல்பாக உண்டாகும் கண்ணிமைக்கும் காலமே ஒரு மாத்திரையின் சரியான கால அளவாகும். ஒவ்வொரு எழுத்திற்கும் உள்ள ஓசை அளவை மாத்திரைக் கணக்கில் கூறலாம். இக்கணக்கை அறிந்துகொள்வது எழுத்துக்களின் உச்சரிப்பிற்குத் துணை செய்யும்.

'படாம்' என்ற சொல்லை உச்சரித்துப் பாருங்கள். ஒவ்வொரு எழுத்தையும் உச்சரிக்கும் கால அளவை ஆராய்ந்து பாருங்கள். 'ப' என்பது குறில். 'டா' என்பது நெடில். 'ம்' என்பது மெய். குறிலைப்போல் நெடில் இரண்டு பங்கு நேரம் ஒலிக்கின்றது. அஃதாவது, 'டா' என்பதன் ஓசையளவு 'ப' என்பதன் ஓசையளவைப் போல் இரண்டு பங்குள்ளது. 'ப' என்னும் குறில் ஒருமுறை இயல்பாகக் கண்ணிமைக்கும் நேரமே ஒலிக்கின்றது.

ஆகவே, குறிலுக்கு ஒரு மாத்திரை, நெடிலுக்கு இரண்டு மாத்திரை. குறிலின் ஓசையில் பாதியே 'ம்' என்னும் மெய்யெழுத்திற்கு அமைந்துள்ளது. எனவே மெய்யெழுத்திற்கு மாத்திரை $\frac{1}{2}$. ஆய்தம், குற்றியலுகரம், குற்றியலிகரம் என்பன மெய்யெழுத்தைப்போன்றே ஒலிப்பன. ஆகவே அவற்றிற்குத் தனித்தனி மாத்திரை $\frac{1}{2}$ ஆகும். முற்றியலுகரம் குறிலே ஆதலால், அதற்கு மாத்திரை 1.

நினைவில் வையுங்கள் :—

நெடில்	2 மாத்திரை
குறில்	1 ,,
மெய், ஆய்தம், குற்றியலுகரம், குற்றியலிகரம் (தனித்தனியே)	½ ,,

'ஆ' 'வா' என்னும் இரண்டு எழுத்துக்களுக்கும் ஓசையளவில் வேற்றுமையில்லை. 'ஆ' என்பது உயிர் நெடில். 'வா' என்பது உயிர்மெய் நெடில். ஆயினும் ஓசையளவில் அவற்றிற்கு வேறுபாடு இல்லை. "வ்+ஆ=வா; எனவே, 'வ்' என்னும் மெய்க்கு ½ மாத்திரை. 'ஆ' என்னும் உயிர் நெடிலுக்கு 2 மாத்திரை. ஆக மொத்தம் 2½ மாத்திரை என்றால் என்ன?" என்று நீங்கள் கேட்கலாம். இரண்டு படி தண்ணீருடன் ½ படி உப்பைக் கலந்தால் மொத்தம் 2½ படி ஆகுமா? உப்பு, தண்ணீரில் கரைந்துவிடாதா? உயிர்மெய் நெடிலும் அதைப்போன்றதே. எனவே உயிர் நெடிலாயினும், உயிர்மெய் நெடிலாயினும் அவற்றின் ஓசையளவில் வேறுபாடு இல்லை என்பதை அறிக. இவ்வாறே உயிர்க் குறிலுக்கும், உயிர்மெய்க் குறிலுக்கும் ஓசையளவில் வேறுபாடு இல்லை என்பதை உச்சரித்துப் பார்த்து அறிந்து கொள்ளுங்கள்.

பயிற்சி

1. 'வம்பு' என்னும் சொல்லில் உள்ள 'பு' என்னும் எழுத்திற்கும், 'புலவர்' என்னும் சொல்லில் உள்ள 'பு' என்னும் எழுத்திற்கும் ஓசையில் உள்ள வேறுபாடு என்ன?
2. குற்றியலுகரம் : பொருள் என்ன?

3. நெடிற்றொடர்க் குற்றியலுகரம் எவ்வாறு அமைந்திருக்கும்?

4. ஒரு குற்றியலுகரம் எவ்வகையைச் சார்ந்தது என்பதை எதைக்கொண்டு முடிவு செய்யவேண்டும்?

5. உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தை அறிவது எவ்வாறு?

6. கீழ்வரும் குற்றியலுகரங்களைத் தொடருக்கு ஏற்ப **அட்டவணையில்** வகைப்படுத்துக :—

கட்டு, மூன்று, சருகு, காற்று, உருக்கு, காம்பு, ஏடு, கோது, வண்டு, மார்பு, சால்பு, அஞ்சு, இஃது, கழங்கு, ஊற்று, நீந்து, ஆறு, அச்சு.

7. குற்றியலுகரத்திற்கும், முற்றியலுகரத்திற்கும் ஓசையில் உள்ள வேறுபாடு யாது?

8. நாகியாது என்பதில் குற்றியலிகரம் அமைந்துள்ளது எவ்வாறு விளக்குக.

9. குற்றியலிகரத்தின் இலக்கணம் யாது?

10. எழுத்துகளின் ஓசையை அளக்கும் கருவிக்குப் பெயர் யாது?

11. ஒரு மாத்திரை நேரம் என்பது எவ்வளவு நேரம்?

12. மெய்யெழுத்தும், ஆய்தமும் எவ்விதத்தில் ஒத்துள்ளன?

13. குற்றியலிகரம், முற்றியலுகரம், குறில்: இவற்றிற்குரிய மாத்திரைகள் எத்தனை? தனித்தனி எழுதுக.

14. உயிர்மெய் நெடிலுக்கும், உயிர் நெடிலுக்கும் மாத்திரை யளவில் வேறுபாடில்லை : விளக்குக.

II. சொல்

ஒன்றிற்குப் பெயராய் வருவது பெயர்ச்சொல் என்பதும், ஒரு தொழிலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் என்பதும் உங்களுக்குத் தெரியும். சொற்கள் யாவும் ஏதேனும் ஒரு பொருளைத் தரும் என்பதை அறிக.

A. பெயர்ச்சொல்

1. இடுகுறிப் பெயர்

மரம், கல், மண், மா, பலா, பனை என்பவை பெயர்ச்சொற்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். 'மரம்' என்று பெயர் வைக்கப்பட்ட காரணம் யாது? 'கல்' என்று பெயர்வரக் காரணம் என்ன? அக்காரணங்களைக் காரணம் மறந்துவிடப்பட்டமையால் இப்பொழுது கூறக் கூடவில்லை. இவ்வாறு காரணம் கூறப்பட முடியாதவை **இடுகுறிப் பெயர்கள்** என்று இலக்கண நூல்களிற் கூறப்படும்.

2. காரணப் பெயர்

வளை என்று கையில் அணிந்துகொள்ளும் அணிக்குப் பெயர் வந்தது ஏன்? அது வளைந்திருப்பதனால் அல்லவா? வளைந்திருக்கின்ற காரணத்தால் பெயர் பெற்ற 'வளை' என்பது **காரணப் பெயர்** ஆகும். 'சிலம்பு' என்பது காரணப் பெயர். 'சிலம்பு' என்ற சொல்லுக்கு 'ஒலித்தல்' என்பது பொருள். ஒலிக்கும் காரணத்தால் பெயர் பெற்ற 'சிலம்பு' என்பதும் காரணப்பெயர். ஏதேனும் ஒரு காரணம்பற்றி வந்த பெயர் **காரணப்**

பெயர் ஆகும். 'வேல்' வைத்திருப்பவனை 'வேலன்' என்பதும், கருநிறம் உடையவனைக் 'கரியன்' என்பதும் வழக்கமல்லவா? வேலன், கரியன் என்பன காரணப் பெயர்களே.

(1) ஒரு காரணமும் கூறமுடியாத பெயர் 'இடுகுறிப் பெயர்'.

(2) ஏதேனும் ஒரு காரணம்பற்றி வழங்கும் பெயர் 'காரணப் பெயர்'.

பயிற்சி

1. இடுகுறிப்பெயர்: பொருளை எழுதி விளக்குக.
2. உங்கள் நண்பர்களில் ஒருவன் பெயர் 'கண்ணன்'. அப்பெயர் காரணப் பெயரா, இடுகுறிப் பெயரா? உங்கள் விடைக்குக் காரணம் எழுதுக.
3. உங்கள் வீட்டிலுள்ள பொருள்களிலிருந்து, காரணப் பெயர், இடுகுறிப் பெயர்களுக்கு இரண்டிரண்டு உதாரணங்கள் எழுதுக.
4. 'அணி': இது காரணப் பெயர். ஏன்?
5. பின்வரும் பெயர்களை—

இடுகுறிப் பெயர்கள்	காரணப் பெயர்கள்

என்ற அட்டவணையின் கீழ் வகைப்படுத்துக:—

பாம்பு, மீன், கால், இடை, கண், புல், வீடு, கடல், பறவை, பரவை, முள்ளி, முக்கண்ணன்.

3. சுட்டுப் பெயர்

(1) அவன், அவள், அவர், அது, அவை
(2) இவன், இவள், இவர், இது, இவை
(3) உவன், உவள், உவர், உது, உவை

மேலே காட்டப்பட்ட சொற்களில் உள்ள அ, இ, உ என்பவை சுட்டுப் பொருளில் வந்துள்ளன.

சுட்டுப்பொருளைத் தரும் எழுத்துக்களைத் தம் மிடத்தே கொண்ட அவை **சுட்டுப்பெயர்களாம். சுட்டெழுத்தைப் பகுதியாகக்கொண்டு நிற்கும் பெயர் சுட்டுப் பெயர்.**

4. வினாப்பெயர்

(1) எவன், எவள், எவர், எது, எவை.
(2) யாவன், யாவள், யாவர், யாது, யாவை.

மேலே காட்டப்பட்டுள்ள பெயர்களுள் அமைந்துள்ள **எ, யா** என்பன வினாப்பொருளில் வந்துள்ளன. ஆகவே அவை **வினாப்பெயர்கள். வினாவெழுத்தைப் பகுதியாகக்கொண்டு வரும் பெயர் வினாப்பெயராம்.**

ஒருமைப்பெயர்—பன்மைப்பெயர்

எண், ஒருமை எண் என்றும், பன்மை எண் என்றும் இருவகைப்படும் என்பது உங்களுக்குத் தெரியும். ஒரு பெயர் ஒரே பொருளையோ, ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களையோ குறிக்கலாம்.

(1) அரசன், அரசி, கூனன், கூனி, ஆடு, மாடு, அவன், அவள், அது, இவன், இவள், இது, எவன், எவள், எது, யாவன், யாவள், யாது, நான், நீ, அண்ணன், தம்பி, தந்தை, தாய், பெண், மரம், கல் என்பன ஒவ்வொரு பொருளையே குறிக்கும் பெயர்கள். இவற்றை **ஒருமைப் பெயர்கள்** என்னலாம். **ஒரு பொருளைக் குறிக்கும் பெயர் ஒருமைப் பெயர்.**

(2) அரசர், அரசர்கள், அரசியர், அரசிகள், கூனர்கள், கூனிகள், ஆடுகள், மாடுகள், அவர்கள்,

அவை, இவர்கள், இவை, எவர்கள், எவை, யாவர், யாவை, நாம், நீங்கள், அண்ணன்மார், தம்பியர், தந்தையர், தாயர், பெண்டிர், மரங்கள், கற்கள், சொற்கள் என்னும் சொற்கள் ஒவ்வொன்றும், ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களையே குறிக்கின்றன. இவற்றைப் **பன்மைப் பெயர்கள்** என்னலாம். **ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களைக் குறிக்கும் பெயர் பன்மைப்பெயர்.**

மக்கள், மாந்தர், பலர், சிலர், பல, சில, எல்லார், எல்லாம் என்பன எப்பொழுதும் **பன்மைப் பெயர்களாகவே** இருக்கும் என்பதை அறிக.

5. பொதுப்பெயர்

ஒரு பொருளுக்கு மேற்பட்டவற்றைப் **பொதுவாகச்** சில பெயர்கள் குறிப்பதுண்டு.

மரம், அணி.

(1) **மரம்** என்பது எல்லா வகையான மரங்களுக்கும் **பொதுவான** பெயர்.

(2) **அணி** என்பது எல்லா வகையான அணிகளுக்கும் பொதுவான பெயர். ஆகவே மரம், அணி என்பவற்றைப் **பொதுப்பெயர்கள்** என்னலாம்.

(3) ஒருவர்—ஆண்பால், பெண்பால் ஆகிய இரண்டு பால்களுக்கும் பொதுவான பெயர்.

(4) **எல்லாம்**—தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்றிடங்களுக்கும் பொதுவான பெயர்.

மேலே காட்டப்பட்டவாறு இரண்டு திணைகளுக்கோ, ஒன்றுக்கு மேற்பட்ட பால்களுக்கோ, ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கோ பொதுவாக வரும் பெயர்களும் **பொதுப் பெயர்களே.**

பறவை, குதிரை—இவை ஒன்றன்பால், பல வின்பால் ஆகிய இரு அஃறிணைப் பால்களுக்கும் பொதுவான பெயர்கள் (பறவை சென்றது, பறவை சென்றன; வந்தது குதிரை, வந்தன குதிரை என்று இருவிதங்களிலும் அவை வரும்). இத் தகைய பொதுப் பெயரைப் **பால்பகா அஃறிணைப் பெயர்** என்றும் சொல்வதுண்டு.

ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களுக்கோ, பால்களுக்கோ, இடங்களுக்கோ, இரண்டு திணைகளுக்கோ, இரண்டு எண்களுக்கோ பொதுவாக வரும் பெயர் பொதுப்பெயர் ஆகும்.

பயிற்சி

1. சுட்டுப் பெயரின் இலக்கணம் யாது ?
2. வினைப்பெயர்களுள் இரண்டு வரைந்து, காரணமும் எழுதுக.
3. உயர்திணை ஒருமைப் பெயர்களில் நான்கு எழுதுக.
4. பன்மைப் பெயரின் இலக்கணம் யாது ?
5. எப்பொழுதும் பன்மைப் பெயர்களாகவே வருவனவற்றில் ஐந்து எழுதுக.
6. பொதுப்பெயர் என்பது யாது ?
7. எல்லாம் : இது மூவிடத்திற்கும் பொதுவான பெயர் : எவ்வாறு ?
8. பால்பகா அஃறிணைப் பெயர் என்பது என்ன ?

6. ஆகுபெயர்

(1)	(2)
தாமரை முளைத்தது	**தாமரை** போன்ற முகம்
வெற்றிலை மென்றான்	**வெற்றிலை** நட்டான்
உலகம் உருண்டை வடிவமானது	**உலகம்** புகழும் உத்தமர் காந்தி

மேலே காட்டப்பட்டுள்ள இருவகை வாக்கியங்

களையும் ஆராய்ந்து பாருங்கள்: அவற்றுள் வந்துள்ள **தாமரை, வெற்றிலை, உலகம்** என்னும் சொற்களின் பொருள்களைக் கவனியுங்கள்: 'தாமரை முளைத்தது' என்பதில் உள்ள 'தாமரை' என்னும் சொல்லுக்கும், 'தாமரைபோன்ற முகம்' என்பதில் உள்ள 'தாமரை' என்னும் சொல்லுக்கும் பொருளில் வேற்றுமை உள்ளது.

(1) '**தாமரை** முளைத்தது' என்பதில் உள்ள 'தாமரை' என்பது கொடியையே குறிக்கின்றது. ஒன்றின் பெயர் மற்றொன்றுக்கு **ஆகி**வரவில்லை. ஆனால் **தாமரை**போன்ற முகம் என்பதில் உள்ள தாமரை என்னும் சொல் தாமரைக்கொடியின் சினையாகிய **பூ**வைக் குறிக்கின்றது. 'தாமரை(ப்பூப்) போன்ற முகம்' என்பதே அவ்வாக்கியத்திற்குப் பொருள். இங்கு ஒன்றின் பெயர் மற்றொன்றிற்கு **ஆகி வந்திருக்கின்றது.** அஃதாவது, தாமரை என்ற முதலின் பெயர் அதனோடு தொடர்புள்ள சினைக்குப் பெயராகி வந்துள்ளது. இவ்வாறு ஒன்றின் பெயர் அதனோடு தொடர்புள்ள மற்றொன்றுக்குப் பெயராகி வருவது **ஆகுபெயர்** என்று வழங்கப்படும்.

(2) **வெற்றிலை மென்றான்** என்பதில் உள்ள வெற்றிலை என்னும் சொல் தன் பொருளையே குறித்து நிற்கின்றது. ஆனால், **வெற்றிலை** நட்டான் என்பதில் இலையைக் குறிக்கவில்லை; இலையோடு தொடர்புடைய **வெற்றிலைக் கொடி**யையே 'வெற்றிலை' என்னும் சொல் குறிக்கின்றது. வெற்றிலை என்னும் சினையின் பெயர் அதன் முதலாகிய கொடிக்குப் பெயராகி வந்துள்ளது. ஆகவே 'வெற்

றிலை நட்டான்' என்பதில் உள்ள 'வெற்றிலை' என்பது **ஆகுபெயர்.**

(3) '**உலகம்** உருண்டை வடிவமானது' என்பதில் உள்ள 'உலகம்' என்பது தன்னையே குறித்து நிற்கின்றது; வேறொரு பொருளைக் குறிக்கவில்லை. ஆனால், '**உலகம்** புகழும் உத்தமர் காந்தியடிகள்' என்னும் வாக்கியத்தில் உள்ள 'உலகம்' என்ற சொல் உலகத்தில் உள்ள **மக்களைக்** குறிக்கின்றது. ஈண்டு 'உலகம்' என்ற இடத்தின் பெயர், உலகத்தி லுள்ள மக்களுக்குப் பெயராகி வந்துள்ளது. எனவே, இவ்வாக்கியத்தில் உள்ள 'உலகம்' என்ற சொல் ஆகுபெயராகும். பலவகைப்பட்ட ஆகு பெயர்களைப்பற்றி அடுத்த வகுப்பில் படிக்கலாம்.

ஒரு பொருளின் பெயர் அதனோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குப் பெயராகித் தொன்றுதொட்டு வருவது ஆகுபெயர்.

பயிற்சி

1. ஆகு பெயர் : பொருள் எழுதுக.
2. ஆகு பெயரின் இலக்கணம் என்ன ?
3. 'ஊர் கூடிற்று' என்பதில் 'ஊர்' என்பது ஆகுபெயர் : எவ்வாறு ? விளக்குக.
4. வற்றல் தின்றான், இனிப்பு எனக்குப் பிடிக்கும், காரம் ஒன்று தா—இவற்றில் உள்ள வற்றல், இனிப்பு, காரம் ஆகியவை ஆகுபெயர்களா ? இல்லையா ? காரணம் எழுதுக.
5. பின் வரும் விளம்பரத்தில் ஆகு பெயர்கள் இருக்குமாயின் அவற்றைக் குறித்து, என்ன ஆகு பெயர் எனக் காரணம் காட்டி விளக்குக.

இன்னிசை அரங்கு

செம்பை	—	பாட்டு
கும்பகோணம்	—	பி ல்
பாலக்காடு	—	மிருதங்கம்
ஆலங்குடி	—	கடம்

நாள் : 29—12—1950 வெள்ளிக் கிழமை.

காலம் : மாலை 5-30 மணி.

இடம் : கோகலே மண்டபம்.

கட்டணம் : ரூ. 25, 10, 5, 3, 2.

அனைவரும் வருக !

6. வீட்டிற்கு வெள்ளை அடித்தான் ; வெள்ளை ஆடையை உடுத்தினேன். —இரண்டிலும் உள்ள ‘வெள்ளை’ என்னும் சொல்லின் பொருள் வேறுபாடுகளை வரைக.

7. வினையாலணையும் பெயர்

(1) **தூங்கியவனை** எழுப்பினேன்.
(2) **ஓடினனைத்** தடுத்தேன்.
(3) நன்ருய்ப் **பாடியவனுக்குப்** பரிசு கிடைத்தது.

மேலே காட்டப்பட்டுள்ள வாக்கியங்களில் அமைந்த **தூங்கியவனை, ஓடினனை, பாடியவனுக்கு** என்னும் சொற்களை ஆராய்ந்து பாருங்கள். அவற்றுள் தூங்கினன், பாடினன், என்னும் சொற்கள் தூங்கியவன், பாடியவன் என்று திரிந்து நிற்கின்றன. **தூங்கினன், ஓடினன், பாடினன்** என்பன **வினைமுற்றுகள்**. ‘தூங்கினன்’ என்னும்

சொல் இங்கு வினை (தொழில்) நிகழ்ச்சியை உணர்த்தவில்லை. அதற்குப் பதிலாக வினையையும் (தொழிலையும்), அது அணைந்தவனையும் (செய்தவனையும்) உணர்த்துகிறது. அன்றியும் வினை திரிந்து வேற்றுமை உருபை ஏற்றிருக்கிறது. ஆகவே 'தூங்கியவன்' என்ற சொல் **வினையாலணையும் பெயராகும். ஒரு வினைமுற்று பெயரைப்போலப் பொருளை உணர்த்தி வினை செய்தவனை அணைந்து வேற்றுமையை ஏற்று வருவது வினையாலணையும் பெயராம்.**

மேலே காட்டப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள **ஓடினான், பாடியவன்** என்பனவும் வினையாலணையும் பெயர்களே. வினையாலணையும் பெயரில் வேற்றுமை உருபு வெளிப்பட்டும், மறைந்தும் நிற்பதுண்டு. வினைமுற்று வினையாலணையும் பெயராக வரும்பொழுது திரிந்தோ, திரியாமலோ நிற்கும். வினையாலணையும் பெயரைப்பற்றி விரிவாக அடுத்த வகுப்பில் அறிந்துகொள்ளுங்கள்.

பயிற்சி

1. வினைமுற்றின் இலக்கணம் யாது?
2. வினையாலணையும் பெயர் : பொருள் எழுதுக.
3. வினையாலணையும் பெயரின் இலக்கணம் யாது?
4. வினைமுற்று வினையாலணையும் பெயராக வரும்பொழுது அடையும் மாறுதல்கள் யாவை?
5. பின்வருவனவற்றில் உள்ள வினையாலணையும் பெயர்களை எடுத்து வரைந்து விளக்குக :—

(1) "பிச்சை எடுத்தவன் பொருளைப் பிடுங்கிச் சென்றான் திருடன்."

(2) "வந்தெதிரே தொழுதானை வணங்கினான்."

(3) "நேற்று அரசனாக இருந்தவன் இன்று ஆண்டியானான்."

8. திணை

மக்கள், தேவர், நரகர் என்போர் உயர் திணையைச் சார்ந்தவர் என்றும், பகுத்தறிவில்லாத ஏனை உயிருள்ளனவும், உயிரில்லாதனவும் அஃறிணையைச் சார்ந்தவை என்றும் முன் வகுப்பில் படித்தீர்கள். இரண்டு திணைகளுக்கும் பொதுவாக வரும் பெயர் பொதுப் பெயர் என்பதும் முன்பு கூறப்பட்டது. அதுவே, திணைப் பொதுப் பெயர் என்று குறிக்கப்படும். அதைப்பற்றிச் சிறிது விரிவாக ஈண்டு அறிவோம்.

(1) **இவரெல்லாம்** **இவையெல்லாம்**	'எல்லாம்' என்பது இரு திணைக்கும் பொதுவாக வந்தது.
(2) அவர் தாம் அவை தாம்	'தாம்' என்பது இரு திணைக்கும் பொதுவாக வந்தது.
(3) அவன் தான் அது தான்	'தான்' என்பது இரு திணைக்கும் பொதுவாக வந்தது.

எல்லாம், தாம், தான் என்னும் மூன்று பெயர்களும் **திணைப் பொதுப் பெயர்களாக** வந்தன.

(4) மணி இவன்	மணி இந்நாய்
இலக்குமி இவள்	இலக்குமி இப்பசு

மணி, இலக்குமி ஆகிய முதற் பெயர்கள் (இடுகுறிப் பெயர்கள்) திணைப் பொதுப் பெயர்களாய் வந்தன.

தந்தை இவன்	தந்தை இச்சிங்கம்
தாய் இவள்	தாய் இப்பூனை

தந்தை, தாய் ஆகிய முறைப் பெயர்கள் திணைப் பொதுப் பெயர்களாய் வந்தன.

(5) **சந்திரன்** தோன்றினன், சந்திரன் தோன்றியது.

ஊமை வந்தான், ஊமை வந்தது.

என்பனபோலவும் திணைப் பொதுப் பெயர்கள் வரும்.

திணைப் பொதுப் பெயர்கள் இன்னும் பலவிதமாகவும் வரும். அவ்வாறு வரும் இடங்களில் அவற்றை ஆராய்ந்து அறிந்துகொள்ளுங்கள்.

9. பால் : ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர்கள்—மாறும் வகைகள்

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின்பால் என்று பால் ஐவகைப்படும் என்றும், அவற்றுள் முதல் மூன்றும் உயர் திணையைச் சார்ந்தவை என்றும், இறுதி இரண்டும் அஃறிணையைச் சார்ந்தவை என்றும் முன் வகுப்பில் படித்தீர்கள்.

ஆண்பாற் பெயர்கள்	**பெண்பாற் பெயர்கள்**
நெடுஞ்செழியன்	கண்ணகி
நக்கீரன்	மனோன்மணி
டேவிட்	மேரி
அப்துல்காதர்	நூர்ஜஹான்

(1) அவன் (அன்)
தஞ்சையான் (ஆன்)
வடமன் (மன்)
சேரமான் (மான்)
மகன் (ன்)

இவை ஆண்பாற் பெயர்கள். இவற்றின் ஈற்றில் உள்ள **அன், ஆன், மன், மான், ன்** என்பன ஆண்பாலை உணர்த்தும் **விகுதிகள்.** (விகுதி சொல்லில் உள்ள கடைசி உறுப்பு.

(2) அவள் (அள்) குழையாள் (ஆள்) மகள் (ள்) பொன்னி (இ)	இவை பெண்பாற் பெயர்கள். **அள், ஆள், ள்**, இ என்னும் விகுதிகள் பெண்பாலைக் காட்டின.

(3) ஒரு ஆண்பாற் பெயரிலுள்ள ஆண்பால் விகுதியை அகற்றி, அங்குப் பெண்பால் விகுதியை அமைத்துப் பெண்பாற் பெயராக்கலாம். ஆண்பாற் பெயரைப் பெண்பாற் பெயராக ஆக்கும் விதங்கள் பல.

ஆண்பால்	**பெண்பால்**
குழையன்	குழையள்
அவன்	அவள்
யாவன்	யாவள்
நல்லன்	நல்லள்

மேலே, 'அன்' என்னும் ஆண்பால் விகுதி இருந்த இடத்தில் 'அள்' என்னும் பெண்பால் விகுதி நின்று பெண்பாற் பெயர்களாக மாறின.

ஆண்பால்	**பெண்பால்**
(4) அரசன்	அரசி
கிழவன்	கிழவி (வயதானவள்)
பாட்டன்	பாட்டி
கூனன்	கூனி
குருடன்	குருடி
திருடன்	திருடி
செல்வன்	செல்வி
தோழன்	தோழி
தலைவன்	தலைவி

அன் என்னும் ஆண்பால் விகுதி நின்ற இடங்களில் **இ** என்னும் பெண்பால் விகுதி நின்று பெண்பாற் பெயர்களாக மாறின.

ஆண்பால்	பெண்பால்
(5) தமிழன்	தமிழச்சி
தெலுங்கன்	தெலுங்கச்சி
வடுகன்	வடுகச்சி

அன் என்று முடியும் ஆண்பாற் பெயர்கள் **ச்சி** என்று முடிந்து பெண்பாற் பெயர்களாயின.

ஆண்பால்	பெண்பால்
(6) மறவன்	மறத்தி
குறவன்	குறத்தி
உழவன்	உழத்தி
கிழவன்	கிழத்தி (உரிமையுடையவள்)

அன் என்று முடிகின்றவை **த்தி** என்று முடிந்து பெண்பாற் பெயர்களாயின.

ஆண்பால்	பெண்பால்
(7) மதுரையான்	மதுரையாள்
குழையான்	குழையாள்
பேரான்	பேராள்

ஆன் விகுதி நின்ற இடத்தில் **ஆள்** விகுதி நின்று பெண்பாற் பெயர்களாயின.

ஆண்பால்	பெண்பால்
(8) புண்ணியவான்	புண்ணியவதி
பாக்கியவான்	பாக்கியவதி
குணவான்	குணவதி

ஆண்பாலில் **வான்** என முடிந்த பெயர்கள் பெண்பாலில் **வதி** என முடிந்துள்ளன.

ஆண்பால்	பெண்பால்
(9) வீட்டுக்காரன்	வீட்டுக்காரி
வேலைக்காரன்	வேலைக்காரி
பணக்காரன்	பணக்காரி
கூலிக்காரன்	கூலிக்காரி

காரன் என்று முடியும் ஆண்பாற் பெயர்கள் **காரி** என்று முடிந்து பெண்பாற் பெயர்களாக மாறின.

ஆண்பால்	பெண்பால்
(10) தந்தை	தாய்
அண்ணன்	அக்காள்
கணவன்	மனைவி
தம்பி	தங்கை

மேலே காட்டப்பட்டுள்ளவற்றில் சில பெயர்கள் ஆண்பாலில் ஒருவிதமாகவும், பெண்பாலில் வேறுவிதமாகவும் நின்றன.

(11) நம்பி, விடலை, கோ, வேள், குரிசில், தோன்றல், செம்மல், சேய், வள்ளல் என்னும் சொற்கள் ஆண்பாலையே குறிக்கும்.

(12) செவிலி, நங்கை, தையல், மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை என்பன பெண்பாலையே குறிக்கும்.

உயர்வுப் பன்மை

ஆசிரியன்	ஆசிரியர்
அரசன்	அரசர்
புலவன்	புலவர்
கணவன்	கணவர்
அறிஞன்	அறிஞர்
கலைஞன்	கலைஞர்

மேலே காட்டப்பட்டுள்ள இருவகை எடுத்துக் காட்டுகளும் ஒருமை எண்ணையே குறிப்பன. முதல் வகை எடுத்துக்காட்டுகளில் **அன்** விகுதி நிற்கின்றது. இரண்டாம் வகை எடுத்துக்காட்டு களில் **அர்** விகுதி நிற்கின்றது. 'அது' விகுதி பலர்பாலைக் குறிக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் இவற்றில் 'அர்' விகுதி ஒருமை எண்ணைக் குறித்தது எதனால்? உயர்வு கொடுப்பதற்காக அன்றோ! ஆகவே **உயர்வு கருதி 'அர், ஆர்' விகுதிகள் உயர் திணையில் ஒருமை எண்ணைக் குறிக்க வரும்** என அறிக.

இதற்கு **உயர்வுப் பன்மை** என்பது பெயர். நீங்கள் கட்டுரை எழுதுங்கால், ஒருவருக்கு உயர்வு கொடுக்க வேண்டும் இடங்களில் உயர்வுப் பன்மையையே வழங்கவேண்டும். சில எடுத்துக்காட்டு களைக் கீழே காண்க:—

(1) காந்தி உலகப் **பெரியார்**.

(2) ஔவையார் பெரும் **புலவர்**.

(3) சி. வி. இராமன் என்னும் **அறிஞர்** அறிவியல் துறையில் பல ஆராய்ச்சிகளைச் செய்து **வருகிறார்**.

பயிற்சி

1. திணைப் பொதுப் பெயரின் இலக்கணம் என்ன?
2. சூரியன்: இது திணைப் பொதுப் பெயர்: எவ்வாறு?
3. ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர் விகுதிகளைத் தனித் தனிக் குறிப்பிடுக.
4. கீழ்வரும் பெயர்களில் பால் காட்டிய விகுதிகளைக் குறிப்பிடுக:—

மகள், குருடி, கண்ணன், கோமான், பொன்னி, மகன், அவன்.

5. கீழ்வரும் ஆண்பாற் பெயர்களைப் பெண்பாற் பெயர்களாக மாற்றுக :—

தயிர்க்காரன், வடுகன், ஊரான், இறைவன், அழகன், பாக்கியவான், மறவன், அவன், மதுரையான்.

6. கீழ்வரும் பெண்பாற் பெயர்களுக்கு ஆண்பால் கூறுக:-

யாவள், பொன்னி, தலைவி, புண்ணியவதி, உழத்தி, பாட்டி, கூலிக்காரி, செல்வி, பெருமாட்டி, திருவாட்டி.

7. ஆண்பாற் பெயர்களாகவே வரும் சொற்களில் நான்கும், பெண்பாற் பெயர்களாகவே வரும் சொற்களில் நான்கும் எழுதுக.

8. 'உயர்வுப் பன்மை' என்பது யாது?

9. எத்தகைய இடங்களில் ஒருமை எண்ணுக்குப் பன்மை விகுதி கொடுக்கலாம்?

10. உயர்வுப் பன்மை அமைந்துள்ள வாக்கியங்களில் நான்கினை உங்கள் பாடப்புத்தகத்திலிருந்து எடுத்து வரைக.

10. இடம்: தன்மை முன்னிலைகள் கலந்து வருவதால், மூவிடப் பெயர்களும் கலந்து வருதல்

தன்மை என்பது பேசுவோன் இடத்தையும், முன்னிலை என்பது கேட்போன் இடத்தையும், படர்க்கை என்பது பேசப்படுவோன் இடத்தையும் குறிப்பிடுவன என்பதை நாம் முன்பு கண்டோம். சில இடங்களில் தன்மைப் பெயரும் முன்னிலைப் பெயரும் சேர்ந்து வரும்; தன்மைப் பெயரோடு படர்க்கைப் பெயரும் சேர்ந்து வரும்; முன்னிலை, படர்க்கை ஆகிய ஈரிடப் பெயர்களும் சேர்ந்து வரும். இங்ஙனம் வரும்போது, அவை ஒரே வினைப்

பயனிலையைக் கொண்டு முடிதல் வேண்டும். இதனைக் கீழே காண்போம் :

(1) நானும் நீயும் உண்டனம் —அம்
நானும் நீயும் உண்டாம் —ஆம்

தன்மையும் முன்னிலையும் விரவி வந்தன.

(2) நானும் அவனும் போனோம் —ஓம்
நானும் அவனும் உண்டேம் —ஏம்
நானும் அவனும் உண்பெம் —எம்

தன்மையும் படர்க்கையும் விரவி வந்தன.

(3) நானும் நீயும் அவனும் உண்கும் —கும்
நானும் நீயும் அவனும் உண்டும் —டும்
நானும் நீயும் அவனும் வருதும் —தும்
நானும் நீயும் அவனும் சென்றும் —றும்

தன்மையும் முன்னிலையும் படர்க்கையும் விரவி வந்தன.

(1) **நான்** என்பது தன்மைப்பெயர் : **நீ** என்பது முன்னிலைப் பெயர். இவை இரண்டும் விரவி வரும்போது **அம், ஆம்** என்ற விகுதிகளைக் கொண்ட தன்மைப் பன்மை வினைமுற்றைக் கொண்டு முடிந்திருத்தலைக் காண்க.

(2) நான் என்ற தன்மை இடப் பெயரோடு அவன் என்ற படர்க்கைப் பெயர் விரவி வந்துள்ளது. அவை **ஓம், ஏம், எம்** என்னும் விகுதிகளைக் கொண்ட தன்மைப் பன்மை வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளன.

(3) தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய பெயர்கள் சேர்ந்து வந்துள்ளன. அவை **கும், டும், தும், றும்** என்னுதி விகுதிகளைக் கொண்ட தன்மைப் பன்மை வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளன.

பயிற்சி

1. நானும் நீயும் சென்றேன் : இவ்வாக்கியம் தவறு. ஏன்?

2. நானும் அவனும்——. (சொல்லுதல் தொழில் அமைந்த) ஒரு சொல்லைக்கொண்டு முடித்துக் காட்டுக.

3. மூவிடப் பெயர்களும் கலந்து வருங்கால் அவற்றை முடிக்கும் வினைமுற்றின் விகுதிகள் யாவை?

11. வேற்றுமை

உருபும் பொருளும் சிறிதளவு

வேற்றுமை எட்டு வகைப்படும் என்பதை முன் வகுப்பிலேயே படித்தீர்கள்.

1. முதல் வேற்றுமை

(1) கண்ணன் **வந்தான்**—(வினை)
(2) இவள் **கமலம்** —(பெயர்)
(3) அவர் **யார்?** —(வினு)

இவற்றில் கண்ணன், இவள், அவர் என்பன இயல்பாக அமைந்துள்ள பெயர்கள். இவ்வாறு இயல்பாகவும் எழுவாயாகவும் வரும் பெயர்கள் முதல் வேற்றுமைப் பெயர்கள். இவை மேலே காட்டியவாறு முறையே வினை, பெயர், வினு என்பவற்றுள் ஒன்றைப் பயனிலையாகக் கொள்ளும். இவ் வேற்றுமைக்குத் தனியுருபு இல்லை.

2. இரண்டாம் வேற்றுமை

(1) **வீட்டைக்** கட்டினான் **ஐ**—ஆக்கல்
(2) காட்டை **அழித்தான் ஐ**—அழித்தல்
(3) ஊரை அடைந்தான் **ஐ**—அடைதல்

இவ்வாறு 'ஐ' உருபு செயப்படுபொருளில் வரும். இவ்வுருபு **ஆக்கல், அழித்தல், அடைதல்** முதலிய பல பொருள்களில் வரும்.

3. மூன்றும் வேற்றுமை

(1) மண்ணால் செய்யப்பட்ட பானை
ஆல்—கருவி.
(2) தட்டானால் செய்யப்பட்ட மோதிரம்
ஆன்—கருத்தா.
(3) தந்தையொடு மகன் வந்தான்—ஒடு
தந்தையோடு மகன் வந்தான்—ஓடு
உடனிகழ்ச்சி.

உருபுகள் :—**ஆல், ஆன், ஒடு, ஓடு.**
பொருள் :—**கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி.**

4. நான்காம் வேற்றுமை : இதன் உருபு கு.

(1) ஏழைக்கு உணவு கொடு—கொடை
(2) பாம்புக்குப் பகை கருடன்—பகை
(3) கபிலனுக்கு நண்பன் பரணன்—நட்பு

இவ்வாறு நான்காம் வேற்றுமை உருபு **கொடை, பகை, நட்பு** முதலிய பல பொருள்களில் வரும்.

பரிசின் **பொருட்டுப்** பாடினான்—பொருட்டு
கூலியின் **நிமித்தம்** வேலை செய்தான்—
நிமித்தம்
புகழுக்**காகப்** பாடினான்—ஆக

இவ்வாறு பொருட்டு, நிமித்தம், ஆக என்பன நான்காம் வேற்றுமையின் சொல்லுருபுகளாக வரும்.

5. ஐந்தாம் வேற்றுமை

(1) மதுரை**யின்** நீங்கினான்—நீங்கல்
(2) தா**யில்** அன்புடையாய்-(இல்-போல)
—ஒப்பு
(3) சென்னை**யின்** வடக்கு நெல்லூர்—எல்லை

இவ்வாறு ஐந்தாம் வேற்றுமை உருபுகளாகிய இன், இல் என்பன **நீங்கல், ஒப்பு,** எல்லை முதலிய பொருள்களில் வரும். இவ்வேற்றுமைக்குச் சில சொல்லுருபுகள் உண்டு.

(1) ஏணியினின்று இறங்கு—நின்று
(2) ஊரிலிருந்து சென்றான்—இருந்து
(3) கண்ணனைப் பார்க்கிலும் குமரன் சிறியவன்—பார்க்கிலும்
(4) அல்லியைக் காட்டிலும் தாமரை நல்லது—காட்டிலும்

இவற்றில் வந்துள்ள **நின்று, இருந்து, பார்க்கிலும், காட்டிலும்** என்பன இவ்வேற்றுமையின் சொல்லுருபுகள்.

6. ஆறும் வேற்றுமை

(1) இது கண்ண**னது** புத்தகம் — அது
(2) அவை என் பெட்டிகள் — அ

இங்கு வந்துள்ள **அது, அ** என்பன ஆறும் வேற்றுமை உருபுகள். **அது**—ஒருமையில் மட்டும் வரும். **அ**—பன்மையில் மட்டும் வரும். ஆனால் 'அ' உருபு பேச்சு வழக்கில் இல்லை.

(1) இது **என்னுடைய** புத்தகம்.
(2) இவை **என்னுடைய** புத்தகங்கள்.

இவ்வாறு பேச்சுவழக்கில் 'உடைய' என்னும் சொல்லுருபே ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாக வழங்கப்படுகிறது.

இவ்வேற்றுமையின் பொருள் :—**கிழமைப் பொருள்** (கிழமை—தொடர்பு உரிமை.)

(1) என**து** கை—தற்கிழமை (தற்கிழமை—தன்னேடு தொடர்புடையது.)

(2) என**து** புத்தகம்—பிறிதின் கிழமை (பிறிதின் கிழமை—தன்னின் வேருயது.)

இவ்வாறு ஆரும் வேற்றுமை **தற்கிழமை, பிறிதின் கிழமைப்** பொருள்களில் வரும்.

7. ஏழாம் வேற்றுமை

(1) வண்டி**யில்** மூட்டை இருக்கிறது—இல்

(2) என்னி**டம்** பழம் இருக்கிறது—இடம்

(3) மரத்தின்**கண்** கிளி இருக்கிறது—கண்

இல், இடம், கண்—ஏழாம் வேற்றுமை உருபுகள்,

(1) கையின்**கண்** விரல்—தற்கிழமை

(2) விரலின்**கண்** மோதிரம் — பிறிதின் கிழமை.

இவ்வாறு ஏழாம் வேற்றுமை உருபுகள் இடத் **தற்கிழமை, பிறிதின் கிழமைப்** பொருள்களில் வரும்.

8. எட்டாம் வேற்றுமை

எட்டாம் வேற்றுமை விளியாக வரும் என முன்பு கூறினேம். எட்டாம் வேற்றுமை விளித்தற் பொருளிலேயே வரும் (விளித்தல் - அழைத்தல்). இவ்வேற்றுமைக்குத் தனியுருபு இல்லை.

(1) நண்ப ! வா.

(2) தம்பி ! கேள்.

(3) செல்வ ! படு.

இவை அருகில் அல்லது **அண்மையில்** உள்ள வர்களை விளிக்க வருகின்றன. ஆகவே இவை **அண்மை விளிகள்.**

(1) நண்பா ! நீ ஏன் போகிறாய் ?
(2) தம்பீ ஓடாதே
(3) செல்வா ! வரமாட்டாயா ?

இவை சேய்மையில் (தூரத்தில்) உள்ளவர் களை விளிக்க வருகின்றன. ஆகவே இவை **சேய்மை விளிகள்.**

எட்டாம் வேற்றுமை விளிப்பொருளில் வரும். அண்மை விளி, சேய்மை விளி என்று விளி இருவகைப்படும்.

பயிற்சி

1. மூன்றும் வேற்றுமை, ஆறும் வேற்றுமை : இவற்றின் உருபுகள் யாவை ?
2. நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை : இவற் றின் சொல்லுருபுகள் யாவை ?
3. உருபில்லாத வேற்றுமைகள் யாவை ?
4. ஒவ்வோர் உருபைக்கொண்ட வேற்றுமைகள் யாவை ?
5. கருத்தாப் பொருள் என்பதை விளக்குக.
6. முதல் வேற்றுமை எவற்றைக் கொண்டு முடியும் ?
7. இராமன் அவன்
   இது ஏது
   குமரன் இருந்தான்
   குகன் வந்தான்
   கடவுள் ஒருவர்
   இவன் யார்
   கண்ணன் தூங்குகிறான்
   பெண் இவள்

மேலே காட்டப்பட்டுள்ள வாக்கியங்களின் பயனிலைகளைப் பொறுக்கி எடுத்து, கீழ்க்கண்ட அட்டவணையில் வகைப் படுத்திக் காட்டுக :—

வினைப் பயனிலை	பெயர்ப் பயனிலை	வினாப் பயனிலை

8. செயப்படுபொருளின் இலக்கணம் யாது?

9. கீழே சில எடுத்துக்காட்டுகளும், அவை குறிக்கும் வேற்றுமையும் பொருளும் இரண்டு வரிசையில் முறை மாற்றித் தரப்பட்டிருக்கின்றன. அவற்றை ஆராய்ந்து, எந்த எடுத்துக் காட்டு எந்த வேற்றுமைப் பொருளுக்கு ஏற்றது என்று கண்டறிந்து, அந்த எடுத்துக்காட்டின் எண்ணை, ஏற்ற வேற்றுமைப் பொருளுக்குப் பக்கத்திற் போட்டுப் பொருத்திக் காட்டுக :—

(1) ஆசிரியரோடு மாணவர் வந்தார்—ஆறும் வேற்றுமைப் பிறிதின் கிழமைப் பொருள்.

(2) கோடரியால் மரம் வெட்டப்பட்டது—மூன்றும் வேற்றுமைக் கருவிப் பொருள்.

(3) வீட்டை இடித்தான்—நான்காம் வேற்றுமைக் கொடைப் பொருள்.

(4) பாவலருக்குப் பரிசில் வழங்கினர்—இரண்டாம் வேற்றுமை அழித்தற் பொருள்.

(5) சொல்லினது பொருள்—ஆறும் வேற்றுமைத் தற்கிழமைப் பொருள்.

(6) தாயிற் சிறந்ததொரு கோயில் இல்லை—ஐந்தாம் வேற்றுமை எல்லைப்பொருள்,

(7) மணியின்கண் ஒளி—நான்காம் வேற்றுமை நட்புப் பொருள்.

(8) பாட்டைப் பாடினாள்—மூன்றும் வேற்றுமை உடனிகழ்ச்சிப் பொருள்.

(9) மதுரையின் வடக்கு திருச்சிராப்பள்ளி—ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருள்.

(10) அப்பா, யாரோ உங்களைக் கூப்பிடுகிறுர்கள்—இரண்டாம் வேற்றுமை ஆக்கப் பொருள்.

(11) பாரிக்கு நண்பன் கபிலன்—ஏழாம் வேற்றுமை (இடத்) தற்கிழமைப் பொருள்.

(12) ஆசிரியரது புத்தகம்—எட்டாம் வேற்றுமை விளிப் பொருள்.

10. நான்காம் வேற்றுமை எவ்வெப் பொருள்களில் வரும்?

11. சிவனுக்கு மகன் முருகன்: ஈண்டு நான்காம் வேற்றுமை எப்பொருளில் வந்தது? எவ்வாறு?

12. தாயில் அன்புள்ளவர் கடவுள்; காக்கையின் கரிது களாப் பழம்: ஈண்டு ஐந்தாம் வேற்றுமை எப்பொருளில் வந்துள்ளது? எவ்வாறு?

13. கற்பில் சிறந்தவள் கண்ணகி: இங்கு ஐந்தாம் வேற்றுமை எப்பொருளில் வந்துள்ளது? விளக்குக.

14. கிழமைப் பொருள்: விளக்குக.

15. தற்கிழமைக்கும், பிறிதின் கிழமைக்கும் உள்ள வேறுபாட்டை ஒவ்வோர் எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

16. உங்கள் செய்யுட் பகுதியிலிருந்து ஏழாம் வேற்றுமை உருபமைந்த வாக்கியங்களில் நான்கு வரைக.

17. ஏழாம் வேற்றுமை எப்பொருளில் வரும்?

18. இருவகை விளிகள் யாவை? விளக்குக.

B. வினைச்சொல்

ஒரு வினையைக் குறிக்கும் சொல் **வினைச் சொல்** என்பது உங்களுக்குத் தெரியும். வினைச் சொல்லை **முற்று** என்றும், **எச்சம்** என்றும் இரு வகையாகப் பிரிக்கலாம். பொருள் முற்றுப்பெற்று நிற்கும் வினைச்சொல் 'முற்று' என்றும், பொருள் முடிவுபெற ஒரு பெயரையோ, வினையையோ எதிர் பார்த்து எஞ்சி நிற்கும் வினைச்சொல் 'எச்சம்' என்றும் முன் வகுப்பில் படித்தீர்கள். அவற்றைப் பற்றித் தனித்தனியாக இப்பகுதியில் அறிவோம்:

முற்று

1. உடன்பாட்டு வினைமுற்று—எதிர்மறை வினைமுற்று

(1)

உண்டான்	நடக்கிறான்	போவான்
சென்றான்	செல்கிறான்	தின்பான்
பாடினான்	வருகின்றான்	எழுவான்

மேலே காட்டப்பட்டுள்ள வினைச் சொற்கள் முற்றுப்பெற்ற செயல்களைக் குறிக்கின்றன. ஆகவே அவை வினைமுற்றுகள். 'உண்டான்' என்ற வினைமுற்று, 'உண்ணுதல்' தொழிலின் நிகழ்ச்சியை அறிவிக்கின்றது. அவ்வாறே ஏனைய வினைமுற்று ஒவ்வொன்றும் ஒவ்வோர் தொழில் நிகழ்ச்சியைத் தெரிவிக்கின்றது. அவை தொழில் நிகழ்ச்சி உண்டென்று **உடன்படுகின்றன.** எனவே அவற்றை **உடன்பாட்டு வினைமுற்றுகள்** என்று சொல்லலாம்.

(2) வரவில்லை, வந்திலேன், வருகின்றிலேன், செய்திலேன், செய்கின்றிலேன், உண்ணான், வாரான், தின்னான், செல்லான், உண்ணலன், செய்யலன், தின்னலன், அறியலன்.

மேலே காட்டப்பட்டுள்ள சொற்களும் வினைமுற்றுகளே. அவற்றின் பொருள்களை அறிந்து கொள்ளுங்கள். அச்சொற்கள் தொழில் நிகழ்ச்சி இல்லாததை உணர்த்துகின்றன; தொழிலை **எதிர் மறுத்து** உரைக்கின்றன. இத்தகைய வினைமுற்றுகள் **எதிர்மறை வினைமுற்றுகள்** என்று பெயர் பெறும்.

உண்ணேன், செல்லேன், தின்னேன், நடவேன் என்பனவும் எதிர்மறை வினைமுற்றுகளே.

ஒரு சொல்லின் பொருளை அறிந்தே அச்சொல் உடன்பாடா, எதிர்மறையா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

தொழில் நிகழ்ச்சி உண்டென்பதை உணர்த்தும் வினைமுற்று உடன்பாட்டு வினை முற்று. தொழில் நிகழ்ச்சியை எதிர் மறுக்கின்ற வினைமுற்று எதிர்மறை வினைமுற்று.

2. செய்வினை—செயப்பாட்டுவினை

(1)

நான் இக்கட்டுரையை **எழுதினேன்.**
நீ இவ்வேலையைச் **செய்தாய்.**
முருகன் சூரனைக் **கொன்றான்.**
அரசன் இக்கோயிலைக் **கட்டினான்.**

(2)

என்னால் இக்கட்டுரை **எழுதப்பட்டது.**
உன்னால் இவ்வேலை **செய்யப்பட்டது.**
முருகனால் சூரன் **கொல்லப்பட்டான்.**
அரசனால் இக்கோயில் **கட்டப்பட்டது.**

மேலே காட்டப்பட்டுள்ள வாக்கியங்களில் முதல் வகையில் உள்ள எழுதினேன், செய்தாய், கொன்றான், கட்டினான் என்னும் சொற்களும், இரண்டாம் வகையில் உள்ள எழுதப்பட்டது, செய்யப்பட்டது, கொல்லப்பட்டான், கட்டப்பட்டது என்னும் சொற்களும் வினைமுற்றுகளே. முதல் வகையில் உள்ள ஒவ்வொரு வினைமுற்றும் செய்பவரின் (கருத்தாவின்) தொழிலை நேராய்க் குறித்துக் காட்டியது. அவற்றைச் **செய்வினை** முற்றுகள் என்னலாம். இரண்டாம் வகையில் உள்ள வினை

முற்றுகளை ஆராய்ந்து பாருங்கள் : 'என்னால் இக் கட்டுரை எழுதப்பட்டது' என்னும் வாக்கியத்தில் 'கட்டுரை' என்பது செயப்படுபொருள். கருத்தாவின் தொழில் 'எழுதுதல்'. இவ்வாக்கியத்தில் உள்ள 'எழுதப்பட்டது' என்னும் வினைமுற்று, கருத்தாவின் தொழிலைச் செயப்படுபொருள் ஏற்றதாகக் காட்டுகின்றது. ஆகவே இதைச் **செயப்பாட்டுவினை** முற்று என்னலாம். செய்யப்பட்டது, கொல்லப்பட்டான், கட்டப்பட்டது என்பனவும் செயப்பாட்டு வினை முற்றுகளாம்.

'எழுதினேன்' என்னும் செய்வினை முற்று 'எழுதப்பட்டது' என்னும் செயப்பாட்டு வினை முற்றாக ஆனபொழுது உண்டான மாறுதல்கள் யாவை? இடையில் செயப்பாட்டு வினை முற்றில் 'அ' என்னும் சாரியையும், 'படு' என்னும் விகுதியும் அமைந்துள்ளதைக் காண்க. ஆல் என்னும் இடைச் சொல்லும் வந்துள்ளது.

செய்வினைமுற்று

அரசன் கோயிலைக் **கட்டினான்**

(1) 'கோயில்' என்னும் சொல் இரண்டாம் வேற்றுமையை ஏற்று வந்தது.

(2) 'அரசன்' என்னும் கருத்தா முதல் வேற்றுமையை ஏற்றது.

செயப்பாட்டு வினைமுற்று

அரசனால் கோயில் **கட்டப்பட்டது.**

(1) 'கோயில்' என்னும் சொல் முதல் வேற்றுமையை ஏற்று வந்தது.

(2) 'அரசன்' என்னும் கருத்தா மூன்றாம் வேற்றுமையை ஏற்றது.

இவ்வாறே ஏனைய செய்வினை முற்றுகளுக்கும், செயப்பாட்டு வினை முற்றுகளுக்கும் உள்ள வேறுபாடுகளை உணர்ந்துகொள்க.

(1) செய்வினைமுற்று : செய்பவரின் (கருத்தாவின்) தொழிலை நேராகக் காட்டுவது.

(2) செயப்பாட்டு வினைமுற்று : செய்பவரின் (கருத்தாவின்) தொழிலைச் செயப்படுபொருள் ஏற்றதாகக் காட்டும். 'அ' என்னும்சாரியையும், 'படு' என்னும் விகுதியையும் ஏற்றுவரும். ஆல் என்பதும் சேர்க்கப்படும்.

3. தன்வினை—பிறவினை

(1)	(2)
ஓடினேன்	ஓட்டினேன்
செய்தேன்	செய்வித்தேன்
செய்தாய்	செய்வித்தாய்
படித்தேன்	படிப்பித்தேன்
போனாள்	போக்கினாள்
பாய்ந்தான்	பாய்ச்சினான்
உருண்டான்	உருட்டினான்
இருந்தாள்	இருத்தினாள்
எழும்பியது	எழுப்பியது

மேலே காட்டப்பட்டுள்ள இருவகையினவும் வினைமுற்றுகளே. 'நான் ஓடினேன்' என்று வரும் பொழுது ஓடியது நான்தானே! 'நான் ஓட்டினேன்' என்றபொழுது ஓடியது நானல்லவே! ஓடியது வேறொரு பொருள். அது ஓடுவதற்குக் காரணமாக இருந்தது நான்; 'ஓடினேன்' என்னும் வினைமுற்று, செய்பவன் (கருத்தா) **தானே** செய்யும் வினையைத் தெரிவிக்கின்றது. ஆகவே

ஓடினேன் என்பதைத் **தன்வினைமுற்று** என்னலாம். 'ஓட்டினேன்' என்னும் வினைமுற்று, செய்பவன் (கருத்தா) **பிறிதொன்றைக்** கொண்டு செய்வித்த வினையைத் தெரிவிக்கின்றது. ஆகவே 'ஓட்டினேன்' என்பதைப் **பிறவினைமுற்று** என்னலாம். முதற் பகுதியிலுள்ள எல்லா வினைமுற்றுகளும் தன்வினை முற்றுகள். இரண்டாவது பகுதியிலுள்ள எல்லா வினைமுற்றுகளும் பிறவினை முற்றுகள்.

(1) **தன்வினைமுற்று : செய்பவர் (கருத்தா) தாமே செய்யும் வினையைத் தெரிவிப்பது.**

(2) **பிறவினைமுற்று : செய்பவர் (கருத்தா) பிறரைக்கொண்டு செய்விக்கும் வினையைத் தெரிவிப்பது.**

பயிற்சி

1. வினைமுற்றின் இலக்கணம் யாது?

2. உடன்பாடு, எதிர்மறை : பொருள்களை எழுதுக.

3. உடன்பாட்டு வினைமுற்று, எதிர்மறை வினைமுற்று : இலக்கணங்கள் வரைக.

4. கீழ்வரும் வினைமுற்றுகளிலுள்ள உடன்பாடு, எதிர் மறைகளைத் தனித்தனி வகைப்படுத்தி,

உடன்பாடு	எதிர்மறை

என்ற அட்டவணையில் எழுதுக :—

கண்டேன், செல்வேன், போனேன், சென்றிலன், வந்திலன், நடக்கின்றேன், வருகின்றிலன், செய்கிலன், நடக்கின்றிலீர், வருவீர், வாரார், செல்வார், செல்லார், காணார், கேளார், தின்கின்றாய்.

5. கீழ்வரும் உடன்பாட்டு வினைமுற்றுகளை எதிர்மறை வினைமுற்றுகளாக மாற்றுக :—

நடந்தேன், வருவேன், விடுத்தேன், வைத்தேன், உண்பேன், தின்கின்றேன், செல்கிறேன்.

6. கீழ்வரும் எதிர்மறை வினைமுற்றுகளை உடன்பாட்டு வினைமுற்றுகளாக மாற்றுக :—

கண்டிலன், செல்கின்றிலன், நடந்திலன், காணேன், உண்ணேன், செய்யேன், காணார், கேளார், நில்லார்.

7. இராமன் இதனைப் படித்தான்.

இராமனால் இது படிக்கப்பட்டது.

மேற்காட்டிய வாக்கியங்களில் உள்ள 'படித்தான்', 'படிக்கப்பட்டது' என்னும் இரண்டு வினைமுற்றுகளுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

8. கீழ்வரும் செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டு வினை வாக்கியங்களாக மாற்றுக :—

(i) இக்கடிதத்தை நான் எழுதினேன்.
(ii) இராமன் அதைச் செய்வான்.
(iii) உணவை என் தமையன் உண்டான்.
(iv) நான் இவ்வீட்டைக் கட்டுகிறேன்.
(v) மோட்டாரை என் நண்பன் ஓட்டுகிறான்.

9. செய்வினை முற்றுக்கும், செயப்பாட்டு வினைமுற்றுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

10. தன் வினைமுற்று, பிறவினைமுற்று: இலக்கணங்களை எழுதுக.

11. பின்வருவனவற்றில் தன்வினை, பிறவினை முற்றுகளைத் தனித்தனி வகைப்படுத்தி எழுதுக :—

தன்வினை	பிறவினை

ஓடினான், வந்தாய், செய்வித்தாய், உருண்டான், கற்றேன், உண்பித்தாய், உருட்டினான், சென்றான், ஓட்டினான், படிப்பித்தான், மருண்டான், வெருட்டினான்.

12. கீழ்க்காணும் தன்வினைமுற்றுகளைப் பிறவினைமுற்று களாக மாற்றுக:—

சென்றது, தின்றது, சென்றேன், வருவேன், உருகினேன், செய்கிறேன், நடக்கின்றேன்.

13. கீழ்க்காணும் பிறவினை முற்றுகளைத் தன்வினைமுற்று களாக மாற்றுக:—

அடக்கினான், தின்பித்தான், வருவித்தான், காட்டு வித்தேன், நடத்தினான், உருக்கினாய்.

4. எச்சம்

(1)

(1) **வந்த** பையன் நின்றான்
(2) **வருகின்ற** பையன் செல்வான்
(3) **வரும்** பையன் உண்பான்
(4) **உண்ட** குழந்தை தூங்கியது
(5) **உண்ணுகின்ற** குழந்தை வளரும்
(6) **உண்ணும்** குழந்தை வரும்

(2)

(1) அவனைக் **கண்டு** பேசினேன்
(2) வள்ளி **நடந்து** சென்றாள்
(3) முருகன் **வந்து** போனான்
(4) கந்தன் **உண்ணச்** சென்றான்
(5) கண்ணன் **மூழ்க** வந்தான்
(6) நீர் **பருகப்** போயினான்

(1) முதல் வகையில் உள்ள **வந்த, வருகின்ற, வரும், உண்ட, உண்ணுகின்ற, உண்ணும்** என்பவை பெயர்ச் சொற்களைக் கொண்டு முடிவன வாகிய எஞ்சி (குறைந்து) நிற்கும் வினைச் சொற்கள். ஆகவே அவை **பெயரெச்சங்கள். பெயரைக் கொண்டு முடிவதாகிய எஞ்சி**

(குறைந்து) நிற்கும் வினைச்சொல் பெயரெச்சம் ஆகும்.

(2) இரண்டாம் வகையில் உள்ள **கண்டு, நடந்து, வந்து, உண்ண, மூழ்க, பருக** என்னும் எச்சங்கள் **வினைச்சொற்களைக்** கொண்டு முடிவன வாகிய எஞ்சி (குறைந்து) நிற்கும் வினைச் சொற்கள். ஆகவே அவை **வினையெச்சங்கள். வினையைக் கொண்டு முடிவதாகிய எஞ்சி (குறைந்து) நிற்கும் வினைச்சொல் வினை யெச்ச மாகும்.**

5. உடன்பாட்டு வினையெச்சம்—எதிர்மறை வினையெச்சம்

கீழே காட்டப்படும் இருவகை வினையெச் சங்களை ஒப்பிட்டுப் பாருங்கள் :—

(1)	(2)
கண்டு பேசினேன்	**காணது** பேசினேன்
நின்று சென்றான்	**நில்லாது** சென்றான்
உண்டு போனான்	**உண்ணது** போனான்
தின்று வந்தான்	**தின்னது** வந்தான்
படித்துத் தூங்கினான்	**படியாது** தூங்கினான்

முதல் வகையில் உள்ள வினையெச்சங்கள் தொழில் நிகழ்ச்சி உண்டென்பதை உணர்த்துகின் றன. ஆகவே அவற்றை **உடன்பாட்டு வினை யெச்சங்கள்** என்னலாம்.

இரண்டாவது வகையில் உள்ள வினையெச்சங் கள் தொழில் நிகழ்ச்சி இல்லாததை உணர்த்துகின் றன; அல்லது தொழில் நிகழ்ச்சியை எதிர்மறுக் கின்றன. ஆகவே அவற்றை **எதிர்மறை வினை யெச்சங்கள்** என்னலாம்.

(1) தொழில் நிகழ்ச்சி உண்டென்பதை உணர்த்தும் வினையெச்சம் உடன்பாட்டு வினையெச்சம்.

(2) தொழில் நிகழ்ச்சியை எதிர்மறுக்கின்ற அல்லது தொழில் நிகழ்ச்சி இல்லாததை உணர்த்துகின்ற வினையெச்சம் எதிர்மறை வினையெச்சம்.

6. உடன்பாட்டுப் பெயரெச்சம்— எதிர்மறைப் பெயரெச்சம்

கீழே தடித்த உருவில் காட்டப்பட்டுள்ள இரு வகைப் பெயரெச்சங்களை ஆராய்ந்து பாருங்கள் :

(1)

படித்த பையன் மேல்வகுப்பிற்குச் சென்றான்.
தெரிந்த கேள்வியே தேர்வில் வந்தது.
இது நான் **பார்த்த** காட்சி.
அவள் **பேசும்** மடந்தை.

(2)

படியாத பையன் மேல்வகுப்பிற்குச் செல்ல முடியாது.
தெரியாத கேள்வியே தேர்வில் வந்தது.
இது நான் **பாராத** காட்சி.
அவள் **பேசா** மடந்தை.

(1) முதல் வகையில் உள்ள **படித்த, தெரிந்த, பார்த்த, பேசும்** என்னும் பெயரெச்சங்கள் தொழில் நிகழ்ச்சி உண்டென்பதை உணர்த்துகின்றன. ஆகவே அவை **உடன்பாட்டுப் பெயரெச்சங்கள்.**

(2) இரண்டாம் வகையில் உள்ள **படியாத, தெரியாத, பாராத, பேசா** என்னும் பெயரெச்சங்கள் தொழில் நிகழ்ச்சியை எதிர்மறுக்கின்றன. ஆகவே அவை **எதிர்மறைப் பெயரெச்சங்கள்.**

பயிற்சி

1. பெயரெச்சத்திற்கும், வினையெச்சத்திற்கும் உள்ள வேறுபாடு யாது?

2. வினையெச்சத்தின் இலக்கணம் யாது?

3. கீழ்க்காணும் வாக்கியங்களில் உள்ள உடன்பாட்டு வினையெச்சங்களையும், எதிர்மறை வினையெச்சங்களையும் தொகுத்து வகைப்படுத்துக :—

(i) மாலையில் ஓடி விளையாடினேன்.
(ii) கன்றுக்குட்டி துள்ளி ஓடும்.
(iii) நொண்டி நாய் ஓடாது நின்றது.
(iv) என்னைப் பாராது சென்ற நண்பனை நான் கோபித்துக்கொண்டேன்.

4. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள உடன்பாட்டுப் பெயரெச்சங்களை எதிர்மறைப் பெயரெச்சங்களாக மாற்றி எழுதுக:—

(i) வந்த பிள்ளை யார்?
(ii) அவனைக் கண்ட நான் ஓடினேன்.
(iii) நீ சென்ற வழி எது?
(iv) நீ படித்த புத்தகம் எங்கே?

5. கீழ்வருவனவற்றை எதிர்மறை யாக்குக :—

கண்டு, வந்து, சென்று, நின்ற, பார்த்த, கேட்ட, உண்டு, உண்ட.

III. வாக்கியம்

1. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் கண்டு பிடித்தல்

(உரை நடையில்)

(i) "பிரிட்டன் ஜெர்மனியை வென்றது."

இவ்வாக்கியத்தில் பிரிட்டன் —**எழுவாய்**
வென்றது —**பயனிலை**
ஜெர்மனி —**செயப்படுபொருள்.**

இவற்றை எவ்வாறு கண்டு பிடிக்கலாம்? மேற் கண்ட வாக்கியத்தில் பொருளை முடித்து நிற்கும் சொல் 'வென்றது' என்பது. அச்சொல் வினை முற்று என்பதும் உங்களுக்குத் தெரியும். முடித்து நிற்கும் ஒரு சொல் இல்லாமல் வாக்கியம் வராது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். ஒரு வாக் கியத்தை முடித்து நிற்கும் சொல்லே அவ்வாக்கியத் தின் பயன் நிலைத்து நிற்குமிடமாகிய பயனிலை. ஆகவே ஒரு வாக்கியத்தில் பயனிலையைக் கண்டு பிடிப்பது எளிது. எனவே ஒரு வாக்கியத்தின் உறுப்புகளை அறிந்துகொள்வதற்கு, முதலில், அவ் வாக்கியத்தின் முடிக்கும் சொல்லாகிய பய னிலையைக் கண்டு பிடிக்க வேண்டும். மேற்கண்ட வாக்கியத்தில் 'வென்றது' பயனிலை. இனிப் பயனிலைக்கு முன் '**யார்**' அல்லது '**எது**' என் பதைத் திணைக்குத் தக்கபடி வைத்துக் கேள்வி கேட்டுப் பார்த்தால் (உயர்திணைக்கு 'யார்' என் பதும், அஃறிணைக்கு 'எது' என்பதும் வைத்துக் கேட்க வேண்டும்), அதற்கு வரும் விடையே **எழு வாய்** என்பது. இங்கு, '**எது** வென்றது?' என்று

கேட்டால், **பிரிட்டன்** என்பது விடையாகிறது. இதுவே மேல் வாக்கியத்தில் **எழுவாய்.**

பயனிலைக்கு முன் **யாரை** அல்லது **எதை** என்பதைத் திணைக்குத் தக்கபடி வைத்துக் கேட்டால், அதற்கு வரும் விடையே செயப்படு பொருள். இங்கு '**எதை** வென்றது?' என்று கேட்டால், 'ஜெர்மனியை' என்பது விடையா கிறது. எனவே 'ஜெர்மனி' என்பது செயப்படு பொருள்.

(ii) "ஒருவர் செய்த உதவியை **மறவாதே**".

இவ்வாக்கியத்தில் "மறவாதே" என்பது பய னிலை. இதனை வினவினால் 'நீ' என்பது விடை வரும். 'நீ' என்பதே எழுவாய். 'நீ' என்னும் எழுவாய் வாக்கியத்தில் இருக்கிறதா? இல்லையல் லவா? இவ்வாறு எழுவாய் மறைந்து நிற்றலும் உண்டு. அது '**தோன்றா எழுவாய்**' எனப்படும். ஒரு வாக்கியத்தில் எழுவாய் மறைந்து நின்றாலும், 'பயனிலை' கட்டாயமாக வெளிப்பட்டே நிற்க வேண்டும்; இல்லையேல் வாக்கியம் இல்லை.

உரைநடையில் பெரும்பாலும் எழுவாய் முதலி லும், செயப்படுபொருள் இடையிலும், பயனிலை இறுதியிலும் வரும். வியப்பு, அழுகை, மகிழ்ச்சி முதலியன மிகுந்த காலங்களில் இம்முறைகள் மாறுவதுண்டு.

எழுவாய் முதலியன செய்யுளில் வருதல்

நீங்கள் படிக்கும் உரைநடைக்கும், படிக்கும் பாடல்களுக்கும் எவ்வளவு வேறுபாடுகள் இருக் கின்றன? செய்யுளை இயற்றுவதற்குப் பல விதிகள் உள்ளன. ஆகவே, உரைநடையில் உள்ளது போலச் செய்யுளில் எழுவாய் முதலிலும், செயப்

படுபொருள் இடையிலும், பயனிலை இறுதியிலும் வருதல் முடியாது. அவற்றின் முறைகள் மாறி யிருப்பதுடன், அவற்ருேடு தொடர்புடைய பல சொற்களும் செய்யுளில் கலந்து கிடக்கும்.

(1) " செங்கட் புலியே(று) அறப்பசித்தும் தின்ணுவாம்
பைங்கட் புனத்த பைங்கூழ்."

மேற்காட்டிய செய்யுள் அடிகளில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் கலந்து கிடக்கின்றன. உரைநடையைப்போலவே செய்யுளிலும் முதலில் பயனிலையையே கண்டு பிடிக்க வேண்டும். 'தின்ணுவாம்' பயனிலை. தின்ணுவாம் எவை? 'புலி'. ஆகவே 'புலி' எழுவாய். புலி எதைத் தின்ணு? புல்லை. 'புல்' என்னும் பொருளைத் தரும் சொல் 'பைங்கூழ்'. ஆகவே இவ்வடிகளில் 'புலி'—எழுவாய், 'தின்ணுவாம்,— பயனிலை, 'பைங்கூழ்'—செயப்படுபொருள். இவ் வடிகளில் எழுவாய் முதலிலும், பயனிலை இடையிலும், இறுதியில் செயப்படு பொருளும் வந்தமை காண்க.

(2) " கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண் களால்."

இது கம்பராமாயணச் செய்யுள் ஒன்றின் முதலடி. ஈண்டுப் பயனிலை—'கண்டனன்'; செயப்படு பொருள் கற்பினுக்கு அணி (சீதை). 'நான்' என்பது தோன்ரு எழுவாய். பயனிலை முதலிலும், செயப்படு பொருள் இடையிலும், எழுவாய் மறைந்தும் வந்தன.

இவ்வாறு செய்யுட்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவை எவ்விடத்தில் வேண்டுமாயினும் நிற்கும். முதன்முதல் பாடலின் முடிக்குஞ் சொல்லாகிய பயனிலையைக் கண்டுபிடித்துப் பிறகு, மற்றைய உறுப்புகளைக் கண்டுபிடித்தல் வேண்டும். பாடலின் கருத்தினை உணர்ந்த பிறகு எழுவாய் முதலிய உறுப்புகளை அறிவது எளிது.

பயிற்சி

1. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எவ்வாறு கண்டுபிடிப்பது?

2. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்—இலக்கணங்களை எழுதுக.

3. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் உரைநடையில் பொதுவாக எவ்வாறு நிற்கும்? செய்யுளில் எவ்வாறு நிற்கும்?

4. வாக்கியத்தில் முக்கியமான உறுப்பு எது? ஏன்?

5. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் குறிப்பிடுக:—

   (1) இங்கு வந்த பையன் யார்?
   (2) பையா! உன் பெயர் என்ன?
   (3) நான் வீடு கட்டி விளையாடினேன்.
   (4) முடியரசர் மூவரும் பறம்பு நாட்டை முற்றுகையிட்டனர்.

6. கீழ்வருவனவற்றுள் எழுவாய், செயப்படுபொருள்களின் இடங்களை மாற்றி வரைக:—

   (1) சிறுவர்கள் வேலை செய்தனர்.
   (2) புலி பசித்தாலும் புல் தின்னாது.
   (3) நீ அறத்தைச் செய்ய விரும்பு.
   (4) நீ உனது கோபத்தை அடக்கு.

7. ஒரு செய்யுளில் எழுவாய், பயனிலை முதலியவற்றை அறிவது எவ்வாறு?

8. 'தோன்றா எழுவாய்' என்பது யாது? விளக்குக.

9. பின்வரும் பாட்டிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களை எழுதுக :—

“ பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்த
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்டிங்(கு)
ஆவிதான் போயினபின்(பு) ஆரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்.”

2. சொல்லிலக்கணம்

சென்ற வகுப்பிலும், இவ்வகுப்பிலும், திணை, பால், எண், இடம், வேற்றுமை, எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றைப் படித்தீர்கள். மேலும் பெயர்ச்சொல்லின் பலவிதப் பிரிவுகளையும், வினைச்சொல்லின் பலவிதப் பிரிவுகளையும்பற்றிப் படித்தீர்கள். அவை யாவும் சொல்லின் பலவித இலக்கணங்கள். ஒரு சொல்லின் அவ்வித இலக்கணங்களைக் கூறுவதே **சொல்லிலக்கணம்** கூறுவதாகும்.

(1) பசு பாலைக் கொடுத்தது.

(2) பரதனைக் கண்ட குகன் ஓடி வந்தான்.

பசு—பெயர்ச்சொல், அஃறிணை, ஒன்றன் பால், ஒருமை, படர்க்கை, முதல் வேற்றுமை, எழுவாய், ‘கொடுத்தது’ என்னும் பயனிலைக்கு எழுவாயாக நின்றது.

பாலை—பெயர்ச்சொல், அஃறிணை, ஒன்றன் பால், ஒருமை, படர்க்கை, இரண்டாம் வேற்றுமை, செயப்படுபொருளாக வந்தது.

கொடுத்தது—வினைச் சொல், வினை முற்று, அஃறிணை, ஒன்றன்பால், ஒருமை, படர்க்கை, பயனிலை ; ‘பசு’ என்னும் எழுவாய்க்குப் பயனிலையாக நின்றது ; உடன்பாட்டு வினைமுற்று.

(2) **பரதனை**—பெயர்ச்சொல், உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, இரண்டாம் வேற்றுமை; 'கண்ட' என்பதற்குச் செயப்படுபொருளாய் நின்றது.

கண்ட—வினைச்சொல், இறந்தகாலப் பெயரெச்சம்; 'குகன்' என்னும் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிந்தது; உடன்பாட்டுப் பெயரெச்சம்.

குகன்—பெயர்ச்சொல், உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, முதல் வேற்றுமை, எழுவாய்; 'வந்தான்' என்னும் பயனிலைக்கு எழுவாயாக நின்றது.

ஓடி—வினைச்சொல், இறந்தகால வினையெச்சம்; 'வந்தான்' என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்தது; உடன்பாட்டு வினையெச்சம்.

வந்தான்—வினைச்சொல், வினைமுற்று, உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, இறந்தகாலம், பயனிலை; 'குகன்' என்னும் எழுவாய்க்குப் பயனிலையாக நின்றது; உடன்பாட்டு வினைமுற்று; தன்வினை.

(1) பெயர்ச்சொற்களுக்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமை, முடிவு என்பனவற்றைக் கூறலாம்.

(2) வினைமுற்றுகளுக்குத் திணை, பால், எண், இடம், காலம், முடிவு என்பனவற்றைக் கூறலாம்.

(3) பெயரெச்சம், வினையெச்சங்களுக்குத் திணை, பால், எண், இடம் ஆகியவை **கூறமுடியாது.** எச்சங்களுக்கு இன்ன எச்சம் என்பதையும், முடிவையுமே கூறமுடியும்.

(4) பெயர்ச்சொல் வேற்றுமையை ஏற்கும்; காலம் காட்டாது.

(5) வினைச்சொல் காலத்தைக் காட்டும்; வேற்றுமையை ஏலாது.

பயிற்சி

1. 'சொல்லிலக்கணம் கூறுதல்' என்பது யாது?

2. பெயர்ச்சொல், வினைச்சொல், எச்சம்—இவற்றிற்குத் தனித் தனியாகக் கூறவேண்டும் சொல்லிலக்கணங்கள் யாவை?

3. கீழே காணும் வாக்கியங்களில் உள்ள சொற்களுக்குச் சொல்லிலக்கணம் வரைக:—

(1) கண்ணன் கடைக்குப்போய்ப் புத்தகங்களை வாங்கினான்.
(2) என் பெயர் முருகன்.
(3) நீ சென்று வா.
(4) நான் பாடத்தைப் படித்தேன்.

IV. புணர்ச்சி

1. உயிரீற்றுச் சொற்களுக்கு முன் வல்லினம் மிகுதல்

ஆட + சொன்னான் = ஆடச்சொன்னான்
வர + செய்தான் = வரச்செய்தான்
பலா + காய் = பலாக்காய்
களா + காய் = களாக்காய்
ஆணி + பொன் = ஆணிப்பொன்
பாடி + படி = பாடிப்படி
ஈ + கால் = ஈக்கால்
தீ + கடைகோல் = தீக்கடைகோல்
வாழை + காய் = வாழைக்காய்
வாழை + பழம் = வாழைப்பழம்

மேலே காட்டப்பட்டுள்ள தொடர்களின் நிலைமொழிகள் உயிரீறு பெற்றவை. அவை வல்லின

முதன் மொழிகளுடன் புணரும்பொழுது, அவ் வல்லினம் மிகுந்தது. பெரும்பாலும் இவ்வாறு உயிரீற்றின் முன்வரும் வல்லினம் **மிகும்.**

2. அகர, இகர ஈற்று வினையெச்சங்களின் முன்னும், யகர ஈற்று வினையெச்சத்திற்கு முன்னும் வல்லினம் மிகுதல்

I. (1) வர + கண்டான் = வரக்கண்டான்
(2) உண்ண + சென்றான் = உண்ணச் சென்றான்
(3) தின்ன + தந்தான் = தின்னத்தந்தான்
(4) பாட + போனான் = பாடப்போனான்

மேற்கண்ட தொடர்களில் உள்ள நிலைமொழிகள் வினையெச்சங்கள். அகரவீற்று வினையெச்சங்களின் முன்வந்த வல்லினம் மிக்கது காண்க.

II. (1) பாடி + கேட்டேன் = பாடிக்கேட்டேன்
(2) ஓடி + சென்றான் = ஓடிச்சென்றான்
(3) நடத்தி + தந்தார் = நடத்தித்தந்தார்
(4) ஆடி + பார்த்தான் = ஆடிப்பார்த்தான்

மேலே உள்ள நிலைமொழிகள் வினையெச்சங்கள். அவை இகர ஈற்றுடன் நின்றன. வல்லினம் அவற்றோடு புணர்ந்தபொழுது மிக்கது காண்க.

III. (1) போய் + கண்டான் = போய்க்கண்டான்
(2) போய் + சேர்ந்தான் = போய்ச்சேர்ந்தான்
(3) போய் + தந்தான் = போய்த்தந்தான்
(4) போய் + பார்த்தான் = போய்ப் பார்த்தான்

யகரவீற்று வினையெச்சத்திற்கு முன் வந்த வல்லினம் மிக்கது காண்க.

3. குற்றியலுகரப் புணர்ச்சி

(1) காடு + சென்றன் = காடு சென்றன்
ஆறு + பெரிது = ஆறு பெரிது
எஃகு + கடிது = எஃகு கடிது
கடுகு + தீது = கடுகு தீது
பந்து + சிறிது = பந்து சிறிது
மார்பு + சிவந்தது = மார்பு சிவந்தது

காடு, ஆறு, எஃகு, கடுகு, பந்து, மார்பு என்பவை நிலைமொழிகள் ; குற்றியலுகரங்கள். அவற்றிற்கு முன் வந்த வல்லினம் இயல்பாயிற்று.

(2) அங்கு + போனன் = அங்குப்போனன்
இங்கு + சென்றன் = இங்குச்சென்றன்
எங்கு + பெற்றன் = எங்குப்பெற்றன்
ஆண்டு + கண்டான் = ஆண்டுக்கண்டான்
ஈண்டு + சென்றன் = ஈண்டுச்சென்றன்
ஆங்கு + பார்த்தான் = ஆங்குப்பார்த்தான்
யாங்கு + தந்தான் = யாங்குத்தந்தான்

மேலே உள்ள நிலைமொழிகள் மென்றெடர்க் குற்றியலுகரங்கள். அவை ஏழாம் வேற்றுமை இடப் பொருளில் வந்தன. அவற்றின் முன் வந்த வல்லினம் மிக்கது.

(3) வீடு + எலி = வீட்டெலி
ஆறு + ஓரம் = ஆற்றேரம்
ஆறு + பெருக்கு = ஆற்றுப்பெருக்கு
ஆடு + கால் = ஆட்டுக்கால்
முரடு + மனிதன் = முரட்டு மனிதன்
கிணறு + தவளை = கிணற்றுத்தவளை

வீடு, ஆறு, ஆடு என்பன நெடிற்றெடர்க் குற்றியலுகரங்கள். **முரடு, கிணறு** என்பன உயிர்த்

தொடர்க் குற்றியலுகரங்கள். அவை ஏனையவற்றோடு புணருங்கால் மேற்கண்டவாறு றகர, டகர ஒற்றுகள் பெரும்பாலும் இரட்டும்.

(4) கற்று + கொள் = கற்றுக்கொள்
எழுத்து + சிறிது = எழுத்துச்சிறிது
பட்டு + சேலை = பட்டுச்சேலை
எட்டு + தொகை = எட்டுத்தொகை
கட்டு + தறி = கட்டுத்தறி
பத்து + பாட்டு = பத்துப்பாட்டு
பார்த்து + போ = பார்த்துப்போ

மேலே காட்டப்பட்டுள்ள தொடர்களின் நிலைமொழிகள் வன்றொடர்க் குற்றியலுகரங்கள். அவற்றுடன் வல்லினம் புணருங்கால் வந்த வல்லினம் மிகுந்தது காண்க.

(5) விறகு + உடைத்தான் = விறகுடைத்தான்
பேச்சு + எழுந்தது = பேச்செழுந்தது
பூட்டு + எங்கே = பூட்டெங்கே
பந்து + அடித்தான் = பந்தடித்தான்
அழைப்பு + இதழ் = அழைப்பிதழ்
நன்று + ஆகும் = நன்றாகும்

குற்றியலுகரங்களுக்கு முன் உயிர் முதன் மொழிகள் புணர்ந்தன. அவ்வாறு புணருங்கால் குற்றியலுகரம் கெட்டது.

(6) செய்வது + யாது = செய்வதியாது
நடப்பது + யாது = நடப்பதியாது

குற்றியலுகரத்திற்கு முன் யகரம் புணருங்கால், உகரம் இகரமாகத் திரிந்தது. இவ்வாறு திரிந்தே குற்றியலிகரம் வருகின்றது என்பது உங்களுக்குத் தெரியும்.

4. முற்றியலுகரப் புணர்ச்சி

(1) குற்றியலுகரம் அல்லாத முற்றியலுகர ஈற்றுச் சொற்களின் முன் வரும் சொற்கள் எவ்வாறு புணரும் என்று பார்ப்போம் :

வரவு + எங்கே = வரவெங்கே
செலவு + இல்லை = செலவில்லை

முற்றியலுகரத்திற்கு முன் உயிர் வருங்கால் உகரம் கெட்டது.

(2) 'கதவு + யாது = கதவியாது' என்று முற்றியலுகரத்திற்கு முன் யகர முதன் மொழி வந்த பொழுது உகரம் இகரமாகத் திரிந்தது.

(3) அவனொடு + சென்ற = அவனொடு சென்ற
என்னொடு + போந்த = என்னொடு போந்த

(மூன்றும் வேற்றுமை உருபு 'ஒடு')

எனது + செவி = எனது செவி
உனது + கை = உனது கை

(ஆறும் வேற்றுமை உருபு 'அது')

ஏழு + கால் = ஏழுகால்
ஒரு + பொருள் = ஒருபொருள்
இரு + புறம் = இருபுறம்
அறு + பொழுது = அறுபொழுது

இவை இயல்பாயும் விகாரப்பட்டும் நிற்கும் எண்ணுப் பெயர்கள்.

(4) அது + செய்தான் = அதுசெய்தான்
இது + குறித்து = இதுகுறித்து
} சுட்டுப் பெயர்

மேலே காட்டப்பட்டுள்ளவற்றில் இருக்கும் நிலைமொழிகள் யாவும் முற்றியலுகரங்கள். அவற்றிற்கு முன் வந்த வல்லினம் இயல்பாயிற்று. மூன்

ரும் வேற்றுமை உருபு, ஆறும் வேற்றுமை உருபு, இயல்பாயும், விகாரமாயும் நிற்கும் எண்ணுப் பெயர்கள், சுட்டுப் பெயர்கள் ஆகியவற்றுக்கு (முற்றியலுகரமாக உள்ள சொற்களின்) முன் வந்த வல்லினம் இயல்பாகும் என அறிக.

(5) விடு + கணை =விடுகணை
உறு + பொருள் =உறுபொருள்

என்று வேறுவித முற்றியலுகரச் சொற்களின் முன்னும் வல்லினம் இயல்பாகும் என்பதை அறிக.

5. உடம்படுமெய்

உயிரீற்றுச் சொற்களோடு உயிர் முதன் மொழிகள் புணருங்கால், அவற்றை உடம்படுத்த வரும் மெய்க்கு உடம்படுமெய் என்பது பெயர் என்பதை முன் வகுப்பில் படித்தீர்கள். **'ய், வ்'** என்பவை உடம்படுமெய்கள் என்பது கூறப்பட்டது.

(1)	பனி + இல்லை	=பனியில்லை	யகர உடம்படுமெய்
	மணி + அழகு	=மணியழகு	
	தீ + எரிந்தது	=தீயெரிந்தது	
	ஈ + அடித்தான்	=ஈயடித்தான்	
	களை + எடுத்தான்	=களையெடுத்தான்	
	சுளை + எடு	=சுளையெடு	

மேலே காட்டப்பட்டுள்ள நிலைமொழிகளின் ஈற்றில் இ, ஈ, ஐ என்னும் உயிரெழுத்துக்கள் உள்ளன. அவற்றுடன் உயிர் புணருங்கால் இடையே **யகர உடம்படுமெய்** வந்தது காண்க.

(2) பல+அணி =பலவணி
சில+உயிர் =சிலவுயிர்
பலா+இலை =பலாவிலை
மா+இலை =மாவிலை
மது+உண்டு =மதுவுண்டு
பூ+எடுக்க =பூவெடுக்க
} வகர உடம்படு மெய்

மேலே காட்டப்பட்டுள்ள நிலைமொழிகளின் ஈற்றில் இ, ஈ, ஐ, ஏ என்னும் உயிர்களை ஒழித்த **ஏனை உயிர்கள்** உள்ளன. அவற்றுடன் உயிர் புணருங்கால், இடையே வகரம் உடம்படுமெய்யாக வந்தது.

(3) சே+அடி =சேயடி, சேவடி
கண்ணனே+அழகன் =கண்ணனேயழகன்
சே+உழுதது =சேவுழுதது

ஏகார ஈற்றின் முன் உயிர் புணருங்கால், **யகரமும் வகரமும்** உடம்படுமெய்யாக வந்தன.

(1) இ, ஈ, ஐ என்னும் உயிரீற்று மொழிகளுடன் உயிர் புணருங்கால் இடையே **யகரம்** உடம்படு மெய்யாக வரும்.

(2) அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் உயிரீற்று மொழிகளுடன் உயிர் புணருங்கால் இடையே **வகரம்** உடம்படுமெய்யாக வரும்.

(3) 'ஏ' என்னும் ஈற்று மொழியுடன் உயிர் புணருங்கால் இடையே **யகரமும் வகரமும்** உடம்படு மெய்களாக வரும்.

6. ண், ன், ல், ள் முன் தகரம் திரிதல்

மண் + தீது = மண்டீது ஆண் + தகை = ஆண்டகை	ணகரத்தின் முன் தகரம் டகரமாயிற்று.
அவன் + தந்தை = அவன்றந்தை வான் + தோய்ந்த = வான்றோய்ந்த	னகரத்தின் முன் தகரம் றகரமாயிற்று.
நெல் + தந்தான் = நெற்றந்தான் கல் + தீது = கற்றீது	லகரத்தின் முன் தகரம் றகரமாயிற்று.
எள் + துணை = எட்டுணை முள் + தீது = முட்டீது	ளகரத்தின் முன் தகரம் டகரமாயிற்று.

நிலை மொழிகளின் ஈற்றில் **ண், ன், ல், ள்,** என்பன நின்றன. அவற்றுடன் தகர முதன் மொழிகள் புணர்ந்தன. அவ்வாறு புணருங்கால் வருமொழியின் தகரம் றகரமாகவும், டகரமாகவும் திரிந்தது காண்க.

(1) ணகர, ளகர ஈற்றுச் சொற்களின் முன் தகரம் வந்தால் அத்தகரம் டகரமாகத் திரியும்.

(2) னகர, லகர ஈற்றுச் சொற்களின் முன் தகரம் வந்தால் அத்தகரம் றகரமாகத் திரியும்.

பயிற்சி

1. புணர்த்திக் காட்டுக :—

தின்ன + சென்றான் ; கோழி + கால் ; நான்கு + பேர் ; நின்று + போனான் ; ஓடி + போ ; வந்து + சேர் ; போய் + கொடு ; ஆறு + சிறிது ; காடு + எருமை ; எலும்பு + ஒடிந்தது ; என் + தந்தை ; வயிறு + கடும்பு ; விலா + ஒடிந்தது.

2. பிரித்துக் காட்டுக :—

முட்டீது, கற்றீது, எட்டுணை, கோயில், வருவதியாது, தீதாகும், பத்தானால், பூட்டுடைந்தது, குருட்டுக்கண், வண்டியோட்டினான்.

3. யகர உடம்படு மெய் எப்பொழுது வரும் ?

4. வகரவுடம்படு மெய் வந்த சொற்றொடர்களில் ஆறு வரைக.

5. கீழ்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ளவை தவருகப் புணர்ந்துள்ளன. அவற்றைத் திருத்தி எழுதுக :—

(1) என்னைக் **கண்டப்பையன்** ஓடினன்.

(2) நான் **வாழைகாய்** வாங்கினேன்.

(3) என் தங்கை **பூயெடுக்கத் தோட்டத்திற்கு** சென்ருள்.

(4) காணமற்போன குழந்தையை என் நண்பன் **தேடிபிடித்து** அழைத்து வந்தான்.

V. அணி

'அணி' என்ற சொல்லுக்கு 'அழகு' என்பது பொருள். அழகிய பொருள்களை எல்லோரும் விரும்புவார்களன்றே? அவ்வாறே அழகிய பாடல்களை யாவரும் விரும்பிப் படிப்பார்கள். செய்யுளுக்கு அழகு செய்வதே 'அணி' என்று சொல்லப் படும். புலவர்கள் செய்யுளுக்குப் பல விதங்களில் அணி (அழகு) செய்வர். பாடலின் சொற்களிலும், பொருள்களிலும் **அணி** செய்வது வழக்கம்.

உவமை, உருவகம்

(1)

சந்திரன் **போன்றது** முகம்.

புலி **போலப்** பாய்ந்தேன்.

முத்து**ப்போன்றது**பல்.

பவளம் **போன்றது** வாய்.

(2)

கைம்மலர் சிவந்தது.

முகத்தாமரை மலர்ந்தது.

இசையமுதம் கேட்டது.

கண்மலர் விழித்தான்.

1. மேலே காட்டப்பட்டுள்ள இருவகை வாக்கியங்களில் முதல் வகையை ஆராய்ந்து பாருங்கள். 'சந்திரன் போன்றது முகம்' என்பதில் சந்திரன் வேறு; முகம் வேறு. முகம் சந்திரனைப்போல் இருக்கிறது. முதல் வகையில் உள்ள ஏனைய வாக்கியங்களிலும் இவ்வாறே பொருள் கொள்ள வேண்டும். நான் வேறு, புலி வேறு; முத்து வேறு, பல் வேறு; பவளம் வேறு, வாய் வேறு; ஒன்றைப் போல் ஒன்றிருக்கிறது என்றுதான் அவ்வாக்கியங்களில் சொல்லப்பட்டுள்ளது. ஒன்றுக்கு மற்ருென்று **உவமையாகக்** காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு ஒன்றுக்கு மற்ருென்றை உவமையாகக் காட்டுவதே **உவமை அணி** ஆகும். காட்டப்படும் உவமைக்கு **உவமை** என்றும், எப்பொருளைச் சிறப்பிக்க நினைக்கின்ருேமோ அதற்குப் **பொருள்** என்றும் பெயர். சந்திரன், புலி, முத்து, பவளம் என்பன உவமைகள். முகம், நான், பல், வாய் என்பன பொருள்கள். போல் என்பது **உவம உருபு** என்று பெயர் பெறும்.

2. இரண்டாவது வகை எடுத்துக்காட்டுகளை இனி ஆராய்வோம்: '**கைம்மலர்** சிவந்தது' இங்கு, 'மலர்போன்ற மெல்லிய கை' என்பதைப் புலவர் மாற்றி, கையை மலராகவே கூறுகின்ருர். அவ்வாறே ஏனைய வாக்கியங்களிலும் முகம்—தாமரையாகவும், இசை—அமுதமாகவும், கண்—மலராகவும் கூறப்பட்டுள்ளன. இவற்றுக்கு முறையே கையாகிய மலர், முகமாகிய தாமரை, இசையாகிய அமுதம், கண்ணுகிய மலர், என்று பொருள் கூற வேண்டும். இவ்வாறு உவமையைப் பொருளாகவே கூறுவது '**உருவகம்**' எனப்படும். இத்தகைய

உருவகம் ஒரு பாட்டில் அமைவதை **'உருவக அணி'** என்பர்.

உவமை அணிக்கும், உருவக அணிக்கும் உள்ள வேறுபாடுகள்:

உவமையணி	உருவக அணி
(1) உவமை முன்னும் பொருள் பின்னுமாக நிற்கும்.	(1) பொருள் முன்னும் உவமை பின்னுமாக நிற்கும்.
(2) உவமை வேறு, பொருள் வேறு என்பது தெரியுமாறு கூறுவது.	(2) உவமையும், பொருளும் ஒன்றென்று கூறுவது.
(3) போல, அன்ன முத முதலிய உவம உருபுகளுள் ஒன்று உவமைக்கும் பொருளுக்கும் இடையில் மறைந்தோ, வெளிப்பட்டோ நிற்கும்.	(3) உவம உருபுகள் இரா. 'ஆகிய' போன்ற சொற்கள் இடையே மறைந்தோ, வெளிப்பட்டோ நிற்கும்.

(1) இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

'ஒருவன் இனிய சொற்களைக் கூறாமல் கடுஞ் சொற்களைச் சொல்லுவது, ஒரு மரத்தில் இனிய கனிகள் இருக்கும்பொழுது, அவற்றை விடுத்து, துவர்க்கின்ற காயைப் பறிப்பது போன்றது' என்பதே இக்குறளின் கருத்து.

உவமை	பொருள்	உவம உருபு
கனி	இன்சொல்	அற்று
காய்	கடுஞ்சொல்	(போன்றது)

இக்குறட்பாவில் **உவமையணி** உள்ளது காண்க.

(2) "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்."

'இறைவனின் அடியாகிய தெப்பத்தைச் சேர்ந்தவர் பிறவியாகிய பெருங்கடலை நீந்திக் கரை ஏறுவர். இறைவன் அடி சேராதார் நீந்தார்' என்பது இக்குறளின் கருத்து.

பொருள்	**உவமை**
பிறப்பு	கடல்
(இறைவன்) அடி	(தெப்பம்)

இக்குறட்பாவில் **உருவக அணி** வந்துள்ளது காண்க.

பயிற்சி

1. அணியாவது யாது?
2. உவமை, உருவகம் ஒவ்வொன்றுக்கும் இலக்கணம் வரைக.
3. உவமைக்கும், உருவகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
4. உவம உருபுகளில் இரண்டு எழுதுக.
5. பின்வரும் உவமைகளை உருவகமாக மாற்றுக :—
   (1) மேகம் போன்ற பாரி, (2) புலி போன்ற வீரன், (3) சிங்கம் போன்ற சீவகன், (4) யானை போன்ற கட்டியங்காரன்.
6. கீழ்வரும் குறட்பாக்களுள் உள்ள அணிகளைக் கூறித் தனித்தனியே விளக்குக :—
   (1) "குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
   கணமேயும் காத்தல் அரிது."
   (2) "இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
   ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்."

மொழிப் பயிற்சி
(LANGUAGE EXERCISE)

I. வாக்கிய வகை

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் மூன்றும் சேர்ந்து, அல்லது, எழுவாய் பயனிலை இரண்டு மட்டும் சேர்ந்து வந்து, ஒரு முற்றுப் பெற்ற கருத்தைத் தெரிவிப்பது வாக்கியமாகும் என்று முன் வகுப்பில் படித்திருக்கிறீர்கள். இப்பொழுது வாக்கியங்களின் சில வகைகளைப் பார்ப்போம்:

வாக்கியங்களை, அவை கொண்டுள்ள பொருள் வகைகளை முன்னிட்டுப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவற்றைக் கீழே காண்க :—

1. செய்தி வாக்கியம்

(i) சாலையில் நடந்து போகும்போது, மாணவர்கள் இடப்பக்க ஓரத்திலேயே ஒழுங்காகப் போகவேண்டும்.

(ii) ஆண்டுத் தேர்வுகள் முடிந்த பின்னர், கோடை விடுமுறை தொடங்குகிறது.

இவ்வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும், ஒரு செய்தி தெளிவாக, உறுதியுடன், ஐயமின்றித் தெரிவிக்கப்படுகின்றது. இவற்றுள் சரி என்று உடன்படுகிறது, அல்லது ஆம் என்று ஒத்துக்கொள்வது, அல்லது உண்டு என்று ஒத்துக்கொள்வது போன்ற கருத்து வருகின்றமையால், இவை **உடன்பாட்டு வாக்கியங்கள்** ஆகும். எனவே, **ஒரு செய்தியைத் தெளிவாக, உறுதியுடன் ஐயமின்றித் தெரிவித்து, சரி, ஆம், உண்டு என்று ஒத்துக்**

கொண்டு உடம்படுவதைப்போன்ற கருத்தை உடைய வாக்கியம் உடன்பாட்டுச் செய்தி வாக்கியம் என்னலாம்.

2. இனி, இவ்வாக்கியங்களில் வரும் செய்தி களை, **தவறு, இல்லை, நடக்கவில்லை** என்பன போன்று, எதிர்மறுத்து, 'போகவேண்டா, தொடங்கவில்லை' என்று முடிந்தால், அவை **எதிர்மறை வாக்கியங்கள்** ஆகின்றன. எனவே, **செய்தி வாக்கியங்களில் வரும் உடன்பாட்டுச் செய்திகள் எதிர் மறுக்கப்பட்டிருந்தால் அவை எதிர்மறைச் செய்தி வாக்கியங்கள் எனப்படும்.**

2. கட்டளை வாக்கியம்

1. (i) இடத்திற்குப்போய் உட்கார்ந்து கணக் கைப் போடு.

(ii) கடைக்குப்போய் விரைவில் இம் மருந்தை வாங்கிவா—என்பன போன்ற வாக்கியங் களில் கட்டளைகள் வருவதால், அவை **கட்டளை வாக்கியங்கள்** எனப்படும்; 'உடன்பாடு' இருந் தால் உடன்பாட்டுக் கட்டளை வாக்கியங்கள் ஆகும்.

2. "கணக்குப் போடாதே" "வாங்கி வராதே" என்று எதிர்மறுத்து வந்தால், எதிர் மறைக் கட்டளை வாக்கியங்கள் ஆகிவிடும்.

3. வினா வாக்கியம்

1. (i) நீ ஏன் இன்னும் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டவில்லை?

(ii) அப்பா ஊரில் இருக்கிறாரா?

(iii) நீ இன்று பாடம் படித்துக்கொண்டு வரவில்லையா?

இவற்றில் வினுக்கள் வந்திருப்பதைக் கவனி.

ஒரு செய்தியைப் பிறர் அறிந்திருக்கின்ருரா என்று அறியவும், ஒன்றைப்பற்றிய செய்தியை ஒருவர் அறியாதபோதும், ஒன்றைப்பற்றி ஐயம் தோன்றும் போதும், பிற இடங்களிலும், வினுவித் தெரிந்துகொள்ளும்போது வரும் (வினுக்களே உள் ளடக்கிய) வாக்கியங்கள் வினு வாக்கியங்களாம்.

இவற்றிலும் முன்போலவே உடன்பாடு, எதிர் மறை என்ற இருவகைகளேயும் அறிக.

4. உணர்ச்சி வாக்கியங்கள்

1. இவ்வளவு சிறிய பையன் இதைச் செய்து விட்டான் ! என்ன விந்தை !—வியப்பு.

2. அவர் இப்போது என்ன நிலேயில் இருக் கிருரோ !—இரங்கல்.

3. ஐயோ ! நான் எப்படி உயிர் வாழப் போகிறேன் !—அழுகை.

4. இவர் யாரோ தெரியவில்லேயே !—ஐயம்.

5. அன்பார்ந்த தோழரே ? ஆருயிரினுமினிய நண்ப !—விளி.

மேலே உள்ள வாக்கியங்களேப் படித்து அவற் றில் அடங்கிய உணர்ச்சிகளேக் கவனி.

வியப்பு, இரங்கல், அழுகை, ஐயம், அன்பு தோன்ற விளித்தல் போன்ற உணர்ச்சிகளே உள்ளடக்கி இருக்கும் வாக்கியங்கள் உணர்ச்சி வாக்கியங்கள் எனப்படும். இவற்றில் எவ்வாறு எதிர்மறையும் வரும் என்பதை அறிக. [உடன்பாட்டு வாக்கியங்களில் 'செய்திருக்கமாட் டான்,' 'இருக்கமாட்டார்,' 'உயிர் வாழ மாட் டேன்,'—என்பனபோல ஏற்ற வாக்கியங்களில்

எதிர்மறைக் கருத்துகள் வந்தால், அவை எதிர் மறைகள் ஆகிவிடுகின்றன.]

உங்கள் பாடப் புத்தகத்திலிருந்து, ஒவ்வொரு வகை வாக்கியத்திற்கும், உடன்பாடு, எதிர்மறை என்ற இரு பகுதிகளுக்கும் தனித்தனி இரண்டு எடுத்துக்காட்டு வாக்கியங்களைத் தொகுத் தெழுதுக.

II. வாக்கிய மாற்றம்

1. செய்தி—வினா வாக்கியங்கள்

இராமன் கடைக்குப் போனான்—என்பது ஒரு செய்தியைக் குறிக்கும் செய்தி வாக்கியமாகும். இதையே, ஈற்றில் வினாவைச் சேர்த்து, அவன் 'போனானா', 'இல்லையா' என அறியவேண்டி, வினாவாக அமைத்துவிட்டால், வினா வாக்கியமாக மாறிவிடுகிறது. (இராமன் கடைக்குப் போனானா?) வினாச்சொல் மொழிக்கு முதலிலும் நின்று வினா வாக்கியமாக வரும். யார் இக்கணக்கைப் போட முடியும்?)

எனவே, செய்தி வாக்கியத்தில் வரும் செய்தியை அறியவேண்டி, வினாவை ஈற்றிலோ, முதலிலோ போட்டு மாற்றினால், அது வினாவாக்கியமாக மாறிவிடும்.

பயிற்சி

கீழே கண்ட செய்தி வாக்கியங்களை வினா வாக்கியங்களாகவும், வினா வாக்கியங்களைச் செய்தி வாக்கியங்களாகவும் மாற்றுக:—

1. அப்பா சம்பளம் வாங்கிவிட்டாரா?
2. ஏன் உன் அண்ணனைப் பல நாட்களாகக் காணவில்லை?
3. இந்தப் படத்தை நாளைக்கு வரைந்துகொண்டு வருவாயோ?

4. என் அண்ணனுக்கு வேலை கிடைத்துவிட்டது.

5. என் தங்கை உடல் நலக் கேட்டினால் இன்னும் ஒரு மாதத்திற்குப் பள்ளிக்கூடத்துக்கு வரமாட்டாள்.

6. மாலையில் விளையாட நேரம் இல்லை.

2. உடன்பாடு—எதிர்மறை வாக்கியங்கள்

1. (i) நம் ஆசிரியர் அன்பும் அருளும் உடையவர்.

(ii) இன்னும் இரண்டு நாட்களில் நாங்கள் ஊருக்குப் புறப்படுவோம். இவற்றில், உள்ள செய்திகளை ஒத்துக்கொண்டு, 'ஆம்' என்று உடன்பட்டுக் கூறுவதால் **உடன்பாட்டு வாக்கியங்கள்.** இவற்றில் வரும் செய்தியை எதிர் மறுத்து 'இல்லை' என்று பொருள் படும்படி செய்தால் (உடையவர் அல்லர்; புறப்படமாட்டோம்), **எதிர்மறை வாக்கியங்களாக** மாறிவிடுகின்றன.

2. (i) எனக்கு அடிக்கடி கோபம் வராது.

(ii) நான் பணத்தை வீணாகச் செலவழிக்க மாட்டேன்.

இந்த எதிர்மறை வாக்கியங்களில், 'உண்டு' என்று பொருள் படும்படி செய்துவிட்டால் (கோபம் வரும், செலவழிப்பேன்), அவை உடன்பாட்டு வாக்கியங்களாக மாறிவிடும்.

பயிற்சி

வகைக்கு மூன்று வாக்கியங்களை எதிர்மறைக்கும் உடன்பாட்டிற்கும் தனித்தனியாகப் பொறுக்கி எழுதி, அவற்றை நேர் மாறாக மாற்றியும் காட்டுக.

3. தனி வாக்கியம்—தொடர் வாக்கியம்

இவ்விருவகை வாக்கியங்களின் இலக்கணத்தை முன்பே அறிவீர்கள்.

1. என் தம்பி ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போகிறான்; பாடங்களைப் படிக்கிறான்; வீடு திரும்புகிறான்—இது ஒரு **தொடர் வாக்கியம்.**

இதையே ஒவ்வொரு பயனிலைக்கும் தனி எழுவாய் கொடுத்து, மூன்று தனி வாக்கியங்கள் ஆக்கலாம்.

(i) என் தம்பி ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போகிறான்.

(ii) என் தம்பி பாடங்களைப் படிக்கிறான்.

(iii) என் தம்பி வீடு திரும்புகிறான்.

எனவே, **தொடர் வாக்கியத்தில் உள்ள** (முதலாவது ஒழிந்த பிற) பல **பயனிலைகளுக்கும் தனித்தனியே எழுவாய் கொடுத்து முடித்துப் பல தனி வாக்கியங்களாக மாற்றலாம்.**

2. என் தம்பி ஒழுங்காக நாள்தோறும் பள்ளிக்கூடம் போகிறான்.—இது ஒரு தனி வாக்கியம். இதை, என் தம்பி ஒழுங்கானவன்; நாள்தோறும் பள்ளிக்கூடம் போகிறான். என ஒரே எழுவாய்க்கு இரு பயனிலைகளாக்கி, இரு தனி வாக்கியங்களாகவும் மாற்றலாம்.

எனவே, **ஒரு தனி வாக்கியத்திலுள்ள கருத்தைப் பகுதிகளாகப் பிரித்து, அதற்கேற்ப, ஒரே எழுவாய்க்குப் பல பயனிலைகளை அமைத்து, தனித்தனி எழுதி ஒன்றாகத் தொடர்ந்து வர முடித்தால் தொடர் வாக்கியமாக மாற்றி விடலாம்.**

பயிற்சி

கீழ்வரும் தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாகவும், தொடர் வாக்கியங்களைத் தனி வாக்கியங்களாகவும் மாற்றுக:

1. கதிரவன் எழுந்தான்; கிரணங்களை வீசினான்.
2. கட்குடியின் தொல்லை ஒழிந்தது.
3. முருகன் ஆற்றுக்குப் போனான்; குளித்தான்; துணிகளைத் துவைத்தான்.
4. காவிரியாறு குடகு நாட்டில் தோன்றுகிறது; மைசூர் நாட்டு வழியே ஓடிவருகிறது; சோழ நாட்டில் கடலோடு கலக்கிறது.
5. தாமிரபரணி பாண்டி நாட்டிலே தோன்றுகிறது; பாண்டிநாட்டு வழியே ஓடுகிறது; பாண்டி நாட்டிலேயே கடலொடு கலக்கிறது.
6. இராசராசன் தஞ்சைப் பெருங் கோயிலைக் கட்டினான்.
7. செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்.
8. ஊருடன் ஒத்துவாழ்.
9. தமிழ்க் கழகத்தில் நீ நாளைக்குப் பேச வேண்டும்.
10. இசைப்போட்டியில் எல்லோரும் சேருங்கள்.

4. நீண்ட வாக்கியங்களைச் சிறு வாக்கியங்கள் ஆக்குதல்

வாக்கியம் எவ்வகையாகவும் (தனி, தொடர், கலவை) எப்பொருளை உள்ளடக்கியதாகவும் (செய்தி, கட்டளை, வினா, உணர்ச்சி) இருப்பினும், எளியதாயும் சிறியதாயும் இருப்பின், பொருள் நன்றாய் விளங்கும். எழுதியிருப்பதைப் படித்தால், எளிதில் பொருள் விளங்க வேண்டும். பெரிய **நீண்ட வாக்கியங்களாக இருந்தால், தனித் தனிக் கருத்தைத் தனித்தனிப் பயனிலை கொடுத்துப் பிரித்துப், பல சிறு (தனி) வாக்கி**

யங்களாகப் பல பயனிலைகள் கொடுத்து மாற்றிக்கொள்ளலாம்; இடையே ஓரிரண்டு சொற்கள் புதியனவாகவும் வரலாம்.

"கங்கைக் கரையிலே சேரன் செங்குட்டுவன் தங்கியிருந்த படைவீடு அவன் பெருமைக்கேற்ற வகையில் அமைக்கப்பட்டிருந்தது என்பது சிலப்பதிகாரத்தால் விளங்குவதாகும்." இது ஒரு நீண்ட வாக்கியம். கருத்துகளுக்கேற்பப் பிரித்துக் கீழ்க் கண்டவாறு, பல சிறு (தனி) வாக்கியங்களாக இதை மாற்றிக்கொள்ளலாம்.

(1) கங்கைக் கரையிலே சேரன் செங்குட்டுவன் தங்கியிருந்தான்.

(2) அவன் (அங்குப்) படை வீட்டில் தங்கியிருந்தான்.

(3) (அப்) படைவீடு அவன் பெருமைக் கேற்றவாறு அமைக்கப்பட்டிருந்தது.

(4) இது சிலப்பதிகாரத்தால் விளங்குவதாகும்.

பயிற்சி

இதைப்போலவே கீழ்க்கண்ட நீண்ட வாக்கியங்களைச் சிறு (தனி) வாக்கியங்களாக மாற்றுக.

(1) நாட்டின் மொழி, நாட்டின் பெருமை, நாட்டின் வளம் என்பவற்றால் இங்ஙனம் மாட்சிமை சிறந்த இத்தமிழ் நாட்டைத் தமிழ் மக்கள் மேன்மேலும் உயர்வாக்கிக்கொண்டு நல்வாழ்வில் ஓங்கி மிளிர வேண்டும்.

(2) சென்ற இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் வரையிலும், பிற நாடுகள் சிறந்த ஆடைகளுக்கு நமது நாட்டையே எதிர் பார்த்துக்கொண்டிருந்ததாகப் பழைய நூல்களிலிருந்து நாம் தெரிந்துகொள்ளலாம்.

III. வழூஉச் சொற்களும் திருத்தமும்

நாம் பேசும்போதும் எழுதும்போதும், சொற்களை, செம்மையான, திருத்தமான, வழக்கமாகப் பேசியும் எழுதியும் வரும் உருவத்திலேயே பேசியும் எழுதியும் வரவேண்டும். அப்போதுதான் மொழி திருத்தமாகவும் செம்மையாகவும் இருக்கும்; கருத்தும் விளங்கும். மாணவர்களும் பொதுமக்களும் பேச்சிலும், பின்னர் அதன் காரணமாக எழுத்திலும், பல பிழைகளைச் செய்துவிடுகின்றனர். சோம்பலினாலும், எழுத்தறிவு இல்லாததாலும், பிழைபட உச்சரிப்பதாலும், பிழைபடக் கேட்பதாலும் இப்பிழைகள் ஏற்பட்டு வேரூன்றிவிடுகின்றன. சொற்கள் உருச் சிதைந்து மருவி வழங்குகின்றன; கொச்சை(இழி) வழக்காக மாறிவிடுகின்றன.

(1) **தண்ணீர்** என்றதைத் **தண்ணி** என்கின்றனர் பெரும்பாலோர்; (2) **காட்சி** என்பதைக் **காக்ஷி** என்று எழுதுகின்றனர். இவைபோன்ற பிழைகளை (வழுக்களை) அறவே ஒழிக்கவேண்டும். ஆசிரியர்களும், பெற்றோர்களும், மற்றோர்களும் உடனுக்குடனே இவற்றைத் திருத்தி, இவற்றினிடத்தில் செம்மையான சொற்களைவைத்து வழங்கும்படி பயிற்சி அளிக்கவேண்டும். இளமையிலேயே இவ்வழுக்கள் நிலைத்துவிட்டால், பின்னர்த் திருத்துவது இயலாமற் போய்விடும். கீழ்வரும் வழுச் சொற்களைத் திருத்தி, சரியான உருவத்தில் அதற்கு நேரே எழுதுக. இவை மாணவர்களின்

கட்டுரைக் குறிப்புப் புத்தகங்களிலிருந்து திரட்டி எடுக்கப்பட்டனவாம்.

அமிஞ்சி	பாவக்காய்
அத்திம்பேர்	புஞ்சை
அமக்களம்	முளிச்சான்
ஆம்படையான்	மக்கள்கள்
ஆத்திலே	மாட்டுப் பெண்
ஆச்சு	மாதுவை
இக்குது	மொகனை
இருக்கச்சே	மொவாக்கட்டை
இம்மரம்	வந்திச்சின்னு
கண்ணுலம்	வெடிஞ்செதும்
கோமணம்	துபாஷ்
சீக்காய்	பீக்கங்காய்
சிலவு	கிழம்
சுவற்றில்	வாத்தி
நீராவிமண்டபம்	எண்ணை
தவக்களை	தாவலெ
திகட்டி	தெவமென்னு
தொங்கு	அக்கிராரம்
நஞ்சை	இதுகள்
பிருமணுள்	கேக்குதுகள்
புட்டு	கள்

IV. சொற் பொருத்தம்

(1) நான் பந்து ஆடினேன்.

(2) அண்ணன் காப்பி குடித்தான்.

இவற்றில் **பந்து ஆடினேன், காப்பி குடித்தான்** என்ற சொற்கள் ஒன்றோடு ஒன்று பொருந்திக் கருத்தைத் தெளிவாய் விளக்குகின்றன. மேலும், வழக்கமாக நம் முன்னோர்கள், எந்தப் பொருளை, எந்தச் சொல்லினால், எப்படி, விளக்கி வந்தார்களோ அதேபோல் நாமும் சொல்லவேண்டும். இதை **மரபு** என்றும் **சொற் பொருத்தம்** என்றும் கூறுவர். இதற்கு மாறாக, பந்து ஓடினேன், காப்பி சாப்பிட்டேன் என்று மரபு மாறிக் கூறக்கூடாது. எனவே, **கருத்து விளங்கும்படி, ஒரு பொருளை எந்தச் சொல்லால் வழக்கப்படி விளக்கிக் கூற வேண்டுமோ, அந்தச் சொல்லால் கூறி விளக்குவதே சொற்பொருத்தமாகும்.**

பயிற்சி

நீர் குளித்தேன், பன்றி குரைக்கிறது, வாழைக்காயைக் கறிக்கு வெட்டினான், சோறு சாப்பிட்டான், பச்சைத் தண்ணீர் குடிப்பதற்கு வேண்டும், வெந்நித் தண்ணீரில் குளித்தால் சளி பிடிக்காது, தென்றல் அடித்தது, வாடை வீசிற்று. அணிற் குட்டி, யானைப்பிள்ளை, குரங்குக் கன்று, வேலையை எடுத்துக் கொள், குளத்தைக் கட்டினார் என்ற தொடர்களில் பொருத்தமற்ற சொற்கள் இருந்தால் நீக்கிவிட்டு, பொருத்தமுற்ற சொற்களைப் போட்டுத் திருத்தி எழுதுக.

V. வாக்கியப் பிழைகளும் திருத்தமும்

முதல் அமைப்பில் வாக்கியப் பொருத்தத்தைப் பற்றிப் படித்தீர்கள். எழுவாய்கள் என்ன திணை, பால், இடம், எண்ணில் வருகின்றனவோ, அவற்றிலேயே, பயனிலைகளும் முடியவேண்டும் என்றும் படித்தீர்கள். தன்மை, முன்னிலை, படர்க்கைகள் கலந்து வந்தால், தன்மைப் பன்மை வினைமுற்றில் முடியவேண்டும் என்றும் அறிந்தீர்கள். இவை முறைமாறி வந்தால் வாக்கியங்களிற் பிழைகள் நேரும்.

1. நானும் நீயும் கடைக்குப் **போனோம்.** இது சரியாக முடிந்திருக்கிறது; தன்மையும் முன்னிலையும் கலந்து வந்தபோது தன்மைப் பன்மை வினைமுற்றில் முடிந்திருக்கிறது.

2. மாடு புல்லை **மேய்கிறது.** இதிலும், அஃறிணை, படர்க்கை, ஒன்றன்பால் (ஒருமை எண்) எழுவாய், அஃறிணை, படர்க்கை, ஒன்றன் பால் (ஒருமை எண்) பயனிலையிலேயே முடிந்தது. இதுவும் சரியான முடிபே.

ஆனால் இம்முறைகள் மாறிவந்தால் வாக்கிய முடிபு பிழைபட்டுப் போகும்.

1. நானும் நீயும் கடைக்குப் **போனார்கள்**— என்று வருதல் பிழையாகும். தன்மை முன்னிலை கலந்து வரும்போது, **போனார்கள்** என்ற படர்க்கை, பலர்பால் வினைமுற்று வந்து முடிவது சரியன்று. 'போனோம்' என்றே தன்மைப் பன்மை முடிபு வரவேண்டும்.

2. மாடு புல்லை **மேய்ந்தன**—என்பதும் சரியன்று. **மாடு** என்பது அஃறிணை, படர்க்கை, ஒன்றன்பாலாயிருக்க (ஒருமை எண்), **மேய்ந்தன** என்பது, அஃறிணை, படர்க்கையாயிருப்பினும் பலவின்பால் (பன்மை எண்) ஆகும். **மேய்ந்தது** என்ற ஒன்றன்பால் வினைமுற்றாகவே இருக்க வேண்டும்.

பயிற்சி

கீழேகண்ட வாக்கியங்களில் முடிபுப் பிழைகள் இருந்தால் அவற்றைத் திருத்தி, திருத்துவதற்குரிய காரணத்தையும் எழுதுக :

1. கல், மண், இரும்பு முதலிய பொருள்கள் கிடந்த இடத்திலேயே கிடக்கின்றது.
2. ஆடுமாடுகள், விலங்குகள் முதலியன இடம் விட்டுப் பெயர்ந்து போய் நடமாடுகின்றன.
3. அவனும், நானும், நீயும் கணக்குப் போட்டீர்கள்.
4. அவனும் நீங்களும் படக்காட்சிக்குப் போனனா ?
5. அவர்களும் இவர்களும் குளிக்கப் போனார்கள்.
6. கடைத்தெருவில் வண்டிகள் நெருக்கமாகப் போகின்றது.
7. இராமன் சீதையோடு காட்டுக்குப் போனார்.
8. முருகப்பர் தேர்வில் வெற்றி பெற்றான்.
9. சிதை இராமனோடு காட்டுக்குப் போனார்.
10. மாணவன் ஆசிரியரைக் கேள்வி கேட்டார்.
11. மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்குப் போனான்.
12. கந்தையானாலும் கசக்கிக் கட்டுங்கள்.
13. அவர்கள் என்ன, கண்ணில்லாதவனா ?
14. நீங்கள் பணத்தைக் கொடுத்துவிட்டீரா ?
15. நான் நாளைக்கு வருகிறான்.

VI. நிறுத்தக் குறிகள்

(சற்று மிகுதியாக)

முதல் அமைப்பில், பொருள் எளிதில் விளங்குமாறு எந்த எந்த இடங்களில், நிறுத்திப் படிக்க வேண்டும் என அறிவிக்கும் குறிகளே நிறுத்தக் குறிகள் என்பதையும், முற்றுப்புள்ளி, அரைப் புள்ளி, காற்புள்ளி, வினக்குறி, உணர்ச்சிக்குறி, இரட்டை மேற்கோட் குறி ஆகியவற்றையும்பற் றிப் படித்தீர்கள்.

இப்போது, முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளிகளைப்பற்றிச் சற்று மிகுதியாகவும், முக்காற்புள்ளி, ஒற்றைமேற்கோட் குறிகளைப்பற் றிப் புதிதாகவும் படிக்கலாம்.

1. முற்றுப் புள்ளி (.)

முன், வாக்கிய முடிவுகள், சொற்குறுக்கங்கள், முகவரியின் முடிவுகள் ஆகியவற்றிற்கு முடிவில் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்றும், அங்கெல் லாம் நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும் என்றும் படித்தீர்கள்.

(1) இனி, தங்கள் அன்புள்ள,

முருகன். என்று கையெழுத்திற்குப் பிற கும் முற்றுப் புள்ளி வரும்.

(2) தமிழ் கற்பிக்கும் முறைகள், உடலுறுதி, திருக்குறள் இன்பம், வேலும் வில்லும், ஊரும் பேரும் என்பனபோன்ற தலைப்புகளின் இறுதி யிலும் முற்றுப் புள்ளிகள் வரும்.

(3) நிற்க. சொல். இலக்கணம். அமைப்பு.

பூஞ்சோலை. மரம். கிளி. என்பனபோலச் சொற்கள் தனித்து நிற்கும்பொழுதும் முற்றுப் புள்ளி இடப்பெறும்.

எனவே, முதலிற் கண்டதற்கு மேலும், (1) கையெழுத்திற்குப்பின், (2) தலைப்புகளின் இறுதியில், (3) சொற்கள் தனித்து நிற்கும் இடங்களுக்குப்பின் ஆகிய இடங்களிலும் முற்றுப் புள்ளி வைத்து, நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

பயிற்சி

இவ்வகைகள் ஒவ்வொன்றுக்கும் நீங்களே நான்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

2. அரைப்புள்ளி (;)

(சற்று மிகுதியாக)

முன்னே, ஒரு எழுவாய்க்குப் பல பயனிலைகள் வரும் தொடர் வாக்கியத்தில், இடையில் வரும் ஒவ்வொரு பயனிலைக்குப் பிறகும், எதிர்மறை, உடன்பாடாக மாறுபட்டுவரும் வாக்கியங்கள் தொடர்ந்து வரும்போதும், அரைப் புள்ளி பெறுவதைப் படித்தீர்கள்.

இது வரும் வேறு ஒரு இடத்தைப்பற்றி இங்குக் கவனிப்போம் :

உ - ம். (1) ஊசியைக் காந்தம் இழுக்கும் ; உத்தமனைச் சிநேகம் இழுக்கும். (2) அகரம் முதலவெழுத்தெல்லாம் ; ஆதிபகவன் முதற்றே உலகு என எடுத்துக்காட்டு உவமை வாசகங்களின் இடையிலும் இது வரும்.

எனவே, முதலில் கண்டவற்ருேடு, **எடுத்துக் காட்டு உவமை வாசகங்களின் இடையிலும் அரைப்புள்ளி வரும். இங்கு இரண்டுமாத் திரை நேரம் நிறுத்த வேண்டும்.**

3. காற்புள்ளி (,)

முதல் அமைப்பில், **பொருள்களை எண்ணும் போதும், வினையெச்சங்களின் பின்னும், கூப் பிடும்போதும், எச்சச்சொற்றொடர்களாக வரும் போதும் காற்புள்ளி இடவேண்டும் என்றும், அங்கெல்லாம் ஒரு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும் என்றும் அறிந்தீர்கள்.** இப்போது இன்னும் காற்புள்ளி வரும் வேறு சில இடங்களைப் பற்றியும் படிப்போம்.

(1) எடுத்துக்காட்டு: நடந்த, நடக்கின்ற, நடக்கும்—என, எடுத்துக்காட்டுகள் வரும்போது காற்புள்ளிகள் வரும்.

(2) நல்லவர் கெட்டவர், ஏழை பணக்காரன், இன்னர் இனியார், ஆடவர் பெண்டிர், தோட்டி தொண்டைமான்—என இணைமொழிகள் வரும் போதும் காற்புள்ளிகள் வரும்.

(3) உடல் நலத்தைக் கண்ணும் கருத்துமாய் ஓம்பும் ஒரு இளைஞர், அதற்கு வேண்டிய முயற்சி களைச் செய்ய வேண்டும்—என நெடுந்தொடர் எழு வாயாக வரும்போதும் இக்குறி இடவேண்டும்.

(4) ஆசிரியர், என்ன இருந்தாலும், நம்மைப் போல ஒரு மனிதர்தானே—என இடைப் பிற வைப்பு வரும்போது, அதற்கு முன்னும், பின்னும் காற்புள்ளி வரும்.

(5) திருவள்ளுவர், ''நன்றி மறப்பது நன்றன்று,'' என்று கூறியுள்ளார், என மேற்கோட் குறிகளுக்கு முன்னும் பின்னும் காற்புள்ளி வரும்.

(6) அன்பார்ந்த தம்பி, மதிப்பிற்குரிய ஐயா, எனத் திருமுகங்களில் விளிக்குப் பின்னும் காற்புள்ளி வரும்.

(7) அவன் வருந்தி உழைத்தான். எனினும், பயன் பெறவில்லை.—என, இணைப்புச் சொற்களுக்குப் பின்னும் இக்குறி வரும். இணைப்புச் சொற்களாக **ஆனால், இருப்பினும், என்றாலும், ஆயினும்,** எனவே என்பவைகளும் வரும்.

(8) 1,00,000, என எண்ணின் இடங்களைக் குறிக்கும்போதும் இக்குறி வரும்.

(9) திரு. ஆலாலசுந்தரஞ் செட்டியார்
அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர்,
கிறிஸ்தவக் கல்லூரி,
தாம்பரம்.

என, முகவரிப் பெயர்களுக்கும்பின்னும், காற்புள்ளி வரும்.

எனவே, முதல் அமைப்பிற் கூறிய இடங்களுக்குமேல் எடுத்துக்காட்டுகள் வரும்போதும், இணைமொழிகள் வரும்போதும், நெடுந்தொடர் எழுவாயிலும், இடைப்பிறவரலின் முன்னும் பின்னும், மேற்கோளுக்கு முன்னும் பின்னும், திருமுக விளியிலும், இணைப்புச் சொற்களுக்குப் பின்னும், எண்ணின் இடங்களிலும், முகவரிப் பெயர்களுக்குப் பின்னும் காற்புள்ளி இட வேண்டும். நிறுத்தவேண்டும் நேரம் ஒரு மாத்திரை.

பயிற்சி

மேலே கண்ட ஒவ்வொரு வகைக்கும், நான்கு-நான்கு எடுத்துக்காட்டுகளைப் பாடப்புத்தகத்திலிருந்து தொகுத்தெழுதுக.

4. முக்காற்புள்ளி (:)

(1) அறுவகைப் பெயர்ச் சொற்களாவன: பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில்.

முத்தமிழாவன: இயல், இசை நாடகம்.—இவ்வாறு பின் விரித்துக்கூறி விளக்கும்போது **முக்காற்புள்ளி** வந்தது.

(2) குற்றியலுகரம்:

சொல்:

எழுத்தின் இலக்கணம்:

புணரியல்: இவ்வாறு சிறு தலைப்புகளுக்குப் பின்னும் இக்குறி வந்தது.

எனவே, **முன் சொன்னதைப் பின் விரித்து விளக்கும்போதும், சிறு தலைப்புகளுக்குப் பின்னும் முக்காற்புள்ளி வரும். இங்கு மூன்று மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.**

5. இரட்டை (“ ”) ஒற்றை (‘ ’) மேற்கோள் குறிகள்

ஒருவர் சொல்லியதை, அப்படியே எடுத்து மேற்கோளாகக் காட்டுமிடத்து, இரட்டைமேற்கோட் குறிகள் இடவேண்டும் என்பதைப் படித்தோம்.

இனி, ஓர் உரையாடல்.

ஆசிரியர்:—தமிழ் நாட்டில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கடைச்சங்கம் இருந்தது.

மாணவன் :—அப்போது வழங்கிய தமிழுக்குப் பெயர் என்ன ?

ஆசிரியர் :—இதுகூடத் தெரியாதா ? அப்போது வழங்கிய தமிழைத்தான் ‘ சங்கத் தமிழ் ’ என்று சொல்லுகின்றனர்.

என இருவர் உரையாடும்போது வருபவற்றை, நேரிற் பேசியதுபோலவே நேர்கூற்ருக,

“ இதுகூடத் தெரியாதா? அப்போது வழங்கிய தமிழைத்தான், ‘ சங்கத்தமிழ் ’ என்று சொல்லுகிருர்கள் ” என்று ஆசிரியர் கூறினர், என எடுத்துக் கூறும்போதும் இரட்டை மேற்கோள் குறிகள் இடவேண்டும். **எனவே நேர்கூற்ருக ஒருவர் உரையாடலை எடுத்துக் கூறுவதற்கு முன்னும் பின்னும், ஒருவர் சொல்லியதை அப்படியே எடுத்து மேற்கோளாகக் காட்டுமிடத்தும்** (முன்னும் பின்னும்) இரட்டை மேற்கோட் குறிகள் இட வேண்டும்.

இனி, ஒற்றை மேற்கோட் குறியைப் பார்ப்போம் :

(1) ‘ ஆ ’, ‘ ஈ ’, ‘ ஊ ’, ‘ ஏ ’, ‘ ஓ ’ என்பன நெடில் எழுத்துகள்.

(2) ‘ வந்தான் ’ என்ற சொல் வினைமுற்று. என, எழுத்தோ சொல்லோ தன்னைச் சுட்டும்பொழுது ஒற்றை மேற்கோட் குறி வருகிறது.

(3) ‘ ஆற்றுப்படை ’, ‘ அந்தாதி ’, ‘ பிள்ளைத் தமிழ் ’ எனச் சிறப்புப் பெயர்களைக் குறிக்கும் போதும் இது வரும்.

(4) “ மாணவர்களே, ‘ கூழானுலும் குளித்துக் குடி ’, என்னும் பழமொழியை மறந்துவிடாதீர்கள் ” என்று என் ஆசிரியர் கூறினர்.—என மேற்

கோளுக்குள் மேற்கோள் வரும்போதும் ஒற்றை மேற்கோட் குறி வரவேண்டும்.

எனவே, எழுத்து, சொல், முதலியன **தம்மைத் தாம் சுட்டும்போதும், சிறப்புப் பெயர்களைக் குறிக்கும்போதும், மேற்கோளுக்குள் மேற்கோள் வரும்போதும், ஒற்றை மேற்கோட் குறிகள் இடவேண்டும்.**

பயிற்சி

1. *கீழே கண்ட பத்தியைப் படித்து, ஏற்ற இடங்களில் நீங்கள் கற்றறிந்த நிறுத்தக் குறிகளைப் போட்டுக் காட்டுக :—*

இவற்றை யெல்லாம் பார்த்திருந்த இலகுபதனன் என்னும் காக்கை அந்தப் புறுக்களின் பின்னே போயிற்று கபோதனராஜா தன் கூட்டத்தைப் பார்த்துக் கண்டகி நதிக் கரையிலிருக்கும் சித்திரவனத்தில் என் நண்பனுன இரணியகன் என்னும் எலியரசன் இருக்கிறுன் அவன் பல்லினுலே நம்முடைய வலையை அறுப்பான் ஆகையால் அங்கே நடவுங்கள் என இதைக் கேட்டு அவை அப்படியே சென்று எலியரசன் வளையண்டை இறங்கின.

2. *உங்கள் பாடத்திலிருந்து, மேற்கோட் குறிகள் இரண்டுக்கும் நான்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தொகுத்தெழுதுக.*

VII. (1) வல்லெழுத்து மிகும் இடங்கள்

(சற்று மிகுதியாக)

முதல் அமைப்பில், **இரண்டாம் வேற்றுமைத் தொகை, நான்காம் வேற்றுமைத்தொகை, (அகர ஈற்று) நிகழ்கால வினையெச்சங்கள் (அகர ஈற்று) குறிப்பு வினையெச்சங்கள் ஆகியவற்றுக்கு முன்வரும் (க, ச, த, ப) வல்லினங்கள் மிகும் என்று படித்தீர்கள். இப்பொழுது வல்லினங்கள் மிகும்** சில இடங்களைப் பார்ப்போம் :—

1. (1) அவன் போவ**தாய்க்** கூறினுன், (2) தருவ**தாய்த்** தெரியவில்லை, (3) கெட்டகால**மாய்ப்**

போயிற்று, (4) நான்கு நாட்களில் திருப்பிக் கொடுத்துவிடுவதாய்ச் சொல். இவ்வாறு 'ஆய்' ஈற்று வினையெச்சங்களுக்கு முன் வல்லினம் மிகுந்தன.

2. (1) ஓடிப் போ, (2) திருப்பித் தா, (3) வெட்டிச் சாய்த்தான், (4) ஏங்கிக் கிடந்தான், (5) வாங்கிக் கொண்டாயா? இவ்வாறு 'இகர' ஈற்று வினையெச்சங்களின் முன்னும் வல்லினம் மிகுந்தன.

3. (1) முரட்டுப் பையன், (2) திருட்டுக் கழுதை, (3) கிணற்றுப் பாய்ச்சல், (4) ஆற்றுப் படுகை, (5) வேற்றுப் பேர்வழி; இவ்வாறு ட, ற இரட்டித்துவரும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம், நெடில் தொடர்க் குற்றியலுகரங்கட்குமுன் வந்த வல்லினம் இரட்டித்தன.

4. (1) பித்துப் பிடித்துவிட்டது, (2) பெற்றுக் கொள், (3) கற்றுக்கொண்டான், (4) பருப்புக் குழம்பு, (5) விட்டுச் சென்றான், (6) பட்டுத் துணி (7) வடக்குத் திசை—இவ்வாறு வன்றொடர்க் குற்றிய லுகரங்களுக்கு முன்வரும் வல்லினங்களும் மிகும்.

எனவே, (1) 'ஆய்' ஈற்று வினையெச்சங்கள், (2) 'இகர' ஈற்று வினையெச்சங்கள், (3) இரட்டித்து வரும் உயிர்த்தொடர், நெடில் தொடர்க் குற்றியலுகரங்கள், (4) வன்றொடர்க்குற்றியலுகரங்கள் ஆகியவற்றின் முன்வரும் வல்லினங்கள் மிகும்.

பயிற்சி

இவைபோன்ற தொடர்களை வகைக்கு நான்காக, உனது பாடப் புத்தகத்திலிருந்து தொகுத்தெழுதுக.

(2) வல்லெழுத்து மிகா இடங்கள்

(சற்று மிகுதியாக)

முதல் அமைப்பில், **ஆறு இடங்களில்— பெயரெச்சங்கள், சிலவகை வினை எச்சங்கள், விளி, வியங்கோள், எழுவாய்த் தொடர், எண்ணுப் பெயர்கள் ஆகியவற்றுக்கு முன்பு வல்லினங்கள் மிகா எனப் படித்தீர்கள். இப்போது வல்லினம் மிகாத இன்னும் சில இடங்களை அறிவோம்.**

1. (1) கல்வி கேள்வி, (2) இரவு பகல், (3) நன்மை தீமை, (4) கபில பரணர்—போன்ற **உம்மைத் தொகையில்** வல்லினம் மிகா.

2. (1) கண்டுகொண்டான், (2) வீடு செல், (3) பெய்துதா, (4) நின்று பேசினான்—இத்தகைய வன்றொடர் ஒழிந்த குற்றியலுகரங்கட்கு முன்னும் வல்லெழுத்து மிகாது.

3. (1) அதுகாலை, (2) எதுபோழ்து என, துவ்வீற்றுச் சுட்டு, வினாப் பெயர்கள் பெயரெச்சமாய் வரும்போது வல்லெழுத்து மிகாது.

4. (1) இராமனா தந்தான், (2) கண்ணனோ பேசினான், (3) முருகனே தந்தான்—என்பவற்றுள், ஆ, ஓ, ஏ என்பன, புறவினாக்களாக வந்தபோது வல்லினம் மிகா.

5. (1) தம்பி பேசினான், (2) கோதை கொடுத்தாள், (3) நம்பி கண்டான், (4) சீதை பெற்றாள், (5) காளி கோயில், (6) வில்லாளி சொன்னான்—என வரும் சில உயர்திணைப் பெயர்களுக்கு முன் வல்லினம் மிகா.

எனவே முதல் அமைப்பில் படித்தவற்ருேடு, (1) உம்மைத்தொகை, (2) வன்ருெடர் ஒழிந்த குற்றியலுகரங்கள், (3) 'து'வ் வீற்றுச் சுட்டு, விஞப்பெயர்கள் (பெயரெச்சமாய் வரும்போது), (4) ஆ, ஓ, ஏ (புற விஞக்கள்), (5) உயர்திணைப் பெயர்கள் ஆகியவற்றுக்கு முன் வல்லினம் மிகா.

இவைபோன்ற ஒவ்வொரு வகைக்கும், உன் வாக்கிலிருந்தே நான்கு நான்கு எடுத்துக்காட்டு கள் தருக.

இரண்டாம் பாகம் : கட்டுரை

I. முதல் அமைப்புக் கட்டுரைப் பகுதியைத் திருப்புதல்

நீங்கள் சென்ற ஆண்டில் பல திறப்பட்ட தலைப்புகளில் கட்டுரைப் பயிற்சி பெற்றீர்கள் அல்லவா? அவற்றை உளங்கொண்டு, கீழ்வரும் பயிற்சியிற் காணும் ஒவ்வொன்றுபற்றிய கட்டுரை வரைக :—

1. உங்கள் நூல் நிலைய நூல்களிலிருந்து படித்த கீழ்வரும் கதைகளுள் ஒன்றினைச் சுருக்கி வரைக :—

(1) பரமார்த்த குருவின் கதைகளில் ஒன்று, (2) தெனாலிராமன் கதைகளுள் ஒன்று, (3) பஞ்ச தந்திரக் கதைகளுள் ஒன்று, (4) இதோபதேசக் கதைகளுள் ஒன்று.

2. கீழ்வரும் தலைப்புகளுக்கேற்ற வருணனைப் பகுதிகளைப் படித்து எழுதுக :—

(1) குளிர்கால வருணனை, (2) வசந்தகால வருணனை, (3) அமாவாசை இரவு, (4) முழு நிலா இரவு, (5) கடற் காட்சி, (6) ஆற்றுக்காட்சி, (7) மாலைக்காட்சி, (8) காலையில் சூரியன் தோற்றம், (9) ஒரு திருமணக் காட்சி, (10) நீ பார்த்த ஒரு சிறந்த ஊர் அல்லது கட்டடம்.

3. கீழ்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை விரித்தெழுதுக :—

(1) நீ பார்த்த திருவிழா—அதற்கு வந்திருந்த கடைகள்—அங்கு நடந்த நிகழ்ச்சிகள்—சமயத் தொடர்பான செய்திகள்—உன் கருத்து.

(2) நீ பார்த்த கண் காட்சிச் சாலை—அதில் வைக்கப்பட்டிருந்த பொருள்கள்—அவைபற்றிய விளக்கம்—உனக்குத் தோன்றிய எண்ணங்கள்.

(3) செஞ்சிக் கோட்டை — அதன் பழைய வரலாறு—இன்றைய நிலைமை—இராஜகிரி முதலிய மலைகள்—அங்குள்ள கட்டடங்கள் (நூலறிவு கொண்டு எழுதுக.)

(4) அசோகன் — கலிங்கப் படையெடுப்பு — கொடிய காட்சி—அசோகன் மனமாற்றம்-பௌத்த சமயத்தைத் தழுவுதல்—பௌத்த சமயத்தைப் பரப்புதல்—அறவாழ்க்கை—' மஹா அசோகன் ' என்று பெயர் பெறுதல்.

4. கீழ் வருவனவற்றைப் பார்வையிட்டபின் அவைபற்றிக் கட்டுரை வரைக :—

(1) ஒரு சந்தை, (2) உங்கள் ஊர் திருக்குளம், (3) ஒரு பெருங் கோயில், (4) ஓர் ஊர், (5) ஒரு புகை வண்டி நிலையம், (6) ஒரு விமான நிலையம், (7) ஒரு துறைமுகம்.

5. நீ நேரிற் கண்ட ஒரு நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்புகள் தந்து கட்டுரை வரைக.

6. நீ கேட்டறிந்த ஒரு பயிரைப்பற்றிய விவரங்களைக் கட்டுரையாக விளக்கி எழுதுக.

7. சர்க்கரை செய்தல், பொத்தான் செய்தல் போன்ற ஏதேனும் ஒரு கைத்தொழில்பற்றிக் கட்டுரை வரைக.

8. பொங்கல் விழா—ரம்ஸான்—கிறிஸ்துமஸ்: இவற்றுள் ஒன்றைப்பற்றிய விவரங்களைக் கட்டுரையாகத் தீட்டுக.

9. கீழ் வருவனவற்றைச் சுருக்கிக் கூறுக; பிறகு எழுதுக :—

(1) பாரதியார் வரலாறு, (2) தமிழ் மொழியின் பழமை, (3) காந்தியடிகள் சிறப்பு, (4) இந்தியாவின் பெருமை.

10. உனது நாட் குறிப்புச் சுவடிபற்றி ஒரு கட்டுரை வரைக :—

(அதன் இன்றியமையாமை—நீ குறித்துள்ளவை—அவற்ருல் நீ அடையும் பயன்)

11. நீ கேட்ட ஒரு பெரியார் சொற்பொழிவை ஒரு கட்டுரையாக எழுதுக.

12. கீழ் வருவனபற்றிக் குறிப்புகள் இன்றிக் கட்டுரை வரைக :

(1) ஒரு தமிழ்ப் புலவர் வரலாறு, (2) உங்கள் பள்ளி விளையாட்டுகள், (3) உங்கள் பள்ளிக்கூட நாடகம், (4) உங்கள் கழக ஆண்டு விழா.

13. கீழ் வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி உங்கள் பள்ளிக்கூடச் செய்தித் தாளுக்குக் கட்டுரை வரைக :—

(1) மாணவர் பயிலத்தகும் கைத்தொழில்கள்.

(2) மாணவர் செய்யத்தகும் சமூகத் தொண்டுகள்.

(3) மாணவர், படிக்காத மூத்தோர்க்குக் கல்வி கற்பித்தல்.

(4) மாணவர் குடிமைப்பயிற்சி.

(5) பள்ளி வளர்ச்சிக்குரிய வழிகள்.

14. கீழ் வரும் கடிதங்களை எழுதிக் காட்டுக :—

(1) ஏதேனும் ஒரு அழைப்பிதழ், (2) ஒரு வணிகக் கடிதம், (3) தந்தையார்க்குக் கடிதம், (4)

நண்பனுக்குக் கடிதம், (5) கடிதம் எழுதிய நண்பனுக்குப் பதில்.

15. கீழ் வருவனபற்றி உரையாடல்களைத் தயாரிக்க :—

(1) குழந்தை காணுமற் போனதுபற்றி அக் குழந்தையின் பெற்ருேர்க்கும் அதனைக் கண்டு பிடிக்க விரும்பும் உனக்கும் உரையாடல்.

(2) சைக்கிள் விபத்திற்குள்ளான உன் தோழனுக்கும் உனக்கும் அவ்விபத்துபற்றிய உரையாடல்.

(3) நகரத்தை முதன்முதல் காணவந்த கிராமத்தானுக்கும் உனக்கும் (நகரம்—கிராமம் பற்றிய) உரையாடல்.

(4) நெற் பயிரைப்பற்றி உனக்கும் உழவனுக்கும் உரையாடல்.

இரண்டாம் அமைப்புக் கட்டுரைப் பகுதி

II. போட்டிப் பேச்சு : குறிப்புகளும் விரிவும்

உங்கள் பள்ளியில் மாணவர் தமிழ்க் கழகம் இருக்கின்றதா ? அக்கழகத்தில் நீ ஒரு பொருள் நல்லதென்றும், மற்ெருரு மாணவன் அப்பொருள் நல்லதன்று என்றும் ஒருவர்க் கொருவர் எதிர் வழக்காடலே போட்டிப் பேச்சு எனப்படும். இது மாணவர்க்குள் நடைபெறும் அன்ருட நிகழ்ச்சியாகும். கிராம வாழ்க்கையே சிறந்ததென்று கிராமத்தான் பல காரணங்களைக் காட்டிப் பேசுவான் ; நகர வாழ்க்கையே சிறந்தது என்று நகரத்தான் பல காரணங்கள் காட்டிப் பேசுவான்.

இங்ஙனம் இருவர் விவாதித்துப் பேசலே போட்டிப் பேச்சாகும். இப்பேச்சில் ஒவ்வொரு மாணவனும் தன் கட்சியைப் பலப்படுத்திப் பேசப் பல சான்று களைத் தேட முயல்கின்றான்; அதனால் பல நூல் களைப் படிக்கின்றான்; தக்காரைக் கேட்டுக் குறிப்பு களைச் சேர்த்துக்கொள்கின்றான்; இத்துறையில் அறிவு சிறக்கப்பெறுகின்றான். ஆதலின், போட்டிப் பேச்சுகளே பரந்த அறிவை உண்டாக்குகின்றன என்று சொல்லலாம்.

1. கிராம வாழ்க்கை சிறந்தது × நகர வாழ்க்கை சிறந்தது.

2. பழையன போற்றல் வேண்டும் × புதியன போற்றல் வேண்டும்.

3. நாட்டுக்கு உழைப்பவன் செலவாளி × சிக்கனக்காரன்.

4. பொருள் விலைக்கட்டுப்பாடு வேண்டும் × வேண்டா.

5. உணவுப் பங்கீட்டு முறை வேண்டும் × வேண்டா.

6. கல்வியே சிறந்தது × செல்வமே சிறந்தது.

இத்தகைய பல பொருள்பற்றிப் போட்டிப் பேச்சுகள் நிகழ்த்தலாம். பேசும் இருவரும் தத் தமக்குத் தேவைப்படும் குறிப்புகளைப் பல நூல் களைப் படித்து ஆயத்தம் செய்துகொள்ள வேண் டும். இங்கு, மாதிரியாக ஒரு போட்டிப் பேச்சுத் தரப்படுகிறது; படித்துப் பார்க்கவும்.

பெண்கல்வி தேவை × தேவை இல்லை.

தேவை என்று பேசுபவன்—கோபாலன்.

தேவை இல்லை என்று பேசுபவன் — கோவிந்தன்.

கோபாலன் பேச்சு

" கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். 'கற்றோர்' என்பது ஆண்களை மட்டும் குறிப்பதன்று; பெண்களையும் குறித்ததேயாம். மனிதப் பிறவி ஆண்-பெண் என இருவகைப்படும். ஆடவனைப் போலவே பெண்ணும் பிறந்து வளர்ந்து, கல்வி கற்று, அறிவு பெற்று, ஆடவனுடன் இல்லறம் பேணிவாழக் கடமைப்பட்டவள். வாழ்க்கை என்னும்செலவுக்கு இல்லறம் என்பது வண்டியாகும். அதனை இழுத்துச் செல்லும் மாடுகள்போன்றவரே கணவனும் மனைவியும். இரண்டு எருதுகளும் ஒரே உயரம், ஒரே பலமுடையனவாக இருந்தாற்றான் வண்டியைச் சமநிலையில் இழுத்துச் செல்ல முடியும். இன்றேல், வண்டியின் சமநிலை சாயும்; வண்டிக்கும் வண்டியில் உள்ளவர்க்கும் இடையூறு நேரும். அதுபோலக் கணவனும் மனைவியும் கற்றவராயிருப்பின், அக்கற்றோர் நடத்தும் இல்லறம் மிக்க சிறப்பினையுடையதாகும். கணவன்மட்டும் கற்றவனாய் மனைவி கல்லாதவளாய் இருப்பின், அவர்களது இல்லறம், சமநிலையற்ற வண்டிபோல நிலைகுலையும்; கணவன் ஒரு வழி—மனைவி ஒரு வழியாக நடப்பர்; அவர்கட்குள் மன ஒருமைப்பாடு ஏற்படாது; இல்லற வாழ்வும் இன்பத்துடன் இயலாது.

படித்த தாய் பெற்று வளர்க்கும் பிள்ளைக்கும், படியாத தாய் பெற்று வளர்க்கும் பிள்ளைக்கும் உள்ள வேறுபாட்டைக் கண்டேனும் பெண்கல்வி

யின் தேவையை நன்குணரலாம். படித்த தாய், தன் மகன் நாடோறும் படிக்கிருஞ, தேர்வில் என்ன மதிப்பெண் வாங்குகிருன், எந்தப் பாடத்தில் குறையுடையவனுய் இருக்கிருன் என்பவற்றை நன் குணர்ந்து, அவனை அடிக்கடி எச்சரிக்கிருள்; தாயின் மேற்பார்வையில் தனயனும் செவ்வை யாகப் படிக்கிருன். இந்த வாய்ப்பு, படிப்பற்ற தாயின் மகனுக்கு இல்லை. அவன் ஒரு கதைப் புத்தகத்தைப் பாடப்புத்தகம் என்று கூறித் தன் தாயை எளிதில் ஏமாற்றலாம்.

படித்த தாய் தன் வீட்டைத் தூய்மையாய் வைத்திருப்பாள்; உடல் நல வழிகளைத் தன் மக னுக்கு ஊட்டுவாள்; பையனுக்கு நல்ல பழக்கங்கள் உண்டாவதிலேயே கண்ணும் கருத்துமாயிருப் பாள். இங்ஙனம் படித்த தாய் தன் வீட்டையும் தன் மக்களையும் நன்முறையில் வைத்திருத்தலைப் போலக் கல்லாத தாய் வைத்திருக்க முடியுமா? இவை அனைத்தையும் சிந்தித்துப் பார்ப்பின், பெண்களுக்குக் கல்வி தேவை என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல நன்கு விளங்கும்.

கோவிந்தன் பேச்சு

பெண் மக்கள் சங்க காலத்திற் கல்வி கற்றிருந் தார்கள் என்று கூறப்படுகிறது. எல்லாப் பெண் களும் கல்வி கற்றிருந்தார்கள் என்பதற்குச் சான்று யாது? பெண், கல்வி கற்பின், பெரும் பாலும் கணவனை மதிப்பதில்லை; அதனுல் வீட்டில் பிணக்கும் பூசலுமே மிகுதியாகின்றன. பெற்ருேர் பிணக்கினுல் பிள்ளைகள் பாதிக்கப்படுகிருர்கள்.

படித்த தாயுள்ள வீடுகளை நான் பார்த்திருக்

கிறேன். பல வீடுகள், படிப்பில்லாத தாய்மார் வீடுகளைவிடத் தூய்மையற்றவையாகவே காணப் படுகின்றன; பிள்ளைகள் படிப்புத் தாய்மாரால் கவனிக்கப்படுவதே இல்லை; தாய்மார் 'டென்னிஸ்' ஆடுவதும், வெளியில் பல சங்கங்களுக்குப் போவ தும், ஊருக்கு அறிவுரை கூறுவதுமாகவே இருக் கிருர்கள். அவர்கள் தங்கள் வீட்டை நன்முறையில் வைத்துக்கொள்வதில்லை; தங்கள் கணவரையோ— பிள்ளைகளையோ சரிவரக் கவனிப்பதில்லை.

என் பாட்டியார் கல்வி இல்லாதவர்; என் பாட்டனுர் வணிகர். ஆயினும் அவர்களது ஒழுக்கம் மிகுந்த வாழ்க்கை என் தந்தையை உயர்ந்த கல்வியாளராக்கியது. என் தாயாரும் கல்வியறிவற்றவர்; ஆயினும் மிகுந்த ஒழுக்கமுடை யவர்; காலையில் 5 மணிக்கு எழுந்து நீராடிவிட்டு வேலைகளைக் கவனிப்பார்; என்னை எழுப்பிப் படிக்கச் செய்வார்; என் தந்தையார்க்கு வேண்டும் பணிவிடைகள் செய்வார்; வீட்டையும் வீட்டுப் பொருள்களையும் தூய்மையாக வைத்துக்கொள் வார்; இறைவழிபாட்டில் தலை சிறந்தவர்; எங்கள் பழக்க வழக்கங்களில் மிகவும் கண்டிப்பானவர்; எங்களைக் காலையில் நீராடச் செய்வார்; தந்தை யாரது மனமகிழும்படி நடந்துகொள்வார். அனை வரும் என் தாயாரைப் பாராட்டிப் பேசுதலை நான் கேட்டிருக்கிறேன். கல்வியுடைய தாயாரைப்பற்றி முதலிற் கூறினேன்; கல்வியற்ற என் தாயாரைப் பற்றிப் பின்னர்க் கூறினேன். இவற்றை நன்கு சீர்தூக்கிப் பாருங்கள்; முடிபு நீங்களே கூறுங்கள்.

பிள்ளை வளர்ப்புக்கும் வீட்டு வாழ்க்கைக்கும் இளமையிலிருந்து வரும் பண்பட்ட நல்லொழுக்கம்

வேண்டற்பாலதேயன்றி, கல்வி மட்டும் தேவை யாகாது. பண்பட்ட நல்லொழுக்கத்திற் பழகும் பெண்கள், கல்வி இல்லாமலே தங்கள் வாழ்க்கை யைச் சிறப்புடையதாக்குதல் கூடும் என்பது எனது கருத்து.

பயிற்சி

கீழ்வருவன குறித்துப் போட்டிப் பேச்சுகளை வரைக:—

1. தொழிற் கல்வி × ஏட்டுக் கல்வி.
2. ஆங்கிலம் கட்டாயமாக வேண்டும் × வேண்டா.
3. போர் வேண்டும் × வேண்டா.
4. படக் காட்சிகள் நன்மை பயப்பவை × நன்மை பயப்ப தில்லை.
5. இப்பகுதியின் முதலில் கொடுக்கப்பட்ட ஆறு பொருள் கள்பற்றியும் போட்டிப் பேச்சுகளை வரைக.

III. பழமொழிகளை விளக்குதல்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. நிறைகுடம் தளும்பாது.

இவை **பழமொழிகள்**. நீங்கள் இவற்றை உங்கள் நோட்டுப் புத்தகத்தில் தொகுத்து வைத் துக்கொள்ள வேண்டும்; இவற்றின் பொருளைச் சில வாக்கியங்களிலேனும் விளக்கப் பழக வேண் டும்; பின்னர் இவற்றை இடமறிந்து ஆண்டு கட் டுரையை அழகு படுத்தவேண்டும்.

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

ஒருவன் மனத்தில் நினைக்கின்ற எண்ணங் களை அவன் முகம் வெளிப்படுத்தும் என்பது இதன் பொருள். திருடிய ஒருவன் தான் திருட வில்லை என்று பலமுறை சத்தியம் செய்யினும்,

அவனே திருடினவன் என்பதை அவன் முகத்தைப் பார்த்து அறிந்துகொள்ளலாம். அவன் மனம் தான் திருடன் என்பதை நன்கறியுமாதலால், அவன் உணர்ச்சியை முகம் காட்டிவிடுகிறது. திருடாத ஒருவனைப் பலர் கூடித் திருடன் என்ருலும், அவன் முகம் மாசற்றுப் பொலிவுற்று விளங்குவதைக் காண்கிருேம். அதற்கும் இப்பழமொழி பொருத்தமானது.

2. நிறைகுடம் தளும்பாது

ஒரு குடத்தில் நீர் நிறைய இருக்கிறது. அந் நீர் தளும்பாது. மற்ருெரு குடத்தில் நீர் பாதியளவே இருக்கிறது. அந்நீர் குடத்தைத் தூக்குகையில் தளும்பும், இரைச்சலிடும்; குறைந்த அளவு நீர் என்பதை வெளிக்காட்டும். இப்பழமொழி ஏன் ஏற்பட்டது? கல்வி, அறிவு, செல்வம், ஒழுக்கம் இவை நிறையப் பெற்ற பெருமக்கள் பணிவுடையவர்களாக இருப்பார்கள்; ஆயின், இவை குறையப் பெற்ற சாதாரண மக்கள் யாவும் நிறையப் பெற்றவர் போலத் தருக்கித் திரிவார்கள்; வாய்ப்பேச்சு அளப்பார்கள். நிறை குடம் சான்ருேர்க்கு உவமையாகும்; குறை குடம் சான்ருேர் அல்லாதாருக்கு உவமையாகும். உயர்வு வந்த போது பணிவு காட்டவேண்டும் என்பது இப்பழமொழியின் கருத்தாகும்.

நீங்கள் இவ்வாறு ஒவ்வொரு பழமொழியையும் விளக்கிச் சில வரிகள் எழுதப் பழகுதல் நல்லது; இவற்றை இடமறிந்து பயன்படுத்துதல் வேண்டும். கீழ்வரும் மேற்கோள்களைக் கவனியுங்கள்.

1. கண்ணன் தான் திருடவில்லை என்று சொல்லுகிருனு? அவன்தான் திருடினவன் என்று அவன் வாய் சொல்லாவிட்டாலும் முகம் சொல்லு கிறதே! **அகத்தின் அழகு முகத்தில் தெரிகிறதே!** வேறு சான்று வேண்டுவதில்லையே!

2. வரதா, கண்ணன் தன் பெருமைகளை எல் லாம் பேசினுனே, நக்கீரன் வாய்திறந்தானு, கவ னித்தாயா! நக்கீரன் நல்லொழுக்கமிக்கவன்; நிரம் பப் படித்தவன். கண்ணன் சிறிதளவு படித் தவன்; படபடப்பு மிக்கவன்; யாவும் அறிந்தவன் போல் பேசுகின்றவன். **நிறைகுடம் தளும்பாது** என்பதற்கு நக்கீரனே தக்க சான்ருவன்.

பயிற்சி

பின்வரும் பழமொழிகளை விளக்கிச் சில வரிகள் எழுதுக; பின் அவற்றைப் பயன்படுத்திக் காட்டுக:—

1. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
2. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.
3. உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?
4. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
5. மனமிருந்தால் வழியுண்டாகும்.
6. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
7. விளையும் பயிர் முளையிலே தெரியும்.
8. கற்ருரைக் கற்ருரே காமுறுவர்.
9. காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சு.
10. இருதலைக் கொள்ளி எறும்பு.
11. குரங்கின் கைப்பட்ட பூமாலை.
12. வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவதேன்?
13. யானைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்.
14. இளங்கன்று பயமறியாது.
15. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
16. ஏழைப் பேச்சு அம்பலம் ஏருது.

IV. விளக்கக் கட்டுரை

ஓரிடத்தை அல்லது பொருளை வருணித்துக் கூறுவது **வருணனைக் கட்டுரை** என்பது. ஒரு கதையை அல்லது நிகழ்ச்சியை அப்படியே கூறுவது **வரலாற்றுக் கட்டுரை** (Narrative Essay) எனப்படும். ஒன்றைப்பற்றி நன்கு விளக்கி வரையும் கட்டுரை **விளக்கக் கட்டுரை** எனப்படும்.

1. காகிதத் தொழில்
2. தென்னைமரத்தொழில்
3. உடற் பயிற்சி
4. சிரிப்பின் சிறப்பு
5. ஆறும் அதன் பயன்களும்

இவையும், இவை போன்றவையும் விளக்கக் கட்டுரைக்குரிய பொருள்களாகும். இங்குச் 'சிரிப்பின் சிறப்பு' என்பதுபற்றிய கட்டுரை தரப்படுகிறது. அதைப்போலப் பிற பொருள்பற்றிய விளக்கக் கட்டுரைகள் எழுதப் பழகுக.

சிரிப்பின் சிறப்பு

குறிப்புகள் :—
1. சிரிப்பு
2. அதுபற்றி அறிஞர் கருத்துகள்
3. நமது அனுபவம்
4. பெருமக்கள் கண்டறிந்தவை
5. முடிவு

கட்டுரை

1. **சிரிப்பு** என்பது மகிழ்ச்சியின் அறிகுறி என்னலாம். சிரிப்பு, முகமலர்ச்சியைத் தருகிறது. சிரிக்கும் ஒருவனுக்கும் சிரியாத ஒருவனுக்கும்

உள்ள முகவேற்றுமைகொண்டே சிரிப்பின் சிறப்பினை ஒருவாறு அறியலாம்.

2. சிரிப்பு மனிதர்க்குத்தேவையானது என்பதுபற்றி மருத்துவ நிபுணர் பின் வருமாறு கூறுகின்றனர் : “சிரிப்பு உடல் உறுப்புகளுக்கு இயக்கம் தரவும், அதே வேளையில் மனிதனுக்கு மகிழ்ச்சியைத் தரவும் அமைந்துள்ள இயற்கை வசதியாகும். இதன் வேலை நுரையீரலில் தொடங்கி, அங்கிருந்து முறையே கல்லீரல், இரைப்பை முதலிய பல உள் உறுப்புகளை விரைவாய் அசையுமாறு செய்கிறது. அதனால் இருதயம் விரைவாய்த் துடிக்கிறது; அங்ஙனம் துடிப்பதால், இரத்த ஓட்டமும் காற்று உட்கொள்ளலும் வெளியிடலும் மிகுந்து, உடலுக்கு வெப்பத்தைத் தந்து, அதற்கு ஒரு வித ஒளியைத் தருகிறது. சிரிப்பினால் கண்கள் ஒளி பெறுகின்றன; மார்பு அகன்று விரிவடைகிறது. சுருங்கக் கூறின், சிரிப்பு உடலின் பல உறுப்புகளை ஒரே காலத்தில் இயங்கச் செய்து, உடல் நிலையை ஒழுங்குபடுத்துகிறது என்னலாம்.” “ஒருவன் புன்சிரிப்புக் காட்டும்போதும் சிரிக்கும்போதும் அவன் ஆயுள் வளர்கிறது,” என்று ஜெர்மன் மருத்துவர் ஒருவர் கூறியுள்ளார்.

3. சிறந்த மருத்துவர் பலர் எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் இருப்பதைக் காணலாம். அவர்களுடைய சிரிப்புத் தவழும் முகமும் இனிய பேச்சும் நோயாளிகளைப் பாதியளவு குணப்படுத்தி விடும். மருந்துகள் இரண்டாந்தரத்தனவே. நோயாளிகளிடம் மலர்ந்த முகத்துடன் பேசும் மருத்துவரையே நோயாளிகள் விரும்புகின்றனர். சிலர் சிறந்த மருந்துகள் வைத்திருப்பினும் நகை

முகம் இன்மையால், நோயாளிகள் அவர்களை விரும்புவதில்லை. நாம் இதனை அனுபவத்திற் காண்கிறோம்.

4. **எமர்சன்** என்பவர் எப்பொழுதும் மலர் முகத்துடன் காணப்பட்டனராம். அவர் முகத் தோற்றத்தைக் கண்டதும் அவருடைய நண்பர்கள் தங்கள் கவலைகளை விட்டுக் களிப்படைவாராம். ஆங்கில ஆசிரியரான **ஸர் வால்ட்டர் ஸ்காட்** என்னும் அறிஞர் எமர்சனைப்போலவே நகைமுகத்துடன் காணப்பட்டனராம். அவர் தம்மைப் போலவே மலர்ந்த முகத்துடன் இருக்குமாறு தம் நண்பர்க்கு அறிவுறுத்துவாராம். "ஸ்காட் ஒரு சுக புருஷர்" என்று அவர் நண்பர்கள் கூறுவது வழக்கம். **கிராம்**வெல் என்பவரும் ஸ்காட்டைப் போலவே, எத்தகைய துன்ப நிலையிலும் மகிழ்ச்சியோடிருந்தார் என்று வரலாற்றாசிரியர்கள் குறித்துள்ளனர்.

5. இதுகாறும் கூறப்பெற்ற உண்மைகளை நோக்கச் சிரிப்பின் சிறப்பு விளக்கமாகும்; அதன் தேவையும் நன்கு விளங்கும். அஃது உடம்பிற்கும் உள்ளத்திற்கும் நலனைத் தருகின்றதாதலின், அதனை மேற்கொள்ளுதல் நமது கடமையாகும். துன்பத்தைத் துடைக்கும் ஆற்றலும் அதற்குண்டு என்பதைத் திருவள்ளுவர்,

> "இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
> அடுத்தூர்வ தஃதொப்ப தில்"

என்னும் குறளாற் குறித்தனர்.

பயிற்சி

I. கீழ் வருவனபற்றி விளக்கக் கட்டுரைகள் வரைக :—

1. மலையும் அதன் பயன்களும்
2. கடலின் பயன்கள்
3. கண்காட்சிகளைப் பார்ப்பதன் பயன்கள்
4. ஆடை எவ்வாறு செய்யப்படுகிறது?
5. நோன்பும் அதன் பயன்களும்
6. மின்சாரமும் அதன் பயன்களும்
7. தொழிற் கல்வியின் சிறப்பு
8. உண்மை பேசுதல்

II. கீழ் வருவனபற்றி வருணனைக் கட்டுரைகள் வரைக :—

(1) கடற்கரை (2) மலைக்காட்சி (3) நீ பார்த்த ஓர் ஊர் அல்லது நல்ல இடம். (4) நீ பார்த்த ஒரு திருவிழா (5) உனது பள்ளிக் கட்டடமும் விளையாட்டிடமும் தோட்டமும் (6) நீ படித்த ஒரு போரைப்பற்றிய வருணனை.

V. கடிதங்கள்

1. கூட்டத்திற்குத் தலைமை தாங்க வேண்டுதல்

முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி,
சென்னை, 20-9-1950.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கட்கு,
வணக்கம்.

பெரியீர்,

தங்கள் நூல்கள் பலவற்றை எங்கள் பள்ளி நூல் நிலையத்திற் கண்டதுமுதல், தங்களைக் கண்டு அறிவுரை பெறவேண்டும் என்று எங்கள் பள்ளி மாணவர் விரும்புகின்றனர். ஆதலின் நாளை வெள்ளியன்று மாலை 4 மணியளவில் நடைபெற இருக்கும் எங்கள் தமிழ்க் கழகத் தொடக்க விழாவிற்குத் தாங்கள் தலைமை தாங்கி அறிவுரை வழங்க வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
ச. கமலக்கண்ணன்,
மாணவர் தமிழ்க் கழகச் செயலாளன்.

தமிழ்ப் பெரியார்
திரு. வி. க. அவர்கள்,
சாது அச்சுக்கூடம்,
கணபதி முதலியார் தெரு,
இராயப்பேட்டை, சென்னை.

2. முதியோர் கல்வி நிலையத்தைத் திறந்துவைக்க வேண்டுகோள்

10, வள்ளுவர் தெரு, இராயபுரம்,
சென்னை, 10–10–1950.

சென்னை நகராண்மைக் கழகக் கல்வியலுவலர்
அவர்கட்கு, வணக்கம்.

ஐயா,

சென்னை இராயபுரம் பாக்கியம்மாள் பாடசாலையில் முதியோர் இரவில் படிப்பதற்காக ஒரு கல்வி நிலையத்தைத் திறந்து பணியாற்ற விரும்புகிறோம்; தாங்கள் வந்து அதனைத் திறந்து வைக்க வேண்டுகிறோம். வரும் சனிக்கிழமை மாலை 6 மணியளவில் வந்து, அந்நிலையத்தைத் திறந்து வைத்து, நல்லுரை வழங்க வேண்டுகிறோம். தங்கள் அன்புள்ள மறு மொழியை ஆவலுடன் எதிர் பார்க்கும்

ச. மயிலைநாதன்,
செயலாளன்.

திரு. சுந்தரவடிவேலர் அவர்கள், எம். ஏ., எல். டி.
சென்னை நகராண்மைக் கழகக் கல்வியலுவலர்,
சென்னை.

3. குறித்தபடி வராமைக்கு வருத்தம். தெரிவித்தல்

‘ கம்பர் இல்லம் ’
15, நக்கீரர் தெரு,
நுங்கம்பாக்கம், சென்னை.
14-10-1950

அன்புள்ள ஐயா,

நலம். எனது முன் கடிதத்தில் உங்கள் விருப்பப்படி சனிக்கிழமை மாலை வந்து முதியோர் கல்வி நிலயத்தைத் திறந்துவைப்பதாக ஒப்புக்கொண்டேன். எதிர்பாரா விதமாக யான் நாளை வெளியூருக்குச் செல்லவேண்டி யிருப்பதால், குறித்த நாளன்று வந்து பணியாற்ற இயலாதவனாக இருக்கிறேன் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் தக்கார் ஒருவரைக் கொண்டு அப்பணியை நிறைவேற்றிக்கொள்க. எதிர்பாராது நேர்ந்த மாறுதலுக்குப் பொறுத்தருள்க.

இங்ஙனம் :
தங்கள் அன்புக்குரிய
சுந்தரவடிவேல்

திருவாளர்
ச. மயிலைநாதன் அவர்கள்,
10, வள்ளுவர் தெரு,
இராயபுரம், சென்னை.

4. மண்டபம் பயன்படுத்த இசைவு வேண்டுதல்

15, இளங்கோ தெரு,
திருமயிலை, சென்னை.
20-10-1950.

சென்னைத் தமிழ் இளைஞர் சங்கச் செயலாளர்
அவர்கட்கு,

ஐயா,

சென்னை, முத்தியாலுப் பேட்டைத் தமிழ் இளைஞர் சங்க ஆண்டு விழாவினைப் பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் நாளை ஞாயிறு மாலை 4 மணியளவில் தங்கள் சங்க மண்டபத்திற் கொண்டாட விரும்புகிறோம்; மண்டபத்திற்குரிய வாடகை பிறசெலவுகள் ஆகியவற்றைக் செலுத்த இசைகின்றோம்; தங்கள் இசைவை வேண்டுகிறோம். அன்பு கூர்ந்து இசைவு பற்றிய மறுமொழியை விடுத்தருள்க.

இங்ஙனம் :
தங்கள் அன்புள்ள,
க. அன்பழகன்
செயலாளன்.

செயலாளர் அவர்கள்,
சென்னைத் தமிழ் இளைஞர் சங்கம்,
30, அண்ணுப்பிள்ளை தெரு, சென்னை 1.

5. சேரித் தொண்டு

20, தம்பு செட்டித் தெரு,
சென்னை 1.
20-10-1950.

சென்னைப் பொதுநலத் தொண்டர் கழகச்
செயலாளார் அவர்கட்கு,

ஐயா,

உங்கள் தொண்டர் கழகம் சென்னையின் சுற்றுப்புறச் சேரிகட்குச் சென்று தெருக்களைத் தூய்மை செய்தல், உடல்நல வழிகளைக் கற்பித்தல், முதியோருக்குப் பாடங்களைக் கற்பித்தல், மரங்களை நடுதல் முதலிய நற்பணிகளைச் செய்கிறது என்பதைக் கேள்விப்பட்டோம். மயிலை மாணவர் கழகத்தாராகிய நாங்களும் அத்தொண்டுகளிற் பழக விரும்புகிறோம். நாளை ஞாயிறன்று காலை 7 மணிக்கு மயிலாப்பூரை அடுத்த சேரியில் நாங்கள் ஷை தொண்டுகளைத் தொடங்கும்பொழுது, நீங்கள் உடனிருந்து வழிகாட்டும்படி வேண்டுகிறோம். தங்கள் அன்புள்ள மறுமொழியை எதிர்நோக்குகிறோம்.

இங்ஙனம்:
தங்கள் அன்புள்ள,
மா. இளஞ்செழியன்
மயிலை-மாணவர் கழகச் செயலாளன்.

செயலாளர் அவர்கள்,
சென்னைப் பொதுநலத் தொண்டர் கழகம்,
20, எழும்பூர்ப் பெரிய சாலை,
சென்னை.

6. பொதுக்கூட்ட அழைப்பிதழ்

மாணவர் மன்றப் பொதுக்கூட்டம்

பெத்துநாய்க்கன் பேட்டை, சென்னை.

அன்புடையீர்,

நாளை ஞாயிறன்று (10-10-1950) மாலை 4 மணிக்கு எங்கள் மன்றத்தின் சார்பில், சென்னைத் தொண்டை மண்டலத் துளுவ வேளாளர் உயர் நிலைப் பள்ளி மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். தமிழ்ப் பேராசிரியர் **திரு. ச. ஆறுமுக முதலியார்** அவர்கள் எம். ஏ., பி. ஓ. எல்., எல். டி. அவர்கள் தலைமை தாங்குவார்கள். சென்னை விவேகானந்தர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் **திரு. மா. இராசமாணிக்கம்** அவர்கள் எம். ஓ. எல்., எல். டி. " தமிழர் ஆக்க வேலைகள் " என்பதுபற்றிப் பேசுவார்கள். தமிழர் அனைவரும் வந்து கேட்டுப் பயன் பெறுமாறு வேண்டுகிறோம். (கூட்டத்தில் ஒலி பெருக்கி உண்டு).

அலுவலகம் 15,
கம்பர் தெரு,
பெத்துநாய்க்கன்பேட்டை,
சென்னை-1.

இங்ஙனம் :
மாணவர் மன்றத்தார்.

7. பொதுக்கூட்டம் தள்ளிவைக்கும் அறிவிப்பு

மாணவர் மன்றப் பொதுக்கூட்டம்
பெத்துநாய்க்கன் பேட்டை, சென்னை.

அன்புடையீர்,

நாளை ஞாயிறன்று (10–10–1950) மாலை 4 மணிக்கு ஷ மன்றத்தின் சார்பில் சென்னைத் தொண்டைமண்டலத் துளுவ வேளாளர் உயர் நிலைப்பள்ளி மண்டபத்திற் கூடஇருந்த பொதுக் கூட்டம் அடுத்த ஞாயிறு (17–10–1950) மாலை நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். இங்ஙனம் கூட்டத்தைத் தள்ளிவைக்கக் காரணம், அதற்குத் தலைமை தாங்க இசைந்திருந்த பேராசிரியர் திரு. ச. ஆறுமுக முதலியார் அவர்கள் திடீரென்று கல்கத்தா செல்ல நேர்ந்ததேயாகும். ஆதலின், அடுத்த ஞாயிறன்று நடைபெற இருக்கும் பொதுக்கூட்டத்திற்கு வருமாறு தமிழ்ப் பெருமக்களை வேண்டுகிறோம்.

அலுவலகம் 15,
கம்பர் தெரு,
பெத்துநாய்க்கன்பேட்டை,
சென்னை 1.

இங்ஙனம் :
மாணவர் மன்றத்தார்.

பயிற்சி

1. உங்கள் பள்ளிக்கூடத் தமிழ்ச் சங்கத் தொடக்கவிழாக் கூட்டத்திற்குத் தலைமை தாங்க வருமாறு ஒரு தமிழ்ப் புலவருக்குக் கடிதம் வரைக.

2. உங்கள் தெருவில் புதிய நூல் நிலையம் ஒன்றைத் திறந்துவைக்கும்படி பெரியார் ஒருவர்க்குக் கடிதம் எழுதுக.

3. உங்கள் மாணவர் மன்றத்தில் "உடல் நலவழிகள்" என்பதுபற்றிப் பேசுமாறு மாவட்ட உடல்நல அலுவலர்க்கு வேண்டுகோட் கடிதம் வரைக.

4. உன் நண்பன் வீட்டுத் திருமணத்திற்குச் செல்ல முடியாமைக்குரிய காரணங்களைக் காட்டிப் பொறுத்தருளும்படி வேண்டி ஒரு கடிதம் எழுதுக.

5. உங்கள் கழக ஆண்டுவிழாவை நடத்த இடம் தேவை என்பதைக் குறிப்பிட்டு, நகராண்மைக் கழகத்தார் கட்டியுள்ள நகர மண்டபத்தை விடுமாறு வேண்டி, நகராண்மைக் கழக ஆணையாளர்க்கு ஒரு கடிதம் வரைக.

6. சேரிகளுக்கு எவ்வெவ் வழிகளில் தொண்டு செய்யலாம் என்பதைக் குறிப்பிட்டு, நகராண்மைக் கழகத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதுக.

7. மாணவர் கழகத்தாராகிய நீங்கள் சேரிகளிற் செய்ய விரும்பும் தொண்டுகளைக் குறிப்பிட்டுப் பொதுநலத் தொண்டர் கழகத்தார் உதவியை வேண்டி ஒரு கடிதம் வரைக.

8. உங்கள் மாணவர் மன்ற ஆண்டுவிழா அழைப்பு ஒன்று தயாரித்துக் காட்டுக.

9. குறித்த நாளில் விழா நடைபெறுமைக்குரிய காரணங்களைக் காட்டி, விழா நடைபெறும் நாளையும் குறித்து, அறிவிப்புக் கடிதம் ஒன்று வரைக.

VI. ஒரு நிகழ்ச்சியில் தொடர்புடைய பலர் அதுபற்றிக் கூறும் விவரங்கள்

மோட்டார் வண்டி இடையூறு

1950-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15-ஆம் நாள் மாலை 6 மணியளவில் வண்டலூருக்கு அருகில் நடந்த **மோட்டார் இடையூறு :**

1. மோட்டார் ஓட்டி கூறியது

நான் ஜூலைத் திங்கள் 15-ஆம் நாள் சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்று மாலை 6 மணியளவில் வண்டலூர் சிற்றுண்டிச் சாலைக்கு எதிரில் வண்டியை நிறுத்தினேன். நானும் வண்டியில் செல்வோரும் 10 நிமிடங்கட்குள் சிற்றுண்டி உட்கொண்டோம். பின்னர் வண்டி புறப்பட்டது. வண்டி அரைக்கல் தொலைவு செல்லுகையில், எதிரில் ஒரு வைக்கோல் வண்டி வந்துகொண்டிருந்தது. அதற்குப் பின்புறம் மணிமங்கலத்திலிருந்து ஒரு மோட்டார் மிக்க வேகமாக வந்துகொண்டிருந்தது. நான் மாட்டுவண்டியை விட்டுச் சிறிது ஓரமாகச் செல்ல விரும்பினேன். அதே சமயம் மணிமங்கலம் வண்டி மாட்டுவண்டிக்கு அப்புறம் செல்ல முனைந்தது. அச்சமயம் திருப்போரூர்ப் பாதை நெடுஞ்சாலையில் சேரும் அந்த இடத்தண்டை, திருப்போரூர் மோட்டார் வண்டி ஒன்று எவ்வித ஓசையும் இன்றி வந்ததால் மணிமங்கலம் மோட்டார் வண்டியுடன் மோதிக்கொண்டது. இரண்டு மோட்டார் ஓட்டிகளுக்கும் காயம் ஏற்பட்டது. ஆனால் வண்டியிற் சென்ற ஒருவரும் காயப்படவில்லை. மோட்டார் வண்டிகளுக்குச்

சிறிது சேதம் ஏற்பட்டது. இரண்டு வண்டிகளும் மோதிக்கொண்டபோது உண்டான ஓசையில், வைக்கோல் வண்டியில் பூட்டப்பட்டிருந்த மாடுகள் பயந்து மருண்டு வண்டியை இழுத்துச் சென்று சாலை ஓரத்திலிருக்கும் பள்ளத்தில் தள்ளிவிட்டன. மாடுகட்கும் வண்டிக்காரனுக்கும் காயம் ஏற்பட்டன.

2. அதே இடையூற்றைப்பற்றி மணிமங்கலம் மோட்டார் ஓட்டி கூறியது

நான் ஜுலை மாதம் 15-ஆம் நாள் மாலை மணிமங்கலத்திலிருந்து புறப்பட்டு 6 மணியளவில் வண்டலூருக்கருகில் வந்துகொண்டிருந்தேன். எனக்கு எதிரில் வைக்கோல்வண்டி ஒன்று போய்க் கொண்டிருந்தது; அதற்கு எதிரில் சென்னையிலிருந்து மோட்டார் வண்டி ஒன்று வந்துகொண்டிருந்தது. அந்த மோட்டார் ஓட்டி வைக்கோல் வண்டிக்கு இடப்புறமாக வண்டியைத் திருப்பினர். நான் அவ்வைக்கோல் வண்டிக்கு வலப்புறமாக என் வண்டியைத் திருப்பினேன். அவ்விடம் திருப்போரூர் பாதை வந்து நெடுஞ் சாலையிற் கூடும் இடமாக ஒத்துக்கொண்டது. முன்னறிவிப்பு ஓசை இன்றித் திருப்போரூர் பஸ் வந்து நெடுஞ் சாலையில் நுழைந்ததால்—யாரும் எதிர்பாராத முறையில்—இரண்டு வண்டிகளும் தாக்குண்டன. எனக்குக் காயங்கள் ஏற்பட்டன. எனது மோட்டாருக்கு வலப்பக்கம் சிறிது சேதம் ஏற்பட்டது. திருப்போரூர் பஸ் வேகமாக வந்து தாக்கியிருந்தால் சேதம் மிகுதியாக இருந்திருக்கும். திருப்போரூர் வண்டியின் முன்புறக் கண்ணாடி உடைந்து சிதறிய

தால், அந்த வண்டி ஓட்டிக்குச் சில காயங்கள் ஏற்பட்டன. முன்புறம் உட்கார்ந்திருந்தவர்கள் இருவர்க்கும் காயங்கள் ஏற்பட்டன. ஆனால் வருந்தத்தக்க இடையூறு ஒன்றும் இல்லை.

பயிற்சி

1. இவ்விடையூற்றைப்பற்றித் திருப்போரூர் மோட்டார் ஓட்டி கூறுவதுபோலக் கூறுக.

2. இதுபற்றி வைக்கோல் வண்டிக்காரன் கூறுவது போலக் கூறுக.

3. இதைப் பார்த்த வேறொரு ஆள் சொல்வதைப்போலச் சொல்லுக.

4. ஒரு ஆண்டு விழாக் கூட்டம் நடைபெற்றதுபற்றிச் சங்கச் செயலாளர், சொற்பொழிவாளர், விழாத் தலைவர் ஆகிய மூவரும் தனித்தனியே கூறுவதுபோலக் கூறுக.

5. ஒரு கோயிற் குளத்தில் ஒரு சிறுவன் குளிக்கப் போய்ப் படிக்கட்டு வழுக்கியதால் தண்ணீரில் விழுந்துவிட்டான். சாரணன் ஒருவன் குளத்தில் குதித்து அவனைத் தூக்கிக் கரையில் விட்டான். அந்நிகழ்ச்சிபற்றிச் சாரணன், சிறுவன் பெற்றோர், நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் தனித் தனியே கூறுவதுபோலக் கூறுக.

6. டிராம் வண்டியும் மோட்டார் வண்டியும் மோதிக் கொண்டன. இதைப்பற்றி மோட்டார் ஓட்டியும், டிராம் ஓட்டியும், அச்சமயத்தில் அங்கிருந்த நகரப் பாதுகாவற் சேவகனும் தனித்தனியே கூறுவதுபோலக் கூறுக.

7. மிதிவண்டி (சைக்கிள்)மீது வந்த மாணவன் ஒரு சிறுவன்மீது வண்டியை ஏற்றிவிட்டான். இந்த நிகழ்ச்சியை மாணவன் கூறுவதுபோலவும், காயம்பட்ட சிறுவன் கூறுவது போலவும் கூறுக.

8. திருவிழாவுக்குச் சென்று திரும்பிய மக்களை ஏற்றிக் கொண்டு வந்த இரட்டை மாட்டுவண்டி ஒன்று எதிரில் வந்த மோட்டாரை நோக்கி ஒதுங்கப் போய்க் குடைசாய்ந்துவிட்டது. இதுபற்றி மோட்டார் ஓட்டி, வண்டிக்காரன், இதை நேரிற் கண்ட ஒருவர் ஆக மூவரும் தனித்தனியே கூறுவதுபோலக் கூறுக.

VII. (1) படித்த செய்திகளைப்பற்றிக் குறிப்புகள் தயாரித்தலும், அவற்றைக் கொண்டு செய்திகளைத் திரும்பக் கூறுதலும்

நீங்கள் உங்கள் பாடநூலில் ஒரு பாடத்தைப் படித்தவுடன் அதனை எத்தனைப் பத்திகளில் எழுதலாம் என்பதை முடிவு செய்க; பின்னர் ஒவ்வொரு பத்திக்கும் உரிய குறிப்புகளைக் குறிந்துக்கொள்க; பிறகு அவற்றின் உதவிகொண்டு பாடச் செய்தியைக் கூறிப் பழகுக; கூறியபின், எழுதுதல் சாலச் சிறந்தது. இம்முறையிற் பழகுதல், சொல்லாற்றலையும் எழுத்தாற்றலையும் நன்கு வளர்க்கும். **கமலம்** என்ற மாணவி **வீரத்தாய்** என்ற பாடத்தைப் படித்துக் கீழ்க்காணும் குறிப்புகளைத் தயாரித்தாள்.

வீரத்தாய்

குறிப்புகள்

1. பாண்டியநாடு—பாண்டியன் நெடுஞ்செழியன்—செங்கோல் வேந்தன்—குடிகள் அன்பு—பாராட்டு.

2. சோழன் பாண்டியன்மீது படையெடுப்பு—பாண்டியன் சேனைகள் புறப்படல்—வீட்டுக்கொரு வீரன் கேட்டல்.

3. வீரத்தாய்—ஒரே மகன்—தாயின் நாட்டுப்பற்றை உணர்த்தும் வீரப்பேச்சு—மகனை ஆசிகூறி அனுப்புதல்.

4. மகனது கடும்போர்—முடிவில் மார்பிற் காயம்பட்டு இறத்தல்.

5. மகன் முதுகிற் காயம்பட்டு இறந்தான் என்று ஒருவன் தவருகத் தாயிடம் கூறல்—தாயின் சினம்—வஞ்சினம் கூறித் தாய் போர்க்களம் செல்லல்—உண்மையை உணர்ந்து மகனைப் பாராட்டல்.

குறிப்புகளைக் கொண்டு செய்தியைக் கூறுதல்

1. தமிழகத்தின் தென்கோடியில் இருப்பது பாண்டிய நாடு. அதனை நீண்ட காலமாகப் பாண்டியர் என்ற அரசமரபினர் ஆண்டு வந்தனர். அவருள் பாண்டியன் நெடுஞ்செழியன் என்பவன் ஒருவன். அவன் செங்கோலான்; தண்ணளியான்; அழகிற் சிறந்தவன்; சிறந்த கல்விமான். அவன் தன் குடிகளைக் கண்ணெனக் காத்து வந்தான். குடிகள் அவனைத் தங்கள் பாதுகாப்பாளன் எனப் பாராட்டி இன்புற்று வாழ்ந்தன.

2. ஒரு முறை சோழன் பாண்டிய நாட்டைக் கவர எண்ணி, அந்நாட்டின்மீது படையெடுத்தான். "மண்ணுசை கொண்டு மாற்ருன்போல வரும் சோழனைப் போரில் மண்கவ்வச் செய்ய வேண்டும்; வீரர்களே, புறப்படுங்கள்," என்று பாண்டியன் விழிகளில் தீப்பொறி பறக்கப் பேசினுன். பாண்டிய நாட்டு வீரர்கள் வீராவேசம் கொண்டு போர்க்களம் நோக்கி விரைந்தனர். "பகைவனை அடக்க வீட்டுக்கொரு வீரன் வேண்டும்," என்ற செய்தி பாண்டிய நாட்டில் பறை யறைந்து அறிவிக்கப்பட்டது.

3. பாண்டி நாடு மறவர்கட்குப் பெயர் போனது. அக்குடியைச் சேர்ந்த முதிய தாய் ஒருத்திக்கு ஒரே புதல்வன் இருந்தான். அத்தாய்

அரசன் அறிவிப்பைக் கேட்டதும் துடித்தெழுந் தாள்; தன் மகனை நோக்கி, "மறக்குடி மகனே, பாண்டிய நாட்டைப் பல காலமாகக் காத்துவரு வது நமது மறவர் குடியாகும். 'மறவர்' என் பதற்கு 'வீரர்' என்பது பொருள். நீ வீரர் மரபில் வந்தவன். உன் தந்தையார் முன்னர் நடந்த பாண்டியர்—சேரர் போரில் மடிந்தார். வீரத்தை விளக்குவதே நமது குடியின் இலக்கணம். நமது அரசனே நமது உயிர் போன்றவன்; செங் கோலன். அவனுக்குத் தோல்வி எனின், அது நமக்குத் தோல்வியே. பகைவன் கையில் அகப் பட்டு வாழ்வதைவிட நாம் போரிட்டிறத்தல் நல்ல தல்லவா? மகனே, போர்க்கோலம் கொள்; இந்த வேலையும் வாளையும் ஏந்திச் செல்; நாட்டுக்காகப் போராடு; வெற்றி பெறின், மீண்டுவா; இன்றேல், மார்பிற் காயம் பட்டு மடி; முதுகில்மட்டும் காயப் பட்டு வராதே. உனக்கு என் வாழ்த்து உரியது," என்று வீரவுணர்ச்சி வெளிப்படப் பேசினள். புலிக் குப் பிறந்தது பூனை ஆகுமா? வீரன் தாயைப் பணிந்து போர்க்களம் சென்றான்.

4. அவ்வீரமகன் வாளெறிந்து வீரர் பலரைக் கொன்றான்; வேலெறிந்து வீரர் பலரை வீழ்த்தி னன்; பம்பரம்போலச் சுழன்று சுழன்று பகை வரை நாசப்படுத்தினன். பாண்டியன் அம்மறவ னது போர்த்திறத்தைப் பாராட்டினன். எனினும், பாவம்! சேய்மையில் இருந்து வீசப்பட்ட விஷம் பூசப்பெற்ற ஈட்டி ஒன்று அவன் மார்பிற் பாய, வீர மைந்தன் விண்ணுலகுற்றான்.

5. பாண்டியன் பாராட்டைக் கேட்டுப் பொறுமையுற்ற ஒரு கீழ்மகன் ஊர் நோக்கி ஓடி

ஞன்; வீரனது தாயைக் கண்டு, "நின் மகன் முதுகிற் காயம்பட்டு இறந்தான்," என்று கூறினுன். அது கேட்ட முதியாள் அடங்காச் சினம் கொண்டாள்; "என் மகன் வீரனுக்குப் பிறந்தவன். அவன் இறந்ததுபற்றி நான் கவலையுறவில்லை. அவன் மார்பிற் புண்பட்டு இறக்கவேண்டும் என்பதே எனது அவா. நான் போர்க்களம் சென்று உண்மையை அறிவேன். அவன் முதுகிற் புண்பட்டு இறந்திருப்பின், அவனுக்குப் பால் உதவிய எனது மார்பை அறுத்தெறிவேன்," என்று வஞ்சினம் கூறி, வாளேந்திப் போர்க்களம் புகுந்தாள்; வீரர் சிலர் காட்டத் தன் மகனது உயிரற்ற உடலைப் புரட்டிப் பார்த்தாள்; அவன் மார்பில் ஈட்டி பாயப்பெற்று இறந்தான் என்பதை அறிந்தாள். ஆ! அப்பொழுது அவளது முகம்—சுருக்கங்கள் விழுந்த முதிய முகம், மகிழ்ச்சியால், அன்று மலர்ந்த தாமரை மலரெனக் காட்சி அளித்தது. "இவனே என் வீரமகன்; இவனைப் பெற்றதால் நான் பெருமை யடைந்தேன்," என்று மகிழ்ந்து கூறினுள்.

(2) கேட்ட செய்திகளைப்பற்றிக் குறிப்புகள் தயாரித்தலும், அவற்றைக் கொண்டு செய்திகளைத் திரும்பக் கூறுதலும்

கேட்ட கதை

குறிப்புகள்

1. கொலம்பஸ் இத்தாலி நாட்டினர்—புதிய நாடுகளைக் காண அவா—மாலுமிப் பயிற்சி—பல

கேட்ட செய்திகளைப்பற்றிக் கூறுதல்

ரிடம் உதவி வேண்டல்—ஸ்பெயின் நாட்டரச் இஸபெல்லாவிடம் உதவி.

2. 1412-இல் மூன்று கப்பல்கள் புறப்படல்- அட்லாண்டிக் கடலில் நீண்ட பயணம்—பிரயாணி கள் கவலையும் நடுக்கமும்—கொலம்பஸ் ஆறுதல் கூறல்.

3. ஒருநாளிரவு ஓரிடத்தில் வெளிச்சம் காணல்—அண்மையில் தரை இருக்கிறது என்று எண்ணி மகிழ்தல்—பொழுது விடிதல்—காலையில் நிலப் பரப்பைக் காணல்—அனைவரும் கப்பலைவிட் டுக் கரையேறுதல்—கொலம்பஸ் கடவுளுக்கு நன்றி கூறல்.

இக்குறிப்புகள் கொண்டு கதை கூறல்

1. கொலம்பஸ் இத்தாலிநாட்டு ஜினேவா நகரத்தைச் சேர்ந்தவர். அவர் கடல் கடந்து சென்று புதிய நாடுகளைப் பார்க்க விரும்பினர்; அதற்கென்று கப்பலோட்டும் தொழிலிலும் பயிற்சி பெற்றார். பின்னர் அவர் தமது கருத்தைச் செல் வர் பலரிடம் கூறிப் பொருளுதவி வேண்டினர். அவர் முயற்சியை ஆதரிப்பாரில்லை. அவர் இறுதி யில் ஸ்பெயின் நாட்டரசியாகிய இஸபெல்லா என் பவரது உதவியைப் பெற்றார்:

2. 1412-ஆம் ஆண்டில் கொலம்பஸ் மூன்று கப்பல்களுடன் பெருங்கடலில் பிரயாணத்தைத் துவக்கினர். அவர் இரண்டு திங்கள்களாகப் பெருங்கடலில் மேற்கு நோக்கிச் சென்றுகொண் டிருந்தனர். அதுவரையில் இடையில் ஒரு சிறு தீவேனும் காணப்படவில்லை. அவருடன் சென்ற வர்கள் தமக்கு என்ன நேருமோ என்று அஞ்சினர்.

லம்பஸ் அவர்களுக்குப் பலவாறு ஆறுதல் றிக்கொண்டே சென்றார்.

3. நாள்தோறும் கொலம்பஸும் பிறரும் கப்பல் மேல்தட்டிலிருந்தபடி தரை தெரிகிறதா என்று நெடுந்தூரம் பார்த்துக்கொண்டே இருந்தனர். ஒரு நாளிரவு மணி பத்தாயிற்று. அப்பொழுது நெடுந்தூரத்தில் வெளிச்சம் தெரிந்தது. கொலம்பஸும் பிறரும் அண்மையில் தரை இருக்கிறது என்று எண்ணி மகிழ்ந்தனர். பொழுது புலர்ந்தது. அனைவரும் நிலப்பரப்பைக் கண்டனர்; மகிழ்வுற்றனர் கப்பலைவிட்டுக் கரையேறினர். கொலம்பஸ் 'புதிய நாடுகள் காணவேண்டும்' என்ற தம் எண்ணத்தை நிறைவேற்றிய கடவுளுக்கு நன்றி கூறினர்.

பயிற்சி

I. கீழ்க்கண்டவைபற்றிக் குறிப்புகளைத் தயார் செய்க :—

1. நெற்பயிர்.
2. ஒரு கைத்தொழில்.
3. கூட்டுறவு இயக்கம்.
4. செல்வ நிலையங்கள் (பாங்குகள்)
5. நீ கண்டுள்ள ஒரு சிற்பக் காட்சி அல்லது கோட்டை.
6. பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஸான் (ஏதேனும் ஒன்று).
7. நீ அறிந்துள்ள ஆறு.
8. நீ அறிந்துள்ள ஒரு மலை.
9. ஒரு நீர்வீழ்ச்சி.

II. கீழ்க்கண்டவைபற்றிக் குறிப்புகள் தயாரித்துக் கட்டுரை வரைக.

1. ஒரு பெரியார் வரலாறு.
2. ஒரு தமிழ்ப் புலவர் வரலாறு.
3. இசைக் கல்வியின் சிறப்பு.
4. வானொலியின் கல்விபற்றிய பயன்கள்.
5. மாணவர் செய்யத்தகும் பொதுநலத் தொண்டுகள்.
6. தாய்மொழித் தொண்டு.

SENTHAMIL

ILAKKANAMUM KATTURA

BOOK II FOR FORM II

BY

Pulavar S. ARUMUGA MUDALIA

M.A., B.O.L., L.T.

THE NATIONAL PUBLISHING

6, KONDI CHETTY STREET, MADRAS-1

COPYRIGHT] [PRICE Rs. 0-14-0